கழக வெளியீடு: கசுக

# கலைபயில் கட்டுரைகள்

இவை

**செந்தமிழ்ச் செல்வி**

என்னும்

*திங்கள் வெளியீட்டி னின்றும்*

தொகுக்கப்பெற்றன.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி, :: சென்னை-1.

First Edition: 1934;
Reprints: 1940; Nov., 1956; March, 1957.

# KALAI PAYIL KATTURAIGAL

[Copy Right]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

***Head Office*:**

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 800.

# பதிப்புரை

சிறந்து செழிக்கும் தமிழ்மொழியிற் பரந்துபட்ட பல பொருள்களையுங் குறித்துக், கற்றோர் மற்றோர் யாவர் கருத்தையும், பிணிக்கத்தக்க அழகிய உரை நடையில், கட்டுரைகளை வெளியிட்டு வருவதே நோக்கமாகக் கொண்டு "செந்தமிழ்ச் செல்வி" யென்னும் நங் கழகத் திங்கள் வெளியீடு கடந்த பதினெட்டாண்டுகளாகப் பணியாற்றி வருகிறது. தமிழ்நாட்டிற் கட்டுரை யெழுதும் வன்மையில் முன்னணியில் நிற்பவர்களென அவ்வப்போது மதித்துப் பாராட்டப்பட்டு வரும் புலவர்களானும் ஆராய்ச்சியாளர்களானும் எழுதப்படும் கட்டுரைகளைக்கொண்டு மிளிர்வது நஞ் "செல்வி" யின் சிறப்பியல்பாகும். அறிவியற்கலை, இலக்கியக்கலை, மொழிக்கலை, கவின்கலை, உடல்நலக்கலை என்பன போன்ற "ஆயகலைகள் அறுபத்து நான்கி" னுக்கு முரிய பலதுறைகளையும் பற்றி வரும் ஒப்பரிய உயர்தரக் கட்டுரைகளைத் தூய எளிய தமிழ் நடையிற் கொண்டிலகி மொழித்திறனையும், கலைத்திறனையும், உரைநடைத்திறனையும் ஒருங்கே விளக்கிக் காட்டுவதே இவ் வெளியீட்டின் குறிக்கோள்.

இத்தகைச் சிறப்புவாய்ந்த "செந்தமிழ்ச் செல்வி" யில் வெளிவந்துள்ள கட்டுரைகளிலிருந்து, கலை நுட்பங்களையும் மொழித் திட்பத்தினையும், உரைநடைச் செழுமையையும் நன்கு தெரிப்பனவாய சில கட்டுரைகளைப் பொறுக்கிச் சேர்த்துக் "கலைபயில் கட்டுரைகள்"

எனப் பெயரிய இவ் அரிய நூலை வெளியிட்டுள்ளோம். இந்நூலின் கண்ணுள்ள கட்டுரைகளைப் படிப்போர்க்கு, எக் கருத்தையும் தமிழ்மொழியிலேயே எளிதில் வெளியிடக் கூடுமென்பதூஉம், விரிப்பு, தொகுப்பு, புனைவு என்பன போன்ற உரைநடை வேறுபாட்டுச் சிறப்புக்கள் யாவற்றையுந் தமிழிற் காணக் கூடுமென்பதூஉம், பிறமொழிகளிற் காணப்படும் சிறந்த பொருள்களைத் தமிழில் வளம்பட மொழி பெயர்த் தமைத்தல் இயலுமென்பதூஉம் இனிது புலனும். தமிழ்க் கலைபயில விரும்புவார்க்கும், கலாசாலை மாணவர்க்கும் இந்நூல் பெரும்பயன் அளிக்கும் என்பது திண்ணம்.

இதன்கண் அடங்கிய கட்டுரைகளை வெளியிடுவதற்கு உளங்கனிந் திணங்கிய அவ்வக் கட்டுரையாசிரியர்கட்குப் பெரிதும் நன்றி செலுத்துகின்றோம். இந் நூலை அச்சிடுகையிற் கட்டுரைகளை யெல்லாம் முறைப் படுத்திப் பிழைதிருத்தம் பார்த்துதவிய தருமபுர வாதீன வித்துவான், திருவாளர் கா. சு. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை, பி. ஏ. அவர்கட்கும் கடப்பாடுடையோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | திருக்காளத்திக் காட்சி<br>*திருமதி நீலாம்பிகை யம்மையார்* | 1 |
| உ. | தமிழின்பம்<br>*பண்டிதமணி - மு. கதிரேசன் செட்டியார், தமிழாசிரியர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்* | 8 |
| ௩. | பண்டைத் தமிழ்ச் சான்ருேரின் வானநூற் புலமை<br>*பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்* | 15 |
| ௪. | கதிரி<br>*காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.* | 24 |
| ரு. | கடன் கோடல்<br>*திரு. டி. எஸ். கந்தசாமி முதலியார், பி. ஏ.* | 31 |
| சா. | புறநானூறும் பழந்தமிழ்நாடும்<br>*திரு. இளவழகனுர்* | 36 |
| எ. | உயிரினங்களின் நிற வேறுபாடுகள்<br>*திருமதி ஜெ. குணமாணிக்கம், எம். ஏ., எல். டி.* | 47 |
| அ. | அலைகடலளித்த ஆரணங்கு<br>*காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.* | 59 |
| கூ. | கம்ப சித்திரம்<br>*மணி. திருநாவுக்கரசு முதலியார்* | 71 |
| க௦. | வள்ளுவரும் பல்லுயிரும்<br>*திரு. மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, பி. ஏ., எல். டி.* | 81 |

பக்கம்

கக. தமிழ்நாடு 92
*திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்*

கஉ. நாகரிகம் 103
*வித்துவான், திரு. ஞா. தேவநேசன்*

கஙு. மொழியும் மொழிபெயர்ப்பும் 112
*காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.*

கச. மெய்ப்பாட்டியல் 118
*திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.*

கரு. இந்திய ஐரோப்பியப் பெருங்குழு 125
*திரு. பா. வே. மாணிக்க நாயக்கர், பி. இ., அவர்களின் ஆங்கிலச் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு*

கசு. பாரி வள்ளல் 134
*திரு. வ. சுப்பையா பிள்ளை*

# கலைபயில் கட்டுரைகள்

## க. திருக்காளத்திக் காட்சி

[திருமதி. நீலாம்பிகை யம்மையார்]

உலக இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழுமாறும், இறைவனை வணங்குமாறும் திருக்காளத்திக்குச் சென்றோம். யாங்கள் விரும்பியபடி கோயிலுக்கண்மையிலுள்ள ஒரு சத்திரத்திற் றங்கினேம். மறுநாட்காலை ஏழு மணிக்கு ஒன்றன்மேல் ஒன்றாயும், தொடர்பாயும் உள்ள பல மலைகளைச் சென்று கண்டோம். அவற்றுள் ஒன்றின்மேற் போய், அம் மலைச் சூழலின் நடுவே காணப்பட்ட ஓர் அழகிய பள்ளத்தாக்கினைப் பார்த்து, அதில் இறங்கிப் போனேம். அப் பள்ளத்தாக்கின் அழகிய நிலப்பரப்பானது ஏறக் குறைய ஒருகல் சுற்றளவு உள்ளதாயிருந்தது. அவ் வழகிய நிலப்பகுதியைப் பாதுகாப்பதற்கு அமைத்து வைக்கப் பட்ட மதிற்சுற்றைப்போல அம் மலைச் சூழல்கள் தோன்றின. அப் பள்ளத்தாக்கின் நடுவே, அழகிய படித்துறைகளமைந்த ஒரு பெரிய குளமும், பழையநாளிலே அமைக்கப்பட்டதொன்றாய்க் காணப்பட்டது. அக் குளத்தின் தண்ணீர் பளிங்குபோல் தெளிந்திருந்தது. அதன் நீர் மட்டத்தில் அங்குமிங்கும் படர்ந்து மிளிரும் அழகிய தாமரை இலைகளின்மீது வெண்மையான கொக்குகள்

அமர்ந்துகொண்டு, தம்மை உணவுக்காக இரக்கமின்றிச் சுட்டுக்கொல்லும் கொடிய மாந்தர் அங்கு வருவதின்மையால், சிறிதும் அச்சமின்றி மகிழ்ந்திருந்தன. அக் குளத்தின் நடுவே பழமையாகக் கட்டப்பட்ட ஓரழகிய சிறு மண்டபம் இருந்தது. அதன்மேல் காட்டுப் பூஞ்செடிகள் மிக நெருங்கி வளர்ந்திருந்தமையும், அச் செடிகளிற் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த பலநிற மலர்களின் மேல் சிறு சிறு தேன்குருவிகள் சரேலெனப் பறந்து வந்து அப் பூக்களின் இனிய தேனைப் பருகிக்கொண்டிருந்தமையும் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. இன்னும், அம் மண்டபத்தின்மேல் விளிம்புகளிலுள்ள புதைகளில், சாம்பல் நிறம் வாய்ந்த புறுக்கள் கூட்டம் கூட்டமாய் இருந்தன. அப் புறுக்களிற் சில தாய்ப்புறுக்கள், தாம் பொரித்த குஞ்சுகளைப் பாதுகாக்கும்படி தத்தம் கூடுகளினருகே அச்சமின்றி வரிசை வரிசையாக இருந்து காத்துக்கொண்டிருந்தன. அப்போது, ஆண்புறுக்கள் வெளியே எங்கெங்கோ சென்று அலைந்து திரிந்து தம் உணவைச் சுருக்கி இரைதேடி, அவ் விரையை மிகவுங் கருத்தோடு அலகில் கௌவிக்கொண்டு விரைந்து வந்து, வாய் திறந்தபடியாய் எதிர்நோக்கும் தம் குழவிகட்குத் தந்து அவைகளின் பசியை ஆற்றின. அங்குள்ள கூடுகள் ஒன்றில் ஒரு தாய்ப் புறுவுக்குப் பல குஞ்சுகள் இருந்தன. அவைகள் பெரியனவாக இருந்தமையின் ஆண்புறு வெளியே சென்று கொண்டு வந்து தந்த உணவு அவைகட்குப் போதவில்லை; அதனாற் குஞ்சுகள் இரைச்சலிட, கூட்டினருகே காவலிருந்த தாய்ப் புறுவும் விரைந்து தன் கணவனோடு பறந்து செல்வதைக் கண்டு, யாங்கள் முதலில் வருத்தமுற்றோமாயினும், சிறிது நேரத்தில் அத் தாய்ப்புறுவும் இரையெடுத்துவந்து அவற்றின் வாயில் ஊட்டிப் பசி தணித்ததனைப் பார்த்து வியப்

யும் அடைந்தோம். அவ்வளவு பகுத்தறிவையும், அன்பையும் அப் பறவைகட்கும் தந்துதவிய எல்லாம்வல்ல இறைவனது அருட்பெருக்கத்தையும் இரக்கத்தையும் நினைந்து நினைந்து உருகினோம்!

இனி, அப்பெரிய குளத்தின் கரையில் நிறைந்து நின்ற மாமரங்களும், நாவல் மரங்களும், விளாமரங்களும் குளிர்ந்த நிழலைத் தந்தன. அந் நிழலிலிருந்து யாங்கள் சிறிது இளைப்பாறிக் கொண்டிருந்தபோது, ஓர் இனிய பறவைக் குரலோசையைக் கேட்டோம். அவ்வோசை எங்கிருந்து வருகின்றதென்பதை அறிய அங்குமிங்கும் மரங்களினூடே உற்று நோக்கினோம். அப்போது, யாங்கள் அமர்ந்திருந்த பாறையினருகே இருந்த மரத்தின் ஒரு சிறிய கிளையிலிருந்த ஒரு புள்ளிக் குயிலினது ஓசையே அதுவென்றறிந்து மகிழ்ந்தோம். பின், மாணிக்கவாசகப் பெருமான் குயிலினங்களைக் கூவிச் சிவபிரானைக் குழைந்து குழைந்து உருகிப் பாடிய குயிற்பத்தையும் பாடினோம்.

அதிற் சில பாக்கள்:

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வது வாய வொருத்தன்
மான்பழித் தாண்டமெல் நோக்கி மணாளனை நீவரக் கூவாய்.

இன்பந் தருவன் குயிலே யேழுல கும்முழு தாளி
அன்ப னமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்.

பிறகு, அங்கே எம் எதிரிலிருந்த அவ் வாவியின் நீரைப் பருகியபின், அக்குளத்தில் வெயிலின் ஒளியில் மினுமினுவென்று துள்ளித் துள்ளிப் பிறழ்ந்து ஓடும் கயல் மீன்களை ஒரு வேட்டுவப்பெண் கையாற் பிடிக்க முயல்

வதைக் கண்டோம். அவள் எவ்வளவோ முயன்றும், ஒருகால் அவை அவள் கையிலகப்பட்டும், பிறிதொருகால் உடம்பின் வழுவழுப்பினுல் அவள் கைகளினின்றும் வழுவி யும் ஓடின.

இக் காட்சிகளே நோக்கியபின் கீழேயுள்ள காளத்தி இறைவர்கோயிலே அடுத்துள்ள ஒரு மலேமுகட்டை அடைந்தபோது, அங்கே பரந்த ஒரு மேட்டு நிலத்தின் மேல், மிகப் பழைய காலத்தே, அதாவது இரண்டாயிர ஆண்டுகட்கு முன்னரே கட்டப்பட்ட ஒரு சிறு கோயி லும், அக் கோயிலில் இறைவன் ஒளிவடிவினது அடையாள மாக வைக்கப்பட்ட அருட்குறி (சிவலிங்கம்)யும் இருக்கக் கண்டோம். அவ் அருட்குறியைத் திருமுழுக் (அபிஷே கம்) காட்ட குருக்கள் அக்கோயிலுக்கு வருவதில்லே என்பதைப் பின்னர் அறிந்தோம். இதனே முன்னமே அறிந்திருந்தால், முன் குறித்த குளத்தினின்றும் பூவும் நீரும் கொண்டுவந்து, அருட்குறிக்குத் திருமுழுக்காட்டிப் பூவும் சூட்டியிருக்கலாமே என்று நினேந்து வருந்திஞேம். அவ்வழகிய சிறு கோயில் ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் அமைந்ததாகும். அக்கோயிலிலுள்ள அன்பிஞற் குழைந்து குழைந்து உருகி வழிபட்ட கண்ணப்ப நாயஞரது மிகப் பழைய திருவுருவம் அமைந்த மற்ருெரு சிறுகோயிலும் அதனருகே யிருந்தது. மக்களின் சேர்க்கையும், அவரது தீச்செயலும் அணுகப்பெருது, தனித்து உயர்ந்த ஒரு மலேயுச்சியில் இறைவனது அடையாளத்தையும், அவனே உண்மையன்பால் வழிபட்ட அடியவர் உருவத்தையுங் காண்பது, சொல்ல இயலாத ஓர் அன்பினேயும் உருக்கத் தினேயும் எம் உள்ளத்தே தோற்றுவித்தது. உயர்ந்தோங் கும் இத்தகைய தனியிடமே கடவுள் உவந்திருத்தற்கு ஏற்றதென்பது எமக்குப் புலஞயிற்று. இறைவனே வணங்

கத்தக்க தனியிடத்தைக் கண்டதும் நெஞ்சங் குவிந்து ஆறுதல் பெற்று அவனை வணங்கிப் பாடி வழுத்தினோம். அந்நேரத்தில் யாங்கள் வானுலகத்தில் கடவுளோடு இருப்பதாகவே எண்ணப்பெற்றோம். இவ்வாறு உலக நினைவினின்றும் சிறிது விடுபட்டிருந்தோமாயினும், பின் சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும் எப்படியோ பையப்பைய உலக நினைவு வரப்பெற்றோமாய்க் கடவுளையும் கண்ணப்பரையும் வணங்கிப் பிரிந்து பின் கீழ்நோக்கி இறங்கினோம்.

இவ்வாறு நாங்கள் இறங்கி வரும்போது, அங்கங்கே சிறிதுநேரம் நின்று நின்று, அம்மலையின் கீழ்த்தோன்றும் அரிய காட்சியின் அழகை வியந்து உரையாடினோம்! கீழ் உள்ள பெரிய சிவபிரான் கோயிலானது ஓரழகிய ஆற்றங் கரையின்மீது அமர்ந்து, மேலிருந்து காணும் எமக்குச் சிறிய அளவினதாய்த் தோன்றியது. ஓர் ஊரை உண்டாக்குவதற்குமுன் ஓவியக்காரன் அப் பெரிய ஊரினளவை ஒரு சிறிய கடிதத்தில் வரைந்து காட்டினால், அத் தோற்றமானது எவ்வளவு சிறிதாக நம் கட்புலனுக்குக் காணப்படுமோ அதைப்போலவே அப் பெரிய ஊரும் சிவ பெருமான் கோயிலும் சிறுத்து விளங்கின. ஆங்காங்கு அவ்வூருக்குப் புறம்பே பயிரிடப்பட்டிருக்கும் பச்சைப் பசேலென்ற வயல்நிலங்கள் பச்சைப் பட்டாடை விரித்தாற்போல் பகலவன் கதிரொளியால் மினுமினுப்புடன் விளங்கின. பின்னும், அவ்வூரின் கோயிலுக்கு அருகே கதிரவன் ஒளிவிட்டுத் திகழும் பொன்முகலியாற்றின் தோற்றமானது ஒரு வெள்ளிக் கம்பிபோல் காணப்படுவதாயிற்று. இன்னும், அவ்வாற்றின் இடை இடையே நீரைத் தடுத்து மடைகளின் வழியே வயல்கட்கு நீர்ப் பாய்ச்சும் மள்ளர்களும், மற்றொரு பக்கத்தே அறுப்பறுத்த

நிலங்களில் மேயும் ஆடுமாடுகளும் சிறு சிறு பாவைகள் போல் தோன்றுவ ஆயின.

இங்ஙனமெல்லாம் இறைவன் அருமையாகப் படைத்த இயற்கைத் தோற்றங்களைப் பார்த்துக்கொண்டே கீழிறங்கி மலையினடிவாரத்திற்கு வந்து சேர்ந்தோம். அம் மலையடிவாரத்தின் பக்கத்தே வேட்டுவர் குடிசைகள் பற்பல இருந்தன. யாங்கள் மலையினின்றும் வந்து களைப்புத் தீரும் பொருட்டு அங்கிருந்த ஒரு மரத்தடியிற் றங்கினோம். அப்போது அங்கிருந்த குடிசைகளி லொன்றிலிருந்து ஆண் மயிலொன்று வெளிவந்து தன் அழகிய தோகையை விரித்து ஆடியது. ஆ! அத் தோகையின் நீலமும் பச்சையும் கலந்த கண்கள் வெயிலொளியில் மினுமினு வென்று மிளிர்ந்தன. யான் பிறந்து அதுகாறும் காணாத அப் புதுமையை இன்னும் நினைவுகூர்ந்து மகிழ்கின்றேன். பின் அடுத்த நாள் விடியற்காலையிலே மலையடிவாரத்திலிருக்கும் பழைய காளத்தியப்பர் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி அக் கோயிலின் கருங்கற் சுவர்களிலுள்ள நுண்ணிய வேலைப்பாடுகளைக் கண்டு வியப்புற்றோம். பின் சத்திரத்திற்கு வந்து உணவு சமைத்து உண்ட பிறகு, என் பெற்றோர் இளைப்பார மேல்மெத்தைக்குச் சென்றனர். யான் உறங்குவதற்கு விருப்பமில்லாமல் அச் சத்திரத்தின் பின்புறத்திற் சென்றேன். அங்கே யிருந்த ஒரு பெரிய அரசமரத்தின்மேல் பத்துப் பதினைந்து குரங்குகள் மரக் கிளைகளில் தாவித்தாவி விளையாடிக்கொண்டிருந்தன. இவ் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அக் குரங்குகள் பரபரப்போடு கீழிறங்கி, எனக்குப் பத்தடித் தொலைவில் நின்றுகொண்டு, கைகளை நீட்டி உணவுப் பண்டங்கள் கேட்டன. உடனே யான் விரைந்து ஓடி ஓர் ஏனத்தில் சோற்றுடன் திரும்பினேன். யான் கொண்டு

வந்ததனை அக் குரங்குகளினருகே சென்று கொடுக்க அஞ்சிச், சோற்றைக் காட்டிக் கூப்பிட்டேன். உடனே அக் குரங்குகளிற் சில அச்சமின்றிக் கிட்டே வந்து கை நீட்டின. ஆனால், யான் உணவை அவைகளின் கைகளில் தருவதற்கஞ்சிக் கீழே வைத்து அப்புறம் வந்துவிட்டேன். அவை அவ் வுணவை உண்டபின் மரங்களில் ஏறின. யான் உணவு தருதலைப் பார்த்துக்கொண்டிருந்த தாய்க் குரங்கு களிற் சில, தம் குட்டிகளோடு என் எதிரே ஓடிவந்து தம் கைகளை நீட்டி இரங்கிய முகத்தோடு என் முகத்தை உற்றுநோக்கி உணவு கேட்டன. யான், அதன்பின் அச்சம் தெளிந்து அவைகளின் பக்கத்தேபோய், அவைகளின் கை களில் சோற்றை அள்ளி வைத்தேன். அத் தாய்க் குரங்கு கள், தாம் முதலில் அச் சோற்றை உண்ணமல் தத்தம் வயிற்றடியில் பற்றிக் கொண்டிருக்கின்ற தத்தம் இளங் குழவிகட்குத் தந்து பிறகு உண்டன. இவ்வாறு மேற்கூறிய அழகிய தோற்றங்களைக் கண்டு களிப்போடு அன்றிரவும் அச் சத்திரத்திலே தங்கி, விடியற்காலையிலே காளத்திப் புகைவண்டித் தங்குநிலைக்குப் போய்ப் புகைவண்டி ஏறி வீடுவந்து சேர்ந்தோம்.

# உ. தமிழின்பம்

[பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார்]

இத் தமிழ்நிலத்து மக்களாகிய நம்மனோர்க்கு நம் அன்னையாரால் முதற்கட் பாலொடு குழைத்து அன்போ டளாவி ஊட்டப்பட்ட அருமை மொழி அந்தமிலின்பம் ஆர்தரப்புரியும் செந்தமிழ் மொழியேயாமன்றோ! அன்னை யர் அருளொடு சுரக்கும் இனிய பாலை யுண்ணும் குழவிப் பருவத்தில், அவராற் பயிற்றப்பட்டுப் பயிலும் சிறப்புப் பற்றியன்றே இம்மொழி பால்வாய்ப் பசுந்தமிழ் என்று பாராட்டப்படுகின்றது. மழவிளம் பருவத்திற் பயிற்றப் படுதல் குறித்தே இதனைப் பசுந்தமிழ் என்றார் போலும்! இயற்கையும் அன்னதே. இதனால் நம் உடல் பாலுண்டு வரும் பருவம் தொட்டே உடற்கண் உறையும் உயிர், தன் குணமாகிய அறிவைச் செந்தமிழ்த் தெய்வமொழிப் பயிற்சி வாயிலாக வளர்த்துத் திகழும் உண்மை நமக்குப் புலனா கின்றது. அறியாப் பருவத்தினும் நம் உயிர்க்கு உறு துணையாக நின்று, அறிவுச் செல்வத்தை வளர்வித்து, உதவிவரும் தமிழ்மொழியின் பழைமையையும் சிறப்பையும் என்னென்று கூறுவேன்!

ஒரு மொழிக்குச் சிறப்பு, அதன்கண் அமைந்துள்ள சிறந்த இலக்கியம் இலக்கணம் (நூல்) சமயம் முதலியவை பற்றிய நூற்பரப்புக்களானும், பிறிதொன்றன் சார்பு வேண்டாது புலவர் கருதும் எத்தகைய அரும்பொருள் களையும் வழங்குதற்குரிய சொற்களுடைமையானும், பிற வற்றானுமாம். இன்னோரன்ன சிறப்புக்களில் நம் தமிழ்

T. 3093

மொழி யாதுங் குறைவுடையதன்று. இது மற்றொரு மொழியினின்றும் தோன்றியதென்றுதல், பிறிதொன்றன் சார்பின்றி நடைபெறுதென்றுதல் கூறுவார் உண்மை யாராய்ச்சியிலராவர். ஆனல், தொல்காப்பியர் காலந் தொட்டே வடசொற்களுட் சில தமிழில் வழங்கலாயின. அதுபற்றித் தொல்காப்பியனரும் "வடசொற் கிளவி வட வெழுத் தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" எனவும், "சிதைந்தன வரினும் இயைந்தன வரை யார்" எனவும் வடசொல் தமிழில் வழங்குமுறையை வரை யறுத்துக் கூறினர். கூடற் சங்கத்துக் குலவிய பண்டைப் புலவர் பெருமக்களுட் பலர், வடமொழியிலும் வல்லராக விருந்து தமிழை வளர்த்தமையால், அச் சங்க காலங்களில் மிகச் சுருக்கமாகத் தமிழில் வடசொற் கலப்பு உண்டா யிற்று. அங்ஙனம் வடசொற்கள் தமிழிற் கலக்குங்காலும் பொதுவெழுத்தான் இயன்ற சொற்களே தூய தமிழுரு வெய்திப் பெரும்பாலும் விரவலாயின.

நாளடைவிற் புலவர், தனித்தமிழ்ச் சொற்களைத் தெரிந்து வழங்கும் மதுகையின்மையானும், ஒரோவழித் தெரியினும் அவற்றின் வடசொற்றொடை செவிக்கு இன்பம் பயப்பனவாம் என மாறுகொள உணர்ந்தமையானும், தனித்தமிழ்ச் சுவைகண்டு இன்புறும் தலைவர் அருகினமை யானும், வடமொழியாளர் உவப்பத் தமிழில் பாட்டு, உரை முதலியன இயற்றவேண்டுமென்னும் விழைவு மேற்கொண் டமையானும் பொதுவெழுத்தானும் சிறப்பெழுத்தானும் ஆய வடசொற்கள் பலவற்றைத் தமிழில் வரம்பின்றி வழங்கிவருவாராயினர். சுவையுடைமை அவ்வம் மொழி களில் தனித்த நிலையிற் காணப்படுதல்போற் கலப்பிற் காணப்படுதல் சிறந்ததன்று. ஒரு மொழியிற் செவ்வனம் பயின்று அச் சுவையின் நிலைகண்டுணர்வார்க்கு, அதன்

தனிநிலையிற்போலப் பிறமொழிக் கலப்பில் அத்துணை யின்பம் உண்டாகாதென்பது உண்மை யுணர்ச்சியுடையார் எல்லோர்க்கும் ஒத்ததாகும். இதனால் வடசொற்களைச் சேர்ந்தவாறு தமிழில் புகுத்தல் முறையன்றென்பது தெளிவாம். ஒருசில வடசொற்கலப்பு உண்மைபற்றித் தமிழ்மொழியை வடமொழியினின்றும் தோன்றியதென்றல் பொருந்தாததொன்றாம்.

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள வேறுபாடு மிகப் பலவாம். வடமொழியில், தமிழிற்போலத், திணை பாலுணர்த்தும் வினைவிகுதிகள் இல்லை. 'பவதி' என்னும் வினைமுற்று, 'இருக்கின்றான், இருக்கின்றாள், இருக்கின்றது' என ஓர் ஈறே நின்று எழுவாய்க்கேற்றவாறு பொருளுணர்த்தும். தமிழில் வினைமுற்றுக்களின் ஈறே திணை பால்களை உணர்த்தி நிற்கும். பால்வகுப்பு, தமிழில் பொருளைப்பற்றியும், வடமொழியிற் சொல்லைப்பற்றியும் உள்ளது. ஆண்மகனைப்பற்றி வருஞ் சொற்களெல்லாம் ஆண்பாலாகவும், பெண்மகளைப்பற்றி வருவனவெல்லாம் பெண்பாலாகவும் தமிழில் உள்ளன. வடமொழியில் இவ் வரையறையில்லை; மாறுபட்டு வரும், சொல் நோக்கியதாத லின். மனைவியைப்பற்றிய "பாரியை" என்னுஞ்சொல் பெண்பாலாகவும், "தாரம்" என்னுஞ்சொல் ஆண்பாலாக வும், "களத்திரம்" என்னுஞ்சொல் நபுஞ்சகப் பாலாகவும் வருதல் காண்க. வடமொழியில் ஒருமை இருமை பன்மைச் சொற்கள் உள்ளன. தமிழில் ஒருமையல்லாதனவெல்லாம் பன்மையே. திணைப்பாகுபாடு, குறிப்புவினைமுற்று முதலி யன தமிழ்க்கே உரியன. "முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை முல்லையாக்கி" என்னும் கம்பராமாயணச் செய்யுளை வடமொழிக்கண் மொழிபெயர்க்கப்புக்க வட மொழிப்புலமைமிக்க என் நண்பரொருவர் அத் திணைப்

பாகுபாடு வடமொழிக்கண் இல்லாமையால், "நல்லன வற்றைத் தீயனவாக்கியும், தீயனவற்றை நல்லனவாக்கியும்" என்னும் பொருள்பட மொழிபெயர்த்துள்ளார். திணைப் பாகுபாடு வடமொழிக்கண் இல்லையாயினும் பொரு ளாராய்ச்சிவன்மையால் ஒருவாறு பொருந்த மொழிபெயர்க் கலாம். கூடாதென்பது அவர் கருத்துப்போலும்! இன்னும், உற்று நோக்குவார்க்கு இலக்கண அமைதியில் வட மொழிக்கும் தமிழ்மொழிக்கும் வேறுபாடு பல தோன்றும்.

இத் தமிழ்மொழியை முறையாகப் பயில்வாருஞ் சிலரே; பயிற்றுங் கல்லூரிகளுஞ் சிலவே. நம் அரசினர் மொழியாகிய ஆங்கிலத்தால் நெருக்குண்டு இது தன்னுருக் கரந்து அங்குமிங்குஞ் சிறிது உறைவிடம் பெற்று ஒங்கி யிருக்கின்றது. போற்றுவாரின்மையால் வேற்றிடம் பெயர் தற்கும் வழியில்லை. ஆர்வமிக்குப் பயில முயல்வாரும் பொருள் வருவாயைக் கருதிப் பின்வாங்குகின்றனர். பொருள் வருவாயைப் பொருட்படுத்தாத தகுதியுடையோ ருக்கு இதன்கண் விருப்பமுண்டாதல் அரிதாகின்றது. இளைஞர் சிலர் காலத்தின் விரைவிற்கேற்றவாறு, ஒரு நூலை யேனும் அழுந்தி யாராயாமல் நுனிப்புல் மேய்ந்து, இக்கால நாகரிகத்திற்கு ஒத்தவண்ணம் எங்கணும் உலாவித்திரியும் பத்திரிகைகளில் வெளிப்படுஞ் சில கட்டுரைகளைப் பயின்று, அம்மட்டில் தம் கல்வி முற்றியதாக நினைந்து, தாமும் அம்முறையில் காலங்கழிக்க எண்ணுகின்றனர். பண்டைக் காலம்போலக் கற்றுவல்ல பெரும்புலவர்கட்கு முற்றாட் டாக நிலம் பொருள் முதலியன கொடுத்துப் பேணும் புரவலரும், ஆரவாரமின்றி அறிவு விளக்கங் கருதிக் கல்வி பயின்று அடக்க மேற்கொண்டொழுகுவாரைப் பெருமைப் படுத்துவாரும் சுருங்கினர்.

யார் யார் எவ்வெத்திறத்து நூல்களிற் பயிற்சி மிக்குடையாரோ அவரவர் அவ்வத்திறத்து நூல்களுக்கு உரை யெழுதப்புகல்வேண்டும். அங்ஙனமின்றிக் கல்லாத மேற்கொண்டொழுகல் தவறுடைத்தாம். சைவநூலில் ஒரு சிறிதும் பயின்றறியாதார் ஒருவர், சைவத் தலைமணியாகத் திகழும் திருவாசகம், திருவிசைப்பாக்களுக்கு முற்றும் உரையெழுதித் தம் புரைநெறியை வெளிப்படுத்தியுள்ளார். இத்தகையார் தம் தகுதிக்கு இயலாத இவ்வுயர் நூல்களுக்கு உரைகாணப் புகுந்து உண்மைப்பொருள் காண இயலாதோடு மரபுக்கு முரணாகவும் பல எழுதினர். பிழைகாட்ட வெல்லாவற்றையும் ஈண்டு விளக்கல் மிகையாகலின் ஒன்று காட்டுவேன். "நானாரென் னுள்ளமார் ஞானங்களாரென்னை யாரறிவார், வானோர் பிரானென்னை யாண்டிலனேன் மதி மயங்கி, யூறு ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்" என்னும் திருப்பாட்டில் மதிமயங்கி யென்பதைப் பெயர்ச் சொல்லாக் கொண்டு ஆறும் வேற்றுமை யுருபு விரித்து மதிமயக்கமுற்ற பிரமனது தலையோட்டில் பலிதேரும் அம்பலவன் என முடித்துக்காட்ட அறியாமல், அதனை வினையெச்சமாகக்கொண்டு மதிமயக்கத்தை அம்பலவர்க் கேற்றித் தம் மதிமயக்கத்தைப் புலப்படுத்தினர். இன்னோரன்ன பலவுள. ஒரு புலவன் காலக்கழிவு நோக்காது நெடிதாராய்ந்து ஒரு நூற்கு உண்மையுரை தன் வாணாளில் எழுதி முடிப்பினும் போதியதே. பிழைபடப் பலவெழுதலினும் பிழையறச் செப்பனிட்டு ஒன்று எழுதல் நன்றாகும்.

கற்றவர்க்கு ஈத்துவக்கும் பேறில்லாதார், செல்வம் படைத்தும் ஒளியும் புகழும் இலராய் விலங்கோடு ஒப்ப உண்டு களித்துத் துஞ்சும் இயல்பினரே யாவர். ஆதலாற் செல்வர்களே! புலவரைப் போற்றுதல் நும்மைப் போற்றுதலாகும். ஆதலின், தமிழ்நலங் கருதி இன்னோரன்ன

துறையில் இறங்குமின்கள்! பற்பலவாற்றானுஞ் செலவழிக்கப்படும் நம்பொருட் கூறுகளுள் ஒன்று புலவர்க்கெனச் செய்மின்கள்! அவிச்சுவையினும் இனிய கவிச்சுவையை நுகர்மின்கள்! நம் பூதவுடல் வன்மையுற்றிருக்கும் ஞான்றே புகழுடலின் ஆக்கத்திற்கு வேண்டுவன புரிமின்கள்! அழிதன்மாலையதாகிய செல்வத்தைக்கொண்டு அழியாப்புகழை வளர்த்தற்குரிய நெறியைக் கைப்பற்றுமின்கள்! புகழொன்றோ! வலவனேவா வானவூர்தியாகிய புண்ணியமும் பயனும் நுங்கட்காம். "அர்ச்சனை பாட்டேயாகு மாதலான் மண்மேனம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்" என்று அருண்மொழித் தேவரும், "தித்திக்கு மணி வார்த்தை யின்னுஞ் சின்னாட்டிருச்செவியிலருந்தவும்" என்று பரஞ்சோதி முனிவரும் கூறியாங்கு, மறைபாடும் பெரும் புலமையும் பொன்மலை வெள்ளி மலைகளாகிய பெரும் பொருளும் வாய்க்கப்பெற்று, எவ்வுயிர்க்கும் உயிராக விளங்கும் பரமபதியாகிய இறைவரே சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் முதலிய அருட்புலவர் திருப்பாடல்களைக் கேட்க விழைந்தனரென்றால், அவரால் இரக்கமுறும் நாம் புலவர் பாட்டில் அவாவுறாதிருத்தல் எங்ஙனம் அமையும்?

தெய்வமணங் கமழாத கல்வி சிறந்த பயனுடையதாகாது. "கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேனாயிடினும்" என்ற பெரியார் திருமொழியும் கல்வியின் பயன் கடவுளையறிந்து நினைந்து வழிபடச் செய்தலேயாம் என்று அறிவுறுக்கும். கடவுள் இயல் முதலியனவும் வழிபடுமுறை முதலியனவும் நூல்களைப் பயின்றாலொழியத் தெரியா. எல்லாம் வல்ல இறைவன் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி" யாதலால், அக் கனியின் இயல்பு அறிதற்குரிய வழியைக் கல்வியின் தொடக்கமுதல் மேற்கோடலே

நன்றாம். இக் குறிப்பை நம் தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் சிற்றுருவிற் பெரும்பொருள் பொதுள அருளிய "ஆத்திசூடி, கொன்றைவேந்தன்" முதலிய நூல்கள் நன்கு வலியுறுத்துவனவாம். மக்கட்குரிய பொது வொழுக்கங்களையும் சமயம் பற்றிய சிறப்பொழுக்கங்களையும் ஒருவன் ஒருங்கு எய்துதற்குரிய வழி சமய நூற் பயிற்சியானேயாம். ஆதலின் நம் சிறார் பயிலுதற்குரிய பாடங்களுள் சமயக் கொள்கைகளைப்பற்றிய பாடமும் ஒன்றாகும்படி செய்தல் தமிழ்க் கல்லூரிகளை நடாத்தும் தலைவர்களால் மேற்கொள்ளத்தக்க தொன்றாம்.

# ௩. பண்டைத் தமிழ்ச்சான்றோரின் வானநூற் புலமை

[நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

தமிழகத்திலே பழைய நாளில் வானநூல், எண்ணூல், குறிநூல், மருத்துநூல் முதலிய பலகலைகளும் விளக்க முற்றிருந்தன என்பதற்குப் பற்பல சான்றுகள் உள்ளன. அவற்றுள், வானநூல் எங்ஙனம் வளம் பெற்றிருந்ததென் பதனை ஈண்டுச் சிறிது விளக்குதும். உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் நல்லிசைப்புலவர் நலங்கிள்ளியென்னும் சோழ வேந்தனைப் பாடிய புறப்பாட்டொன்றில்,

> "செஞ்ஞா யிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
> பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
> வளி திரிதரு திசையும்
> வறிது நிலைஇய காயமும் என்றிவை
> சென்றளந் தறிந்தோர் போல என்றும்
> இனைத்தென் போரும் உளரே"

என்று கூறி, ஞாயிற்றின் தெருவும், இயக்கமும், பார்வட்டமும், திசையும், விசும்பும் என்பவற்றை அளந்தறிதலின் அருமையையும், அவற்றை ஆண்டாண்டுச் சென்று அளந்தறிந்தோர் போல அவை இத்துணை அளவையுடையன வென்று வழுவின்றுரைக்கும் அறிவுடையோரும் தமிழகத்திலே உளரென்பதனையும் புலப்படுப்பாராயினர். வானநூற்குரிய குறியீட்டுச் சொற்கள் தமிழின்கண் மல்கிக் கிடத்தலொன்றானேயே அக்கலை எவ்வளவு வளர்ச்சியுற்றிருந்த தென்பது புலனும்.

ஒன்பான் கோட்களில் ஞாயிற்றைக் குறிக்க ஞாயிறு செங்கதிர், பகலோன், பரிதி, வெய்யோன், என்றாழ்,

பனிப்பகை, வேந்தன், சான்றோன் முதலிய சொற்களும்; திங்களைக் குறிக்க, திங்கள், அம்புலி, தண்சுடர், நிலவு, அல்லோன், அலவன் முதலியவும்; செவ்வாயைக் குறிக்க, செவ்வாய், சேய், குருதி, ஆரல், அறிவன், நிலமகன், அழலோன் முதலியவும்; புதனைக் குறிக்க, அறிவன், கணக்கன், புலவன், புந்தி, மால், பச்சை முதலியவும்; வியாழனைக் குறிக்க, வியாழன், பொன், அந்தணன், அரசன், அமைச்சன், ஆண்டளப்பான் முதலியவும்; வெள்ளியைக் குறிக்க, வெள்ளி, பளிங்கு, புகர் மழைக்கோள் முதலியவும்; சனியைக் குறிக்க, நீலன், காரி, கரியோன், கதிர்மகன், முதுமகன், முடவன் முதலியவும்; இராகுவைக் குறிக்க, இருள், கரும்பாம்பு என்பனவும்; கேதுவைக் குறிக்க, கொடி, செம்பாம்பு என்பனவும் தமிழிலே உள்ளன.

இருபத்தேழு நாண்மீன்களில் அச்சுவினியைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள், இரலை, புரவி, ஏறு, யாழ், தலைநாள், மருத்துநாள் முதலியவாம்; பரணியைக் குறிப்பன காடுகிழவோன், தாழி, அடுப்பு, முக்கூட்டு முதலியன; கார்த்திகையைக் குறிப்பன அறுமீன், அழல், ஆரல், அளக்கர் முதலியன; உரோகிணியைக் குறிப்பன பண்டி, உருள், வையம், ஊற்றல் முதலியன; மிருகசீரிடத்தைக் குறிப்பன மாழ்கு, மான்றலை, மும்மீன், நரிப்புறம், பாலை, வெய்யோன் முதலியன; திருவாதிரையைக் குறிப்பன செங்கை, யாழ், இறைநாள் முதலியன; புனர்பூசத்தைக் குறிப்பன கழை, கரும்பு, ஆவணம், ஏரி முதலியன; பூசத்தைக் குறிப்பன கொடிறு, வண்டு, காற்குளம், வியாழனுள் முதலியன. ஆயிலியத்தைக் குறிப்பன அரவினுள், கௌவை முதலியன. வேள்வி, வேட்டுவன், கொடுநுகம், வாய்க்கால் முதலியன மகத்தையும்; எலி, கணை முதலியன பூரத்தையும், மானேறு, கதிர்நாள் முதலியன உத்திரத்தையும்; கைம்மீன், களிறு

ஐவிரல் முதலியன அத்தத்தையும்; நெய்ம்மீன், பயறு, அறுவை, நடுநாள் முதலியன சித்திரையையும்; விளக்கு, வீழ்க்கை, வெறுநுகம், மரக்கால், காற்றினுள் முதலியன சோதியையும்; முறம், முற்றில், சுளகு, காற்றினுள் முதலியன விசாகத்தையும்; பனை, புல், தேள், நட்புநாள் முதலியன அனுடத்தையும்; துளங்கொளி, தழல், வல்லாரை முதலியன கேட்டையையும் குறிக்கும் தமிழ்ச் சொற்களாம். மூலத்தைக் குறிக்க அன்றில், வில், குருகு, கொக்கு, தேட் கடை முதலியவும்; பூராடத்தைக் குறிக்க உடைகுளம், முற்குளம், நீர்நாள் முதலியவும்; உத்திராடத்தைக் குறிக்க ஆடி, கடைக்குளம் முதலியவும்; திருவோணத்தைக் குறிக்க உலக்கை, முக்கோல், மாயோனுள் முதலியவும்; அவிட்டத்தைக் குறிக்கப் பறவை, காக்கை முதலியவும்; சதயத்தைக் குறிக்க நீர்நாள், செக்கு, குன்று, போர், முதலியவும்; பூரட்டாதியைக் குறிக்க முற்கொழுங்கால், நாழி முதலியவும்; உத்திரட்டாதியைக் குறிக்க மன்னன், அறிவனுள், பிற்கொழுங்கால் முதலியவும்; இரேவதியைக் குறிக்க நாவாய், தொழு, பஃறி, ஆனுள், கடைநாள் முதலியவும் தமிழின்கண் உள்ளன.

பன்னிரண்டு இருக்கை (இராசி)களில் மேடத்திற்கு ஆடு என்பதும், இடபத்திற்கு ஏறு என்பதும், மிதுனத் திற்கு இரட்டை என்பதும், கடகத்திற்கு அலவன் என்ப தும், சிங்கத்திற்கு மடங்கல் என்பதும், கன்னிக்கு நங்கை என்பதும், துலாத்திற்கு நிறைகோல் என்பதும், விருச்சி கத்திற்குத் தேள் என்பதும், தனுவிற்கு வில் என்பதும், மகரத்திற்குச் சுறு என்பதும், கும்பத்திற்குக் குடம் என்ப தும், மீனத்திற்கு மீன் என்பதும் தமிழ்ப் பெயர்களாம். ஆட்டின் மறு பெயர்களாகிய வருடை, உதள், தகர், மறி, மை முதலியவும் ஆடு என்னும் இருக்கையைக் குறிப்பன

வாகும். இங்ஙனமே இடபத்துக்கு ஏறு முதலியவற்றின் மறு பெயர்களையும், நாண்மீன் முதலியவற்றிலே அசுவ னிக்குக் குதிரை, பரி, புரவி என்றாற்போல் வரும் மறு பெயர்களையும், மிதுனத்திற்கு யாழ் என்பதுபோல் இயைபு பற்றி வரும் பிற பெயர்களையும் கொள்க.

கோட்களைக் குறிக்கும் சேய், பச்சை, பொன், வெள்ளி, காரி என்னும் பெயர்கள் நிறம்பற்றியும்; முடவன் என்பது இயக்கம் பற்றியும்; வேந்தன், அறிவன், அந்தணன் முதலியன ஒவ்வோ ரியல்புபற்றியும் வந்திருத்தல் காண்க. இங்ஙனமே நாட்கள் முதலியவற்றின் பெயர்க்காரணங்களும் உய்த்தறியற்பாலன. இவையிற்றிலிருந்து பண்டைத் தமிழ்வாணர்கள் கோள், நாள் முதலியவற்றின் இயல்புகளை எவ்வளவு நன்கறிந்திருந்தன ரென்பது புலப்படும் வான நூற் சார்பாக மல்கிக் கிடக்கும் இத்தகைய சொற்களை நோக்குழி எத்தகைய கலைகளையும் வேற்று மொழியின் கலப்பின்றியே தமிழின்கண் இயற்றுதல் சாலுமென்பது தெளிவாகின்றது.

இனி, சங்கத்துச் சான்றோராய பழந்தமிழ்ப் புலவர் களின் வானநூற் புலமையினையும், அன்னார் அந்நூற் குறிப்புக்களை அழகிய தமிழ்ச்சொற்களாற் றொடுத்தமைத் திருத்தலையும் சில எடுத்துக்காட்டால் விளக்குதும்.

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்னும் சேரவேந்தன் துஞ்சியபொழுது, கூடலூர்கிழார் என்னும் சான்றோர் இரங்கிப் பாடிய அழகிய பாட்டொன்று புற நானூற்றில் உள்ளது. அதில், அவர் "வானத்தினின்றும் ஒரு மீன் விழுந்தது; அதனைப் பார்த்து யாமும் பிறருமாகிய பல்வேறு வகைப்பட்ட இரவலர் எம்முடைய மலைநாட்டுக்கு வேந்தனாகியவன் நோயிலனாகப்பெறின் நன்றென இரங்கிய

நெஞ்சத்துடனே மிக அஞ்சினேம்; அஞ்சினபடியே ஏழா நாள் வந்ததாகலின், இன்று வலியையுடைய யானை கையை நிலத்திலிட்டுத் துஞ்சவும், திண்ணிய வாராற் பிணிக்கப் பட்ட முரசம் கண் கிழிந்துருளவும், உலகிற்குக் காவலாகிய வெண்கொற்றக்குடை கால்துணிந்து உலறவும், காற்றுப் போலு மியல்புடைய குதிரைகள் கதியின்றிக் கிடக்கவும், பகைவரைப் பிணிக்கும் ஆற்றலையும், நச்சினோர்க்கு அளந்து கொடுத்தலறியாத வண்மையையும் உடைய நீலமலைபோலும் வேந்தன் தேவருலகத்தை யடைந்தான்" என்று கூறியிருப் பது நெஞ்சினை யுருக்குகின்றது. இப்பாட்டின் முற்பகுதி யில் அவர், அம் மீனனது எப்பொழுது எவ்வழி எங்ஙனம் விழுந்ததென்பதனைக் கூறியிருப்பது ஈண்டு நோக்கற் பாலது. அது,

"ஆடிய லழற்குட்டத்து
ஆரிரு ளரையிரவின்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனியுய ரழுவத்துத்
தலைநாண்மீன் நிலைதிரிய
நிலைநாண்மீன் அதனெதிரேர்தரத்
தொன்னாண்மீன் றுறைபடியப்
பாசிச்செல்லாது ஊசிமுன்னாது
அளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே." (புறம்-உ௨௯)

என்பது. "மேடவிராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதற்காலின்கண் நிறைந்த இருளையுடைய பாதியிரவின் கண், முடப்பனைபோலும் வடிவையுடைய அனுடநாளின் அடியின் வெள்ளி முதலாகக் கயமாகிய குளவடிவுபோலும் வடிவையுடைய புனர்பூசத்துக் கடையின் வெள்ளி எல்லை

யாக விளங்கப் பங்குனிமாதத்தினது முதற்பதினைந்தின் கண் உச்சமாகிய உத்தரம் அவ்வுச்சியினின்றும் சாய, அதற்கு எட்டாமீனாகிய மூலம் அதற்கெதிரே எழாநிற்க, அந்த உத்தரத்திற்கு முன் செல்லப்பட்ட எட்டாமீனாகிய மிருகசீரிடம் துறையிடத்தே தாழ, கீழ்த்திசையினும் வடதிசையினும் போகாது கடலாற் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக மிக்க தீப்பரக்கக் காற்றால் பிதிர்ந்து கிளர்ந்து வானத்தினின்றும் ஒரு மீன் விழுந்தது" என்பது அதன் பொருள். பங்குனி பதினைந்தாம் நாள், கார்த்திகை முதற் காலுடன் கூடிய இருள் செறிந்த பாதியிரவில், ஒரு மீன் மிக்க ஒளியுடன் வடகீழ்த்திசையில் விழுந்ததென்பது இதன் கருத்தாகும். இருபத்தேழு நாண்மீன்களுடன் கூடிய வான வட்டத்தின் மேற்பகுதியிலே பதின்மூன்றரை நாண்மீன்கள் நிலவுறுமாகலின், உத்தரம் உச்சியில் நிற்கும் பொழுது மேல்கோடியில் புனர்பூசத்துக் கடை வெள்ளி வரையிலும் கீழ்க்கோடியில் அனுடத்தின் அடி வெள்ளி வரையிலும் விளங்குமென்க. உத்தரம் உச்சியினின்றும் சாய, மூலம் எழ என்றமையால் இரவு பதினெட்டரை நாழிகையளவில் மீன் விழுந்தமை பெறப்படும். இதன்கண் மேடத்தைக் குறிக்க ஆடு என்னுஞ் சொல்லும், கார்த்திகையைக் குறிக்க அழல் என்பதும், அதன் ஒரு காலைக் குறிக்கக் குட்டம் என்பதும், அனுடத்தைக் குறிக்க முடப்பனை என்பதும், புனர்பூசத்தைக் குறிக்கக் குளம் என்பதும் வழங்கியிருத்தலும், தலை நாண்மீன் முதலியன உத்தரம் முதலியவற்றைக் குறிப்பின் உணர்த்தலும், நாண்மீன்களில் இன்னது இன்னுழியிருக்குங்கால் இன்னது இன்னுழியிருக்குமென வரை செய்தலும் போல்வனவற்றி லிருந்து, அற்றை நாளில் வானநூலானது கருதியவாறு தடையின்றிச் செய்யுளிலமைக்கும் வண்ணம் அத்துணைப்

பயிற்சியுடைத்தா யிருந்ததென்பது போதரும். மீன் விழுந்தமைகொண்டு அரசற்கு இன்னது நிகழுமென நன்கு துணியப் பட்டதைத் தெரிதலானே நிமித்தநூற் பயிற்சி யும் மிக்கிருந்தமை புலனாகிறது. இதிலுள்ள பாசி என்ப தற்குக் கிழக்கு என்பதும், ஊசி என்பதற்கு வடக்கு என்பதும் பொருளாம்.

இனி, வையையாற்றைச் சிறப்பித்துக் கூறும் பதி ேனாராம் பரிபாட்டின்கண் கார் காலத்து மழை பெய்தல் கூறும்வழி, அப்பொழுது கோட்கள் நின்ற நிலைமையை ஆசிரியர் நல்லந்துவனார் விளக்கியுள்ளார். அது,

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை யெழில்வேழம் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி யுயர்நிற்ப அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்குப்பா லெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுன மடைய விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி யியைகெனவிவ் வாற்றாற்
புரைகெழு சையம் பொழிமழை தாழ
நெறிதரூஉம் வையைப் புனல்."

என்பது. இதன் முதல் மூன்று அடிகளில், இருபத்தேழு நட்சத்திரங்களாலாகிய பன்னிரண்டு இராசிகளும் இடப வீதி, மிதுன வீதி, மேடவீதி என மூவகை வீதியாக வகுக் கப்பட்டிருத்தல் கூறப்பட்டுளது. நாண்மீன்களும் மதிய மும் ஒன்றற்கொன்று நெடுஞ்சேய்மையில் உள்ளவாயினும்

வானின்கண் மதிக்கு நேர் பொருந்தும் நாண்மீனே அற்றை நாளாகக் குறிக்கப்படுதலின் 'மதியமொடு விசும்பு புணர்ப்ப' எனப்பட்டது. எரி என்பது கார்த்திகையை யும், சடை என்பது திருவாதிரையையும் வேழம் என்பது பரணியையும் குறிக்க, அவை முறையே கார்த்திகையின் முக்காலையுடைய இடபத்தையும், ஆதிரையையுடைய மிது னத்தையும், பரணியையுடைய மேடத்தையும் குறிப்பன வாயின. வீதி என்பது தெரு எனவும், இராசி என்பது இருக்கை எனவும் கூறப்பட்டன. இங்ஙனம் மூன்று தெருக்களாக வகுக்கப்படும் பன்னிரண்டு மனைகளில் இன்ன மனையுள் இன்ன கோள் இருக்கும் பொழுதில் மழை பொழிந்த தென்பது மேற் கூறப்படுகின்றது.

ஆவணித்திங்கள் அவிட்ட நாளில், வெள்ளி இடபத் தையும் செவ்வாய் மேடத்தையும், புதன் மிதுனத்தை யும், ஆதித்தன் சிங்கத்தையும், வியாழம் மீனத்தையும், சனியும், மதியும், இராகுவும் மகரத்தையும், கேது கடகத் தையும் சேர, இராகு மதியினைத் தீண்ட, அகத்தியன் என்னும் மீன் தன்னிடத்தைக் கடந்து மிதுனத்தைப் பொருந்த, முதுவேனிற்குப் பின்னதாகிய கார்காலத்திலே சையமலைக்கண் மழைபெய்ய அதனாற் பெருகிவரும் வையைப்புனல் என்பது அதன் திரண்டபொருளாம். கார்த் திகை உச்சியினிற்க விடிவது ஆவணித்திங்களின் தொடக் கத்தே யாதலின், ஆதித்தன் சிங்கத்தைச் சேர என்பது 'புலர் விடியல் அங்கியுயர் நிற்ப' என்பதனாற் குறிக்கப் பட்டது. 'சனியின் இருமனைக்கும், உப்பால்' என்றது மீனம் என்றபடி. 'பாம்பு மதிய மறைய வருநாள்' என் றது, ஆவணி மாதத்து மதி நிறை நாளாகிய அவிட் டத்தை. எனவே, மதியும் இராகுவும் மகரத்து நிற்க என் பதும், கேது அதற்கு ஏழாமிடமாகிய கடகத்து நிற்க என்

பதும் பெறப்பட்டன. ஒன்பான் கோட்களில் மதியமும் பாம்புகளும் ஒழிந்த ஆறு கோட்கள் தத்தம் மனைகளில் நிற்றல் கருதற்பாலது. ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளின் முன், ஆவணித்திங்கள் நிறையுவாவில் இங்ஙனம் கோட்கள் நின்றது எவ்வாண்டிலெனக் கணிக்கும் வழி, இச்செய்யுள் தோன்றிய காலம் தெற்றெனப் புலப்படும். இதன்கண் வெள்ளி, படிமகன் (செவ்வாய்), அந்தணன் (வியாழம்) எனக் கோட்களின் பெயர்களும், ஏறு (இடபம்), வருடை (மேடம்). வில் (தனுசு) என இராசிகளின் பெயர்களும் தமிழ்ச் சொற்களாய் நிற்றல் காண்க. புந்தி, யமன், மிதுனம், மகர முதலிய வடசொற்கள் இதன் கட் காணப்படுதல்,

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்."

என ஆசிரியர் தொல்காப்பியனார் வடசொற்கள் தமிழில் வருமாறு கூறியதற்கேற்ப, வடமொழிவாணர் தமிழ் நாட்டிற் பரவிய காலத்தே தமிழ்ச் சான்றோர்கள் சிற்சில வடசொற்களை மேற்கொள்வாராயினமையான் என்க. இங்ஙனம் ஒரோவழிக் காணப்படும் வடசொற்கள் தமிழ்ச்சொல் இன்மையாற்போந்தன வல்ல என்பது இவற்றாற் குறிக்கப்படும் பொருள்கள் பிறாண்டுத் தமிழ்ச் சொற்களால் வழங்கப்பெறுதல் கொண்டு அறியப்படும். பிற்காலத்துச் சோதிடநூல் இயற்றிய புலவர்களும்,

"மறியுடன் எருது மான்பெண் வருகுளிர் மீன் கோல் எழும்
எறிகதிர் முதலா வுச்சம்."

என்றிங்ஙனம் கோட்கள் மனைகள் முதலியவற்றை இனிய தமிழ்ச் சொற்களால் எளிதிற் கூறிப்போதராலுங் காண்க.

# ௪. கதிர்

[காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.]

அறிவியல்[1] வளர்ச்சி இருந்தவாறென்னே! அணுக்கள்[2] என்று கூறப்படும் அறிவியற்பகுப்பைப் பற்றி முற்ற முடிய அறிந்துவிட்டதாக இருபது இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பேயே அற்றைநாளிலிருந்த அறிஞர்களால் முடிவு கட்டப்பட்டு விட்டது. காணப்படும் ஒவ்வொரு பொருளும் சில பல அணுக்களின் தொகுதியே யென்பதும், அணுவென்று பகுக்கப்பட்ட ஒன்றை மீண்டும் சிறு அளவினதாகப் பகுத்தலோ, பிரித்தலோ, அன்றித் திரித்தலோ இயலாதென்பதும், பல சில அணுக்களால் ஆக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஒவ்வொரு பொருளும் தன் உருக்கெடுங்கால், அப்பொருளுட் சேர்ந்திருந்த அணுக்கள் ஒவ்வொன்றும் எத்தகைய கேடும் திரிபுமின்றிப் பிரிந்து முன்னைய உருவுடனேயே தனித்தனியாக இருந்துவரும் என்பதும் அவ்வறிஞர்கள் ஆய்ந்த முடிபுகளாம். அருக்கனே கிழக்கொழித்து மேற்கே தோன்றினும், அலைகடல் நிலையழிந்து நீரற்றாலும், அணுக்கள் என்பன அழிவதோ உரு மாறுவதோ கிடையாது; முக்காலுங்கிடையாது; எக்காலத்திலுங் கிடையாது என்னும் பொருள்பட டிண்டால்[3] என்ற பேராசிரியர் கொக்கரித்தார்.

இப் பேராசிரியர் இவ்வாறு கொக்கரித்துத் திரிகையில் ஹென்ரி பெக்கேரல்[4] என்ற பாரீஸ் நகரப் பேராசிரியர் தீப்பாஷாணம் என்னும் எரிகந்தகத்[5] தொடர்புடைய பல பொருள்களை, அஃதாவது, இருட்டிற் சுடர்விட்டு மிளி

1. Science. 2. Atoms. 3. Prof. Tyndall. 4. Henri Becquerel. 5. Phosphorescent.

ரும் ஆற்றல் படைத்த பல பொருள்களை, ஆராய்ந்து கொண்டிருந்தார். இவ்வாராய்ச்சியில் புகைப்படம் பற்றுந் தகடுகளை[1] இவர் பயன்படுத்த நேர்ந்தது. அவ்வாறு பயன் படுத்தி யாராய்ந்தபொழுது, அவற்றின்மீது ஒரு சிறிதும் எதிர்பாராதனவும், எக்காரணங்கொண்டும் இருத்தல் முடியாதெனக் கருதப்பட்டனவுமான சில குறிகள் காணப் பட்டன. அத் தகடுகளைப் பயன்படுத்தியபொழுது ஒருகால் சிறிது கருத்தழிவாயிருந்ததால் அக் குறிகள் ஏற்படுமா றுயிற்ரே என ஐயுற்று மறுமுறை மிகவுங் கருத்தாக அவ் வாராய்ச்சியை நடத்தினர். எனினும் இம் முறையும் அவ் விந்தையான குறிகள் காணப்பட்டன.

அக் குறிகள் யாவை? எக்காலத்திலும் எக்காரணத்தி னும் அழிவுறல் முடியாதென்று கருதப்பட்ட அணுக்கள் சில தாமாகவே வேண்டுமென்றே உடைந்து தூளானமையி னல் ஏற்பட்டவைகளே அவைகள். ஆராய்ச்சியில் அவர் பயன்படுத்திய "யூரேனியம்"[2] என்ற ஒரு கனிப்பொரு ளோடு[3] சேர்ந்திருந்த "ரேடியம்"[4] என்னும் கதிரி என்ற பொருளினல் அக்குறிகள் ஏற்பட்டனவென்று அவர் கண்டு பிடித்தார். கதிரி விடும் ஒளிச் சத்தே அந்தத் தகடுகளின் மேல் சில குறிகளைச் செய்திருந்தது. இக் கதிரி கனிகளி லிருந்து வெட்டியெடுக்கப்படும் பொருள்களில் மிகவுஞ் சிறந்ததொன்ருகக் கருதப்பட்டு வருகிறது.

புகைப்படம் பற்றுந் தகடுகள் ஒரு சிறிது வெளிச்சம் பட்டாலும் கெட்டுவிடுகின்றன என்பது யாவரு மறிந்தது. ஆகவே, கதிரியிலிருந்து கட்பார்வைக்குப் புலனுகாது வெளிப்படும் ஒளிக்கதிர்கள் உளவென்பது அவ் வொளிக் கதிர்கள் பட்டுப் புகைப்படம் பற்றுந் தகடுகள் கேடுற்றமை

---

1. Photographic Plates. 2 Uranium.
3. Metal. 4. Radium.

யால் தெளியப்பட்டது. இக் கதிரி காற்றுடன் கலந்து மின்சாரஞ் செலுத்தியாகப்[1] பயன்படக்கூடியதென்றும், தகடு போன்றதொரு பொருளின்மீது தடவப்பட்ட சில கலவைப் பொருள்களை ஒளிவிட்டு மினிரச் செய்யும் ஆற்றல் வாய்ந்ததென்றும் பின்னர்க் கண்டுபிடிக்கப்பட்டது.

இனி, இவ்வாறு வேறு தொடர்பின்றித் தானே ஒளிவிடும் ஆற்றலையே, இக்காலை, (ரேடியோ ஆக்டிவிட்டி) **கதிரி இயக்கம்**[2] என்று கூறுவது. கதிரியைப் போற் கதிர் விடும் ஆற்றல் வாய்ந்த மற்றொரு பொருளும் பின்னர் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது "தோரியம்"[3] எனப்படும்.

இனி, கதிரி வீசுங் கதிர்கள் யாவையென்று பார்க்கலாம். அக் கதிர்கள் மூன்று வகையினவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. **ஆல்பா கதிர்**[4] என்ற முதல்வகை ஒளி தாளினால் மறைபடக் கூடியது. அஃதாவது அக் கதிரின் முன் ஒரு தாளைப் பிடித்தால் அக் கதிர் அத் தாளினூடு செல்ல முடியாதாகையால், தாளின் பின்புறத்திற் கதிரொளி தெரியாது. மேலும் இக் கதிர் திரண்ட அணுக்களின் தொகுதி யென்றும், அவ்வணுத் தொகுதிகளிலிருந்து "ஹீலியம்"[5] என்ற வாயுவைப் பெறமுடிவதால் அவ் வணுக்கள் ஹீலியம் அணுக்களே யென்றும் முடிவு கட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அணுவும் திரண்டு பருமையாக இருப்பதனாலேயே தாளை ஊடறுத்துச் செல்ல இயலாமல் தடைபட்டு நிற்கின்றது.

இரண்டாவதான **பீட்டா கதிர்**[6] என்பது ஒரு கனத்த தகட்டினூடும் புகுந்து சென்று ஒளிவீச வல்லதாகும். இக்

---

1. Conductor of Electricity.
2. Radio activity.
3. Thorium.
4. Alpha rays.
5. Helium.
6. Beta rays.

கதிரின் அணு ஒவ்வொன்றும், அணு என்று அறிவியலில் கணிக்கப்படும் ஒன்றில் இரண்டாயிரத்திலொருபங்கு பருமனுடையதாகத்தானிருக்கிறது. எனவே, ஒரு தகட்டினூடும் எளிதிற் புகுந்து சென்று ஒளிவீசவல்லதாயிருக்கிறது. (எக்ஸ்ரே) நுண்ணுழை கதிரி[1]லுள்ள மின்சார அணுக்களுக்கும் இவ்வணுக்களுக்கும் எவ்வித வேறுபாடுமில்லை யென்று கருதப்படுகிறது.

காற்று மற்ற வெறுங் குழா[2] யொன்றிற் செலுத்தப்பட்ட மின்சார அணுக்களைச்[3] சட்டென இயக்குவித்தாலும், இயக்க நிலையிலிருந்து தடுத்தாலும், "எக்ஸ்ரே" என்ற நுண்ணுழை கதிர் உண்டாகின்றது. அஃதேபோல், மேற்குறித்த "பீட்டா கதிர்களின்" அணுக்களிற் சிலவற்றைச் சட்டென இயக்கினாலும், வெடித்து விரைவாக வெளிப்படச் செய்தாலும், காமா[4] என்ற மூன்றாவது வகைக் கதிர் உண்டாகிறது.

முத்திறப்பட்ட இக்கதிர்களின் முதன்மையான பயன் காற்றுடன் கலந்து அதை மின்சாரஞ் செலுத்தியாகச் செய்வதுதானென்று முன் கூறப்பட்டது. கதிரி இயக்கத்தினால் கதிரி அணு ஒவ்வொன்றும் ஒரு நொடிக்கு 50,000 மைல்கள் விழுக்காடு செல்லக்கூடிய வேகத்துடன் ஹீலியம் அணுக்களை வெளியாக்குகின்றது. எனவே, கதிரியணு ஒன்றை ஒரு குழாய்போன்ற மூடப்பட்ட பொருளினுள் அடைத்துவைத்தால், அதிலிருந்து புறப்படும் ஆல்பா கதிர்கள் (ஹீலியம்) அக் குழாயின் புறங்களை இடைவிடாமல் நாடோறும், திங்கடோறும், ஆண்டாண்டு தோறும் தாக்கிக்கொண்டேயிருக்கும். இவ்வாறு தாக்கிக்கொண்

1. X-rays.
2. Vacuum tube.
3. Electrons.
4. Gamma rays.

டிருப்பதால், இரும்பைச் சம்மட்டியினால் அடிப்பதனால் எவ்வாறு இரும்பு சூடேறுகிறதோ, அவ்வாறே, இந்த அணுக்களின் ஓயாத் தாக்கலால் அக் குழாய்போன்ற பொருளுஞ் சூடேறுகிறது. அன்றியும் அப் பொருளைச் சூழ்ந்துள்ள பொருள்களும் ஒரு சிறிது சூடேறுகின்றன.

குறிப்பிட்ட சில மருந்துகளை ஒரு தகடுபோன்ற பொருளின்மீது தடவி அதன்மீது கதிரியணுக்கள் தாக்குமாறு செய்தால், ஒவ்வோர் அணுவானது தாக்குகின்ற இடத்திலும் ஒரு சிறு ஒளி உண்டாவதைக் காணலாம். ஆனால் அவ்வாறு காண்பது பூதக்கண்ணாடியினாலேயன்றி நம் இயற்கைக் கண்களால் முடியாது. கண் பார்வைக்கு, இடைவிடாமல் மின்றெரியும் அழகான ஓர் ஒளி வீசுவதாகவே புலப்படும்.

இனி இவ்வாறு ஒரு தகட்டின்மீது செலுத்தாமல் "சல்பைஃட் ஆப் சின்க்"[1] என்ற பொருளோடு கலந்துவிட்டால் அப் பொருளின் ஒவ்வோர் அணுவும், கதிரியணுவிற்கு ஒரு தகட்டைப்போல் பயன்படுவதால், ஒளிவிட்டெரியும் பசைபோன்ற கலவைப்பொருள் உண்டாகிறது. இதுவே இருளிலும் ஒளி வீசிச் சுற்றுப் பொருள்களை வேண்டிய அளவுக்குப் புலப்படுத்துவதாகும். இதுவேதான் கடிகாரம் முதலிய இருளிற் பயன்படும் கருவிகளின் முகங்களிற் றடவப்பட்டு வருவதாகும்.

இனி, அண்மையில் நடைபெற்ற ஐரோப்பியப் பெரும் போரில், 'செப்ளீன்'[2] என்ற ஜெர்மானிய வானஊர்திகள்[3] பறந்துசென்று கீழுள்ள நாடுநகரங்களில் வசித்துவந்த ஒரு பாவமுமறியாத ஏழைமக்கள்மீது வெடிகுண்டுகளை யெறிந்து இடர்விளைவித்து வந்ததைப்பற்றி யறிந்திருக்கலாம். இவ்

1. Sulphide of Zinc. 2. Zeppelin. 3. Aeroplane.

வூர்திகள் ஜெர்மன் மன்னரான கெய்ஸர் உவில்ஹெல்ம்[1] என்பவராலும் அவருடைய படைகளாலும் அழிவற்றன என்று கருதப்பட்டுப் பெருமையாகப் பாராட்டப் பெற்றவை. இத்தகைய ஊர்திகள் ஒவ்வொன்றையும் நள்ளிரவில் ஒரு சிறு ஆங்கில வானஊர்தி பின்தொடர்ந்து சென்று அழித்துக் கீழ் வீழ்த்தியதும் யாவரும் அறிந்த தொன்றே. அழிவற்றதாகக் கருதப்பட்ட அரக்க ஊர்திகள் ஒரு சிறு ஊர்தியால் இருளில் அழிவுறுவதற்கு உதவி செய்தது யாது? கதிரியிலிருந்து வெளிப்படும் ஆல்பா கதிர்களே யென்றால் அது வியப்பன்றோ! பின் சென்ற சிறு ஊர்தியின் ஒட்டுங் கருவிகளினும் போர்க்கருவிகளினும் கதிரிப்பசை தடவப்பட்டிருந்தமையால் எளிதில் அக் கருவிகள் பெரிய ஊர்தியை இருளில் தொடர்ந்து தாக்கி யழிப்பதற்கு ஏற்றவையாயின. இவ் ஆல்பா கதிர்கள் அச் சிறு ஊர்தியிலுள்ளவர்களுக்கு மட்டுமே வேண்டுமளவிற்கு ஒளியை ஈந்து வந்தனவேயன்றி, அதிகமான ஒளியை அளித்துத் தொடரப்படும் செப்ளீனிலுள்ளோர்க்குக் காட்டிக்கொடுக்கக் கூடாதனவாயிருந்தது கூர்ந்து நோக்கிக் கருதத்தக்க தொன்றாகும். இக் கதிரி யணுக்களேயன்றி ஏனைய ஒளிவிடுங் கருவிகளாயின் செப்ளீனிலுள்ளோரால் எளிதிற் கண்டுபிடிக்கப்பட்டுச் சிறு ஊர்தி அழிவுறற் கேதுவாயிருந்திருக்கும் என்பது திண்ணம். கதிரி பெரும் போரிற் புரிந்த பேருதவி இதுவேயாம்.

மற்றொரு வகையிலும் கதிரி உதவிபுரிந்துளது. போரிலிருந்து எண்ணற்ற வீரர்கள் முடக்குவாயுவினால் தாக்குற்றுத் திறனழிந்து மீண்டனர். இம் முடக்குவாயுவென்பது நீர்ப்பண்புடையதாகிய ஒரு பொருள் உடலிலுள்ள செந்நீரிற் கலப்புற்றுக் கணுக்கள்தோறும் சென்று தங்கிக் கரடு

1. Kaiser Wilhelm.

தட்டி விடுவதுதான் என்று நம்பப்படுகிறது. இத்தகைய கரடு தட்டின இடங்களின்மேற் கதிரியின் கதிர்களை ஏற்ற வாறு செலுத்தி வருவதால் அவைகள் கரைந்து எளிதில் தீர்ந்தொழிகின்றன என்பது மருத்துவ நூலோர் கருத் தாகும். "பாத்"[1] "பக்ஸ்டன்"[2] முதலிய இடங்களிலுள்ள நீரூற்றுக்களில் நீராடுவதால் பல நோய்கள் தீருவதாகக் கேள்விப்படுகிறோம். அந் நீரில் ஓரளவிற்குக் கதிரியியக்கம் இருப்பதினலேயே அதற்கு நோய்தீர்க்கும் பண்பு அமைந் திருத்தல் வேண்டும். இன்னும் பிளவை முதலிய கட்டிகள் தீர்வதற்கும் கதிரி பயன்படும் என்றும் நம்பப்படுகிறது.

எதிர்பாராத வகையில் இவ்வாறு கனிப்பொருளாய கதிரி யென்பது பகையழிக்குங் கருவியாகவும், நோய்தீர்க் கும் கருவியாகவும் அமைந்தது ஒரு புதுமையன்றோ!

---

1. Bath. 2. Buxton.

# ரு. கடன் கோடல்

[திரு. டி. எஸ். கந்தசாமி முதலியார், எம். ஏ]

கடன் கோடல் மிகக் கேடு பயக்கும் தீயதொரு பழக்கம். அப் பழக்கத்துக்கு மக்கள் பலர் அடிமையாகி அவ் வடிமையினின்றும் மீளும் வழியறியாது அல்லற்குட்பட்டு உழல்கின்முர்கள். சில நாடுகள் கடன்கொண்டு அக் கடனைத் தீர்க்கமாட்டாது விழித்துக்கொண்டிருக்கின்றன. கடன் கொண்டவன் படும் துன்பத்திற்கோர் எல்லையில்லை. வீரருள் வீரனுகிய இலங்கை மன்னன் பட்ட துன்பத்தைக் கடன்பட்டான் கலக்கத்திற்கு உவமையாக்கிக் கூறினர் கவியரசர். நம் நாட்டு மக்களுள் கடன்படாது வாழ்கின்றவர் மிகச் சிலர்; கடன்பட்டு உழல்கின்றவர் எண்ணிறந்தவர்.

கடன்கொண்டார் கூட்டத்தைச் சிறிது ஆராயின், அக் கூட்டத்துள்ளே, நிலக்கிழவரையும், வணிகர்களையும் தொழிலாளர்களையும், வழக்கறிஞர்களையும், அரச வினைஞர்களையும் மற்றும் பலரையும் காணலாம். கடன்கொண்டாரை ஒரு தனிப்பிறப்பாளர் என்னலாம். அவர்கள் ஒரு தனித்த இனத்தினர். மக்களைக், கடன்கொள்வாரும், கொடுப்பாரும் என இரு பெரும் பிரிவுக்குட்படுத்தலாம். ஆகவே அவர்கள், வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள்; தனித் தனி மெய்ச்சாயலையுடையவர்கள். ஆங்கிலப் புலவர் ஒருவர், மக்களைக் காக்கேசியர், மங்கோலியர், ஆரியர், அநாரியர் என்று பிரிப்பதில் பயனில்லை என்றும், அவ்வம் மக்கட் கூட்டத்துள்ளும் கடன் கொள்வாரும், கொடுப்பாருமாய இருவகை மக்களைக் காணலாமென்றும், மக்களை அவ்விரு பிரிவின்கீழ்ப் படுத்தலே ஏற்புடைத்தென்றும் கூறுகிமுர். அவருள்ளும் கடன் கொள்வாரே உயரிய மக்கள் என்றும்

கூறுகிறார். கடன் கொடுப்பவன் மேலும் மேலும் தன் பொருளைப் பெருக்குவதில் கருத்துடையனாய்ப், பகலென்றும் இரவென்றும் பாராது, வட்டிகருதி முதலிழக்கும் உளம் வாய்ந்து, கடும்பற்றுள்ளமுடையனாய், தன் பெட்டியில் பொருளிருப்பதனால் 'வட்டியின்றி முடங்கியிருக்கின்றதே' எனப் பெரிதும் கவன்று, வட்டிக்குக் கடன்வாங்குவாரை எதிர்நோக்கி நிற்கின்றான். அந்தோ! இவன் ஏழை! கவலைக்கோர் இருப்பிடம், கவலைக்கே பிறந்தவன்.

கடன் கொள்வானோ, 'கடனும் கிடைக்கும்; கொடுப்பாரும் பலர் உண்டு இவ்விரிந்த உலகத்தில்' என்று எண்ணும் மதுகையுடையனாய், வட்டிக்கு வாங்கப்பட்டதாயினும், "செல்வத்துப் பயன், துய்த்தலே" என்று கருதி அதை ஐம்புலநுகர்ச்சிக்குச் செலவிட்டு இன்பம் துய்க்கின்றான். பொருளைப் பலர்க்கும் வழங்குகின்றான். கண்டாரெல்லாம் அவனைக் கன்னன் என்கிறார்கள். நாளைக்கென் செய்வோம் என்னும் கருத்து அவன் நெஞ்சத்தில் எழுவதில்லை; அழுத்துவதுமில்லை. எப்போதும் இன்பத்தில் ஆழ்ந்துள்ளான்; கவலையின்றித் திரிகின்றான். அக் கடன் கொள்வார் கூட்டத்துள் இன்னும் வேறு சிலர் எப்பொழுதும் பட்டும் துகிலும் உடுத்துத் திரிவர்; அமிழ்தன்ன அடிசிலுண்டு ஏமாப்பர். அத்தகையாரைக் கண்ட அளவில் கவலைக்கே கொள்கலமாம் கடன்கொடுப்பான், இத்தகையாருக்கு நம் பொருள் சிறிதேனும் கடன் கொடுக்கப்பட வேண்டுமென ஆசை கொள்கிறான். அவர் வாய்திறந்து கடன்கேட்டுவிட்டாலோ, தனக்கு ஒரு பெரும்பேறு வாய்த்ததுபோல் மதித்துத் தடை சொல்லாது கொடுக்கின்றான்.

இன்னும் சில கடன்கொண்டாருடைய நடையையும் உடையையுங் கண்டார் பலர், அவரைச் செல்வத்திற் பிறந்த செல்வத் தோன்றல்கள் என மயங்குகிறார்கள்.

'கடன் கொடுக்கவும் வேண்டாம்; கொள்ளவும் வேண்டாம்' என, ஆங்கிலப் புலவர் ஒருவர் அறிவுமொழி கூறுகிறார். கடன்கொள்ளும்போது, ஒருவனுக்கு அது கொடுப்பானிடத் துளதாய பற்றும், நன்மதிப்பும், அதைக் கேட்டக்கால் இருப்பதில்லை. இத் தன்மை இன்றுதான் மக்களிடத்துத் தோன்றிய புதியதோருணர்ச்சியில்லை; 'கலித்தொகை'க் காலத்திலேயே உள்ளது.

"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனும்தாங்
கொண்டது கொடுக்குங்கான் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை; அஃதின்றும்
புதுவ தன்றே புலனுடை மாந்திர்."

என்ற கலியில், தலைமகன் தலைவியிடத்திற் காதலிரந்து நிற்கும்போது, அவற்கு உண்டாய முகமலர்ச்சியும், மென்மையும், தலைவி தலைமகனைப் பிரிவதற்கு அஞ்சி அவனைத் தன்னுடனிருக்குமாறு இரந்தக்கால் அழிவதைக், கடன்கொள்வார் கொள்ளுங்கால் கொள்ளும் முகமலர்ச்சி பின் அதனைக் கொடுத்தார் கேட்குங்கால் அழிவதை நிகர்க்குமென அழகு பிறங்கக் கூறப்பட்டுள்ளது.

பெருந் திரளான நிதியத்தைக் குவியல்போல் திரட்டல் ஒருவர்க்கு இயலாததாயிருக்கலாம். ஆனால் யாரும் கடன் கொள்ளாது இருக்கலாமே. 'தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்' எனக் கூறினர் ஆன்றோரும். தாளாற்றலால் பெற்ற பொருளைத் துய்த்தல் சரி, அதனை அறவும் செலவிட்டு மேலும் கடன்கோடல் சரியா? சரியன்று, அறமுமன்று.

தமிழ்நாட்டு மக்கள் பெரும்பாலும் தத்தம் வரவும் செலவும் நோக்காதும், மனம்போம் நெறியில் சென்றும், பொருளைச் செலவிட்டுக் கடன்பட்டுழல்கின்றார்கள்.

"ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லே
போகா றகலாக் கடை."

என்ற பொய்யாமொழி அரசர்க்கும் பொருந்தும்; குடி கட்கும் பொருந்தும். அந் நெறியை அரசரும், குடிகளும் ஒருங்கே பின்பற்றினுல் அவர்களுக்குப் பெரிதும் நன்மை விளேயும். அந் நெறியைக் கடைப்பிடியாமையினுலேதான், வணிகரும், நிலக்கிழவரும், அரசரும், அமைச்சரும், சிற் சிலபோது செய்வதின்னதென் றறியாது தலைமேல் கைவைத் துத் துன்பமெய்துகின்றனர்.

நம் நாட்டுமக்கள், மணம் என்ருல் ஆயிரமும், விழவு என்ருல் ஐயாயிரமும் எண்ணுது செலவிட்டு, இறுதியில் இடும்பையிற் படுகின்ருர்கள். சடங்குகள் வேண்டும்; ஆனுல் அச் சடங்குகளுக்கு ஓர் எல்லேயும் வேண்டும். சடங்கு. செய்வானது பொருளளவிற்கு ஏற்றபடி செய்யப் படல் வேண்டும். சடங்குகளின் எண்ணம் மிகக்குறைவு படவேண்டும். பயனில் சடங்குகளேப் போக்குதல் வேண்டும்.

'வருவாயுட் கால் வழங்கவேண்டு' மென்று ஆன்ருேர் கூறியிருப்பதைக் கடன் கொள்வார் தங் கருத்தில் ஊன்றி நோக்குதல் வேண்டும். அம் முதுமொழிப்படி ஒவ்வொரு வரும் தத்தம் வருவாயில் காற்பகுதியையே வறியோர்க்கு வழங்குதல் வேண்டும்; காற்பகுதியை யேனும் மீதி வைத் தல் வேண்டும். கண்ணிற்கண்ட பொருள் எல்லாம் வாங் குதல்வேண்டுமென்கின்ற பெரும்பித்து ஒழிதல் வேண்டும். செட்டாக ஒவ்வொருவரும் செலவிடல் வேண்டும்.

நிலக் கிழவர்களும், உழவர்களும், இக்காலத்து உழவு ஊதியம் தருவதில்லே எனக் கூறுகிருர்கள். பயிர்த்தொழில் செய்வாரிற் பெரும்பாலோர் கடன் வாய்ப்பட்டிருத்தலே

அவர்க்கு அத் தொழில் ஊதியம் தாராமைக்குக் காரணம். பயிர்த்தொழில் செய்வார், உழவு காலமுதல் அறுவடை காலம் வரையில், கையில் பணமில்லாது கடன் வாங்குவதாகவே இருந்தால் பயிர்த்தொழிலும் அதன் பற்பல வினைகளும் அதனதன் பருவத்தில் எவ்வாறு நடைபெறும்? ஆதலின் மக்கள், வாழ்க்கையில் பொருட் செட்டையும், தொழிற்செட்டையும் கைப்பற்றினல் பெருமையை யடையலாம். நம் நாட்டு மக்கள் மடிமை யெய்திச் சோம்பித் திரிகின்றனர். தொழில் செய்வதில் அவர்க்கு விருப்பமில்லை. அவர்கள் தங்களுக்கு யாராவது ஒருவர் வலிந்து வந்து வாயில் உணவு ஊட்டவேண்டுமென்று கருதுகிருர்கள். ஊக்கமுடையானுக்கே கடவுள் துணை செய்கிருர். மடியுளானுக்கு மாமுகடி துணை செய்கின்ருள்.

தமிழ்நாட்டு மக்கள் பசித்திருந்தால், அஃது அம் மக்களின் குறை; அது மடிமையின் பிள்ளை. கைசெய்வார்க்கு நிலம் பெரிதும் பயனளிக்கும்.

இன்பத்தை விரும்புவார் கடன் வாங்காதிருத்தல் வேண்டும்; பொருளைச் செட்டாகச் செலவு செய்தல் வேண்டும்.

# ௬. புறநானூறும் பழந்தமிழ் நாடும்

[இளவழகனார்]

தமிழ்மக்கள் செய்த அருந்தவப் பேற்றால், அரிய சில பழந்தமிழ் நூல்கள் பண்டைக் காலத்தில் தோன்றி, இப்போதும் நின்று நமது தமிழகத்தில் உலவுகின்றன. அவற்றைக் காணுந்தொறும், ஆராயுந் தொறும், ஆராய்ந்து அரும் பேருண்மைகளை உன்னுந் தொறும், அவ்வுணர்ச்சியை இடையிடையே உணருந் தொறும் பேருணர்ச்சியும் பெருவியப்பும் பேரின்பமும் ஒருங்கே தோன்றுகின்றன. பண்டைக்கால மென்று இங்கே கூறப்படுவது தமிழகத்திற் பண்டு நிகழ்ந்த சங்க காலத்தையேயாம்; இச் சங்க காலம் என்பது, தலைச் சங்கம் எழுந்த நாள்தொட்டுக் கடைச் சங்கம் இற்ற நாள் ஈறாக, முச் சங்கங்கள் நடைபெற்ற தனித் தமிழ்க் காலமாகும். தலைச் சங்க காலத்துக்குமுன் நம் தமிழகம் எவ்வாறிருந்த தென்பதை அறிந்துகொள்ளுதற்கு நமக்குச் சான்றுகள் கிடையா. தலைச்சங்கம் இடைச் சங்கம் கடைச்சங்கம் என இம் முச்சங்கங்களும் நிகழ்ந்த மொத்தக்காலம் கி. மு. முப்பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவு துவங்கிக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுவுகாறுஞ் சென்ற நாலாயிரம் ஆண்டுகளாகும்; சங்க காலமான இந் நாலாயிரம் ஆண்டுகளே தமிழகத்தில் தமிழுக்கு ஆக்கமான நற்காலமாய் விளங்காநின்றது. அதன் பின், ஒரு முந்நூறு ஆண்டுகள் புத்த காலமாகவும், அதற்கடுத்த முந்நூறு ஆண்டுகள் சமண காலமாகவும், பின் அறுநூறு ஆண்டுகள் சைவ வைணவ காலமாகவும், நானூறு ஆண்டுகள் சுமார்த்த காலமாகவும், கடைசி இருநூறு ஆண்டுகள் ஆங்கில காலமாகவும் காலம் மாறி

விட்டது. சங்க காலத்தை அடுத்து நிகழ்ந்த புத்த காலம் முதல், இந்நாளளவில் கண்ணெதிரிற் காணப்படும் ஆங்கில காலம் ஈருக ஒன்றன்பின் ஒன்ருய் அடுத்தடுத்து வந்த காலங்களிலெல்லாம் அருமைச் செந்தமிழணங்கு மாறி மாறிப் பட்ட அரும்பாடு மிகவும் அஞ்சத்தக்கதாகவே இருக்கின்றது. சங்க காலத்தில் அருமை பெருமையாய்ப் பாராட்டப்பட்ட ஆருயிர்த் தமிழ்த்தாய் இக்காலங்களில் நினைத்தாலும் நெஞ்சம் நீராகும் வகையாய், எண்ணிஞலும் எண்ணம் ஏங்கி யழியும்படியாய்ச் சீர்மாறுபட்டு நிலைகுலைவ தாயிஞல், இவ்வளவிற்கும் ஏது தமிழ்மக்கட்குள்ள கவலை யின்மையேயாகும்.

தமிழ்மொழியின் உண்மை யியல்பையும், பெருமை யையும், அதன் கொள்கை நுட்பங்களையும், வாழ்வையும் நாம் அறிந்துகொள்ள வேண்டுமாஞல், மேற்காட்டிய ஆங்கில காலம், சுமார்த்த காலம், சைவ வைணவ காலம், சமண காலம், புத்த காலம் என்னும் ஏணிப்படிகளைக் கடந்து, மீதேறிச் சங்க காலம் என்னும் அரண்மனை மேடையில் நுழைதல் வேண்டும். அங்குச் சென்ருல் மட்டுமே சீரிய செந்தமிழன்னையின் திருவோலக்கத்தைக் காணப் பெறலாம். பளபளவென்று பளிங்குபோல் நிழலாடி மின்னும் சங்கப்புலவர்களின் உள்ளமென்னும் மணி யிருக்கையின்மீது, ஒல்காப் பெரும்புகழ்த் 'தொல்காப்பியம்' என்னும் பொன் நாணில், எண்ண எண்ண இன்பவூற் றெடுக்கும் 'பத்துப்பாட்டு' 'எட்டுத்தொகை' 'பதினெண் கீழ்க்கணக்கு'களின் செந்தமிழ்ப்பாட்டுகள் என்னும் முத் தும் பவளமும் சங்குமான ஒளிமணிகள் கோத்தெடுக்கப் பட்ட மணிமாலை யணிகளை அணிந்து அமர்ந்து, மங்கைப் பருவமெய்திய மங்கல வாழ்வுடன் அங்கு அரசிளங்குமரி

யாய்த் தனிப்பெருந் தமிழ்த்தேவி வீற்றிருப்பாள். அங்குச் சென்று பார்க்குந் தவத்திரு உடையாரே அத் தமிழ்த் தேவியின் அருட்டிரு வுடையராவர். சங்க காலத்துக்கு முன்னெல்லாம் தமிழ்ச் செல்வி பேதைப் பருவமுடையவளா யிருந்திருக்கின்றனள். சங்க காலத்தில் அவள் கவின்மிக்க மங்கைப் பருவமெய்தி மங்கல வாழ்வுடன் நாலாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கின்றனள். இன்னும் அவள் இளமையுடையவளாகவே இருக்கின்ருளென்ருலும், கடந்த ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளாகத் தன் தமிழ் மக்கள் ஊக்கங் குறைந்தமையை எண்ணி, அவர்கட்கு அவ் வூக்கச் சுடர் உண்டாகுங் காலத்தை எதிர்பார்த்துத் தனது மங்கல வாழ்வைத் துறந்திருக்கின்ருளென்றே கூறல் வேண்டும்.

ஆராய்ந்து பார்க்குங்கால், எல்லேயில்லாத தனிப் பேரழகு வாய்ந்த தன் இளமைப்பருவத்தில் அவ்வழகையும் இளமையையும் ஒரு பொருட்படுத்தாமல் வெறுத்து, அனைவருங் கண்டு நெஞ்சுருகுமாறு துறவுபூண்ட மாதவி மகள் மணிமேகலே, அங்ஙனந் துறவுபூண்ட காலம் சங்க காலம் இறுதியுற்ற காலமேயாகுமென்பது நன்கு விளங்கும். அழகு மிக்க மணிமேகலே இளமையில் துறவு பூண்டதைக் கண்டே, தவா அழகு மிக்க தனிப்பெருந் தமிழ் மங்கையும் அவளுக்குத் துணையாய் அவளுடன் துறவு பூண்டனள் போலும்! எனவே, நம் தமிழ்மகள் துறவுபூண்டு சங்ககாலம் இறுதியுற்றமைக்கு ஏது, மணிமேகலேயின் துறவுக்கு ஏதுவாக அஞ்ஞான்று நம் தமிழகத்தில் நிகழ்ந்த கண்ணகி யின் கற்பு நிகழ்ச்சியேயாம் என்பது இனிது பெறப்படும். ஆ! நம் பண்டைத் தமிழ் வீரப் பெண்தெய்வமாகிய கண்ணகித்தாயின் கற்புச் சீற்றமே, அச் சீற்றத்தின் நுண் பேராற்றலே, கடந்த ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளாகத் தமிழ்ப்பெருந்தேவி கொடும் பெருந்துறவு பூண்டமைக்கும்,

தமிழ்ப் பெருநாடு சீரற்ற கேடு உற்றமைக்கும் உரிய ஏதுவாகும் என்பது மெய்யே போலும்! மெய்யே போலும்!! எனவே, பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் சிறிது நினைவுமாறிச் செய்த தவறிய செயலால், அருமந்த தனித் தமிழ்நாடு கற்புத்தெய்வமான கண்ணகி நல்லாளின் கடுஞ் சீற்றத்தாக்கும் இளந்திருவாய்ந்த பேரழகுச் செல்வி யான தனித்தமிழ்த்தாயின் கொடுந் துறவுக்கும் உள்ளாகி, இடைக்காலங்களிற் பட்ட அல்லல் அம்மம்ம போதும்! போதும்!! கண்ணகித்தாயின் சீற்ற நுண்ணூற்றல் சிறிது தணிவுற்றதோ என்னவோ தெரியவில்லை; தனித்தமிழ்த் தேவியின் துறவுள்ளமுஞ் சிறிது மாறி மங்கலத் தனி வாழ்வில் நுழைவுற்றது போலும்! பழைய சங்க காலத்தின் விளக்கம் சில ஆண்டுகளாக இப்போது விளக்கமுற்றுவரக் காண்கின்றோம்.

இனிச் சங்ககால மெனப்படும் பழைய நாலாயிரம் ஆண்டுகளில், தலைச்சங்கம் நிகழ்ந்த முதற் காலத்திலும் இடைச்சங்கம் நிகழ்ந்த இடைக்காலத்திலும் கடைச்சங்கம் நிகழ்ந்த இறுதிக் காலத்திலும் ஆசிரியர் தொல்காப்பியனார் முதலாகச் சிறந்த நல்லிசைப் புலவர் பலர் தோன்றி, அரிய நூல்கள் பலவும் பாட்டுகள் பலவும் இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் தலைச்சங்க இடைச்சங்க காலங்களில் எழுந்த அளவிறந்த நூல்களுள் பாட்டுகளுள், இலக்கண நூல் தொல்காப்பியமும் ஏனைச் சில தனிப்பாட்டுகளும் நீங்க லாக ஏனையவெல்லாம் நம் கண்ணுக்குக் காணமல் மறைந்து போயின. அதுமட்டுமன்றி, இறுதியாய்த் தோன்றிய கடைச்சங்க காலத்து நூல்களுள்ளும் இப்போது நமக்குக் காணப்படாதன பல. ஆனல் கடைச்சங்க காலத்தார் தங் காலத்தெழுந்த நூல்களையும் பாட்டுகளையும் தொழில்,

அளவு, பாட்டு, பொருள் என்பனவாக ஒவ்வோரியையு பற்றிச் சில பிரிவுகளாகத் தொகைப்படுத்திப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் பெயர்களால் வழங்குவாராயினர். அவற்றுட் பத்துப்பாட்டு என்பன :

" முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

என்னும் வெண்பாவால், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பத்துப் பாட்டுகளாகும் என்பது தெரிகின்றது.

" நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்தும் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை."

என்னும் மற்றொரு வெண்பாவால் எட்டுத்தொகையாவன : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாமென்பது பெறப்படும். இங்ஙனமே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாவன : நாலடியார், நான்மணிக் கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணையைம்பது, திணைமொழியைம் பது, ஐந்திணையெழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக் குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பனவா மென்பது,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொற் காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

என்னும் வெண்பாவால் தெளியப்படும். இம் மூவகைப் பிரிவுகளுள், எட்டுத்தொகையெனத் தொகுக்கப்பட்டிருக்கும் நூல்களுள் ஒன்றுதானும் ஓராசிரியராற் செய்யப்பட்டதாய்க் காணப்படவில்லை; ஒவ்வொன்றும் பண்டை நல்லிசைப்புலவர் பலராற் செய்யப்பட்ட பாட்டுகளின் தொகுதியாய் விளங்குகின்றது. இங்ஙனமாகக் கடைச் சங்கத்துப் புலவர்கள் அரிய பழம்பாட்டுகளைத் தொகைப் படுத்தி வைத்திராராயின் இச் சிறு நூல்களையும் நாம் இக் காலத்திற் காணப்பெறாமல் அலமந்து போயிருப்போம்.

இனி, இங்குக் காட்டப்பட்ட இச் சங்கநூல்கள் எல்லாமும் பழந்தமிழ் நாட்டின் உண்மைகளை நன்கு தெரிவிப்பனவேயாகும். ஆயினும், இந்நூல்கள் அகமெனவும் புறமெனவும் பகுத்துணரப்படும் பண்டைப் பொருளிலக்கணத்தின் வழியவாய் இயற்றப்பட்டிருத்தலின், நாட்டினியல்புகளை விரித்துரை செய்வனவான புறப்பொருளிலக்கணத்தைப்பற்றி யெழுந்த நூல்களே, பழந்தமிழ் நாட்டின் உண்மைகளை நன்கு தெரிந்துகொள்வதற்குப் பெரிதும் பயன்படுவனவாம். எனவே, இச் சங்க நூல்களில் அங்ஙனம் புறப்பொருள் வழிபற்றி யெழுந்த சிலவற்றுள்ளும் புறநானூறு என்னும் நூலே தலையானதாகும். இந்நூல் 'புற'மெனவும், 'புறப்பாட்'டெனவுமே வழங்குதலுமுண்டு. 'பதிற்றுப் பத்து' என்னும் வேறொரு தொகை நூலும் இவ்வாறே புறப் பொருளிலக்கணம்பற்றி யெழுந்து நாட்டினியல்பை நன்கு புலப்படுத்துவதேயாயினும், அது சேர அரசர் பதின்மரைப் பற்றி மட்டும் பாடுதலுடைமையின், சேர சோழ பாண்டிய

ரென்னும் மூவகை யரசர்களையும், அம் மூவகை நாட்டுப் பெருமக்களையும் நிரம்பவும் பாடுதலுடைய புறநானூற் றைப்போல் ஈண்டுப் பெரிதும் பயன்படுவதாகாது. 'பத்துப் பாட்'டிற் 'பொருநராற்றுப்படை' முதலான சில பாட்டுகள், சோழ பாண்டிய அரசர்களையும் ஏனைச் சிலரையுமே பாடா நின்றன. ஏனை நூல்களிலுஞ் சில இவற்றை யொப்பனவே யாகும். எஞ்சிய தொகை நூல்களெல்லாம் பொதுவாகப் பொருளிலக்கணத்தின் இயல்புகளைப் பெயர் கூறாமல் ஓதி விளக்கிச் செல்வனவாயிருக்கின்றன. ஆனாற் 'புறநானூ'றோ வெனின், சங்ககாலத்திருந்த சேர சோழ பாண்டியர்க ளான முடியுடை யரசர்களில் எத்தனையோ பலரையும் அங்ஙனமே சிற்றரசர், குறுநிலமன்னர், வள்ளல்கள், புலவர் கள், அமைச்சர், சேனைத்தலைவர், வீரர் முதலானவர்களிற் பலரையும் பெயர்விளங்கக் குறித்தோதி அவர்களுடைய வரலாற்றுண்மைகளை உள்ளவாறே விளக்குதலோடு அவர் களிற் பலரை முன்னிலைப்படுத்தி யோதும் பாட்டுக்களையும் மிகுதியாக உடையதா யிருக்கின்றது.

மேலும், இந் நூலில் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டு களுக்குமுன், அதாவது தலைச்சங்க காலத்திற், பாடப்பட்ட அரிய பழம்பாட்டுகளுந் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இந் நூற் கடவுள் வாழ்த்துப் பாட்டை அடுத்து, 'மண்டிணிந்த நிலனும்' என்னும் முரஞ்சியூர் முடிநாகராயர் பாட்டு முதலிற் காணப்படுகின்றது. இது சேரமான் பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதனை முன்னிலைப்படுத்துப் பாடிய அருந்தமிழ்ப் பாட்டாகும். சேரமான் உதியஞ் சேரலாதன் என்னுஞ் சேரமன்னன் பெருஞ்சோற்று உதியஞ் சேர லாதன் எனச் சிறப்பிக்கப்பட்டதன் வரலாறு, அவன் 'பாண்டவர்' ஐவர்க்கும் 'கௌரவர்' நூற்றுவர்க்குமிடையே பண்டு நிகழ்ந்த பாரதப்போரில் அவ்விருதிறத்தார் படை

கட்கும், அப் போர் நிகழ்ந்த பதினெட்டு நாட்களிலும், பெருஞ்சோறு வழங்கினமையே யாகுமென்பது,

" அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"[1]

என்று அம் 'மண்டிணிந்த நிலனும்' என்னும் புறப்பாட்டிலேயே முரஞ்சியூர் முடிநாகராயர் இதனை நன்கெடுத்துக் காட்டுமாற்றால் இனிது புலனாகின்றது. உதியஞ்சேரல் பாரதப்போரிற் பெருஞ்சோறு படைத்த இம் மெய் வரலாறு,

"உதியஞ்சேரல் பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை"[2]

என மாமூலனாராலும்,

" ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்"[3]

என்று இளங்கோவடிகளாலுங் கூறப்படும் ஏனைப் பழந் தமிழ் நூற்சான்றுகளானும் உறுதியாய்த் துணியப்படுகின்றது. ஆதலால் அங்ஙனம் பெருஞ்சோறு கொடுத்த சேரமான் உதியஞ் சேரலாதனும், அவனை முன்னிலைப்படுத்துப் பாடிய நல்லிசைப்புலவர் முரஞ்சியூர் முடிநாகராயரும் இந் நாட்டிற் பண்டு பாரதப்போர் நிகழ்ந்த காலத்தில் இருந்திருக்கின்றாரென்பது இனிது தெளியப்படுகின்றது.

இனி, இப் பாரதப்போர் நிகழ்ந்தகாலம் இன்ன காலமெனத் துணிதலில் இக்காலத்து வரலாற்று நூலாசிரியன்மார் பலரும் பலவாறு கூறாநிற்பர். 'தத்தர்' என்னும்

---

1. புறம், உ. 2. அகம், உருரு.
3. சிலப். வாழ்த்துக். உச.

ஆசிரியரொருவர் பாரதப்போர் கி. மு. ௧௨௫0-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததெனக் கட்டுரைப்பர். 'வேலந்தைக் கோபால ஐயர்' என்பார் ஒருவர், அற்றன்று; அது கி. மு. ௧௧௯௪-ஆம் ஆண்டிலேயே நிகழ்ந்ததாகுமென நிறுத்துக் கூறுவார். வேறு சிலர் கி. மு. ஆயிரத்திற்றான் அது நிகழாநின்றதெனப் பிடித்துப் பேசுவர். ஆனால், இன்னோரன்னவற்றையெல்லாம் பெரிதாராய்ந்து அக்கால அளவையைச் சில உண்மைச் சான்றுகளாற் றுணிந்த அறிஞர் வைத்தியர் M. A. L. L. B., என்பவர் அப் பாரதப்போர் நிகழ்ந்தது கி. மு. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னராம் என்று மெய்ம்மை நிறுவிப் 'பாரதப் போரின் காலம்'[1] என்னும் ஒரு கட்டுரையில் நடுவு உரையாநின்றார். இறையனாரகப்பொருளின் முதல் நூற்பா உரையில் முச்சங்க வரலாறு உரைக்குமிடத்தில் இப் பாரத காலத்து நல்லிசைப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர் தலைச்சங்க காலத்திலிருந்தாரென்று கூறப் பட்டிருத்தலானும், அவ்வுரையிலேயே ஆண்டெடுத்துக் காட்டப்பட்ட சங்கப்புலவர்களின் தொகைப்படி கணக்கெண்ணுங்கால், பண்டு நடைபெற்ற தலைச்சங்க காலம் அறிஞர் 'வைத்தியர்' என்பவர் ஆராய்ந்து காட்டிய பாரத காலக்கணக்குக்கு ஒத்து நிற்றலானும் அவர் காட்டும் பாரதப் போரின் காலக்கணக்கும் பண்டைத் தமிழ் நூற்சான்றுகளோடும் ஒத்து உண்மையேயாய் முடிதல் நன்குணரப்படுகின்றது. ஆகவே, இவ்வாற்றாற், பாரத காலத்துச் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை முன்னிலைப்படுத்துப் பாடிய அவன் காலத்துப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராய ரென்பவர் தலைச்சங்க காலத்தி லிருந்தாராதலும், எனவே புறநானூற்றில் முகப்

---

1. 'The Date of the Bharata Fight' in the Students Brotherhood Quarterly, Vol. VII. No. 4, Bombay.

பிற் காணப்படும் 'மண்டிணிந்த நிலனும்' என்னும் அவரது பாட்டு தலைச்சங்ககாலத்தெழுந்த பழம்பாட்டாதலும், அவ்வாற்றால் அத் தலைச்சங்க காலத்தெழுந்த மிகப் பழைய பாட்டுகளும் புறநானூற்றில் தொகுக்கப்பட் டிருக்கின்றன வெனப் படுங்கோள் உண்மையேயாதலும் இனிது பெறப் படுதல் காண்க.

இன்னும், இத் தென்றமிழ் நாட்டின் தென்பாலிற் பண்டு விரிந்து கிடந்த குமரி நிலப்பரப்பின் கண்ணதான பஃறுளியாறு கடல் கொள்ளப்படுமுன், அவ் யாற்றின் மணலைச் சுட்டி அஞ்ஞான்று அந் நிலப்பரப்பை அரசாண்டு வந்தோனான பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யென்பானை,

> " முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

என்றுகூறி வாழ்த்திசைக்கும் நெட்டிமையாரது பாட்டும் இப் புறநானூற்றிற் காணப்படுகின்றது. இவர் பாட்டுகள் வேறு சிலவும் இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. [1]இனிக் காரிகிழார், நெடும்பல்லியத்தனார் என்னும் நல்லிசைப் புலவர்கள் வேறிருவரும் இவர் காலத்திலிருந்து அப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியையே பாடிய அரிய பாட்டுக்களும் இப் புறநானூற்றிற் காணப் படுகின்றன. [2]'பஃறுளியாறு' கடல்வாய்ப் புக்கது கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரா மென்பது சிறந்த பல மெய்ச்சான்றுகள் கொண்டு இற்றைஞான்றை வரலாற்று நூலாசிரியர்களால் நன்கு துணியப்பட்டிருத்தலின் [1]புறநானூற்றின்கண் தொகுக்கப்பட்டிருக்கின்ற 'நெட்டிமையார்,' 'காரிகிழார்,' 'நெடும்பல்லியத்தனார்'

1. புறம்: கூ. 2. கஉ, கரு. 3. சு, சுசு.
1. மாணிக்கவாசகர் காலம், பக். சஎஅ.

என்னும் புலவர் பெருமக்களுடைய அருந்தமிழ்ப் பாட்டுகள் கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன், அஃதாவது ஈண்டுச் சங்க காலமெனப்படும் நாலாயிரம் ஆண்டுகளின் முற்பாதிக்கண் எழுந்தனவாதல் இனிது தெளியப்படும். எனவே, இவைகொண்டு 'புறநானூ' றென்னும் அரிய கடைச் சங்கநூலில், அக் கடைச்சங்க காலத்துக்கு முற்பட்ட மிகப் பழைய பாட்டுகளும் ஒருங்கு தொகுக்கப்பட்டிருக்கின்றன வென்னும் உண்மை சிறிதும் ஐயுறவின்றித் துணியப்படு மென்க.

இவ்வாறு இப்புறநானூற்றின்கண் நுவலப்பட்டுள்ள பாட்டுடைத் தலைவர்களும் பாட்டுரை புலவர்களும் ஏனையோரும் சங்ககால நாலாயிரம் ஆண்டுகளில் வேறுவேறு காலத்தவரா யிருத்தலுமன்றி, அவரனைவரும் வேறு வேறு சாதியாராயிருத்தலும் நினைவுகூரற்பாலது. பாட்டு கூறும் புலவர்களிற் பெண்பாலாருமுளர். மேலும், இந்நூலிற் காணப்படும் ஒவ்வொரு பாட்டும் அரியதோர் ஆராய்ச்சியுரையாய், இனிய இலக்கியச் சிறப்பும், இலக்கண விளக்கமும், இயல்பொரு ணுட்பமும், பழைய தமிழ்நாட்டின் அளவும், தோற்றமும், அதன் அரசியல்வகையும், மக்கள் வாழ்க்கை முறையும், புலவர்க்கும் புரவலர்க்கு மிடைப்படும் நன்கு மதிக்கற்பாடும், பழந்தமிழரின் ஒழுக்கப்பேறும், கடவுட் கொள்கையும், மகளிர் மாண்பும், அரும் பெரும் பழக்க வழக்கங்களும் நன்கெடுத் துரைப்பனவாய்க் காணப்படுகின்றன. ஆகவே, சங்க நூல்களெல்லாவற்றுள்ளும், ஏனையெல்லாத் தொகை நூல்களையும்விடப் புறநானூறு என்னும் இந்நூல் ஒன்றுமட்டுமே பழைய சங்க காலமான நாலாயிரம் ஆண்டுகளின் பழந்தமிழ் நாட்டுண்மைகளை நன்கு தெரிந்து கொள்ளுவதற்கு ஏற்ற கருவியாய் நிற்கின்றமை தேறப்படும்.

# ஏ. உயிரினங்களின் நிற வேறுபாடுகள்

[திருமதி, ஜெ. குணமாணிக்கம், எம். ஏ., எல். டி.]

நாம் ஒவ்வொருவரும் நுண்ணூலாராய்ச்சியாளரோ அல்லரோ ஆயினும், சிற்சில காலங்களிலாவது இயற்கை யழகில் ஈடுபடுகின்றோம். இயற்கையில் தோன்றும் பல்வகை நிறங்கள் நம் கண்ணையும் கருத்தையுங் கவர்கின்றன. கதிரவன் கீழ்த்திசையில் எழும்போதும், மேற்றிசையில் விழும்போதும் நீனிறவானம் நொடிக்கொருமுறை மாறி மாறி வெவ்வேறு நிறங்களைத் தோற்றுவிக்கக் கண்டு பெரு வியப்பெய்துகிறோம்.

வானத்தில் தோன்றும் நிறங்கள் நம் மனத்தைக் கவர்ந்து ஒருவகை உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குவதே போல் பல செடிகளும், மலர்களும், பறவைகளும், விலங்குகளும் தாம் கொண்டுள்ள பல்வேறு நிறங்களினால் நம் கண்களைக் கொள்ளை கொள்ளுவதுமல்லாமல் நமக்கு ஓர் உவகையையும் உண்டாக்குகின்றன.

முதல்நாட் காலையில் அரும்பாக இருக்கும்போது கண்களுக்குப் புலப்படாததோர் நிறமுடையனவாக இருந்து, மறுநாட் காலையில் மலர்ந்தபோது கண்களைக் கவரத்தக்க நிறங்காட்டும் பூக்கள் பல உள. இம் மலர்களைப் போன்று வண்ணாத்திப் பூச்சியும் முதல்நாளில் எவ்வித அசைவுமற்ற கூட்டுப் புழுவாக இருந்து அடுத்த நாளில் திடீரென்று பல்வகை அழகிய நிறங்களுடன் பட்டுப் பூச்சியாக விளங்குகிறது. பட்டுப் பூச்சி, சிறுவர் முதல் பெரியோர்வரை எல்லோர் கருத்தையும் தன் அழகிய நிறங்களால் ஈர்க்கின்றது.

பட்டுப்பூச்சியையும் மலரையும் போலல்லாமல் பல விலங்குகள் தாம் பிறக்கும்போதோ அல்லது பிறந்து சில நாட்களுக்குள்ளோ சிறிது சிறிதாக நிறம் மாறி ஒரு நிலையை அடைந்து இறக்கும் வரையில் அதே நிலையில் இருக்கின்றன.

எனவே, உயிர்வகைகளிடத்தில் இவ்வாறான நிற வேறுபாடு ஏன் இருத்தல் வேண்டும்? அஃது இவ்வுயிர்களுக்கு எவ்வகையிலாவது பயன் தருகின்றதா? என்னும் வினாக்கள் இயல்பாய் எழுகின்றன. இவ்வினாக்களுக்கு விடையைச் சிந்திப்போமாயின், கண்ணால் நிறங்களைப் பார்த்து ஏதுத் தெரியாமல் அடையும் வியப்பினைவிட நமக்கு உவகையும் வியப்பும் அளவு கடந்து எழும். இதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

உயிர்வகையின் நிறங்கள், கால வேறுபாடு, இடவேறுபாடு முதலியவற்றை யொட்டிப் பலவகையான மாறுதல்களை அடைவனவாக இருக்கின்றன. மாங்காய் பிஞ்சாக இருக்கும்போது பச்சையாகவும், பழுத்தபோது மஞ்சளாகவும் அல்லது சிவப்பாகவுமோ இருப்பதேன்? நம் நாட்டுக் கரடிகள் கருமையாகவும், துருவ மண்டலக் கரடிகள் தூய வெண்மையாகவும் இருப்பதெதனால்?

செடி, மரம், பூச்சி, புழு, பறவை, விலங்கு முதலியவற்றின் நன்மைக்காகவே இயற்கையில் இப்படிப்பட்ட நிறவேறுபாடுகள் இருக்கின்றன.

நிறங்களை அவற்றின் பயன் நோக்கிப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். அஃதாவது, தற்காப்பு நிறம்[1] என்றும், குறிப்பு நிறம்[2] என்றும், ஒப்புமை நிறம்[3] என்றும்,

1. Protective coloration. 2. Recognition Marks.
3. Mimicking coloration or Mimicry.

எச்சரிக்கை நிறம்[1] என்றும், போலி நிறம்[2] என்றும், கவர்ச்சி நிறம்[3] என்றும் அவற்றை வகைப்படுத்தலாம். இவற்றில் எச்சரிக்கை நிறம் போலி நிறம், குறிப்பு நிறம் முதலியவை செடி மரங்களைக் காட்டிலும் விலங்குகளிடத்தில் மிகுதியாய் விளங்குகின்றன.

இனித் தற்காப்பு நிறம் என்பதைப்பற்றி ஆராய்வாம். எல்லாச் செடி மரங்களின் பிஞ்சுகளும் காய்களும் பச்சையாக இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அவைகளின் மலர்களும் பழங்களும் பல்வேறு நிறங்களையுடையனவாயிருக்கின்றன. ஒவ்வொரு மரத்தின்பூவும் பழமும் வேறு வேறு நிறங்களாக இருக்க, அவற்றின் பிஞ்சுகளும் காய்களும் பச்சையாகவே இருப்பானேன்? இஃது அப் பிஞ்சுகளிலுங் காய்களிலுமுள்ள விதைகளின் பாதுகாப்புக்காகவேயாகும்.

பிஞ்சுகளிலும் காய்களிலும் உள்ள பிஞ்சுவிதைகள் அவை முதிர முதிர முற்றி, பிறகு வித்துக்களாகின்றன. இவ் வித்துக்கள் நன்றாக முதிராவிட்டால், அவற்றினின்றும் முளைகள் கிளம்பா. ஆகையால் அவை நன்றாக முற்றும் வரையில் ஒருவர் கண்ணுக்கும் படாமல் பாதுகாக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகின்றது. இக் காய்கள் இலைகளைப்போலவே பச்சையாக இருந்தால் அவை இருக்குமிடம் தெரிந்துகொள்வது கடினம். பறவை, விலங்கு முதலியவை இக்காய்கள் மரங்களில் இருக்குமிடம் தெரிந்துகொள்ள இயலாததால், அவற்றை அழிக்கமாட்டா. இவ்வாறாகப் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள நிறங்களே தற்காப்பு நிறம் என்னும் வகுப்பில் அடங்கும்.

---

1. Warning coloration. 2. Imitative coloration.
3. Alluring coloration.

வித்துக்கள் சரியாய் முதிர்ந்தபோது, காய்கள் தம் பசுமை நிறத்தைச் சிறுகச் சிறுக இழந்து, அந்தந்தப் பழவகைக்கேற்ற நிறத்தை அடைந்து பழங்களாகின்றன. இப்போது அப் பழங்கள் யாவர் கண்களுக்கும் தெளிவாகப் புலப்படுகின்றன. அப் பழங்களின் சுவையை விரும்பி, பறவை விலங்கு முதலியவை அவற்றைத் தின்கின்றன. அவ்வாறே மக்களும் அவற்றைப் பறித்துத் தின்கிறார்கள். பழங்களைத் தின்றுவிட்டு, கொட்டைகளை எறிந்துவிடுவதால் அவை வெவ்வேறு இடங்களில் விழுந்து, செடி மரங்களாக முளைக்கின்றன. ஆகையால் இந்நிலையில் இப் பழங்கள் மறைந்திருப்பது தீங்கே ஒழிய நன்மை இல்லை; அவ்வாறு மறைந்திருப்பதால் செடிகள் செழித்துப் பல்கிப் பெருகுதற்கு வேண்டிய பரவுதல் முடியாததாகும். செடி மரங்கள் அசையாது ஓர் இடத்திலேயே இருப்பதால், அவை தாமே தம் விதைகளை வேறிடஞ் செலுத்துதற்கு இயலா; காற்று, நீர், பறவை, விலங்கு முதலியவற்றின் உதவியையே நாட வேண்டும். காற்றாலும் நீராலும் பரவச் செய்யப்படும் விதைகளுக்கு நிறம் வேண்டுமென்பது இல்லை. ஆனால், பறவை விலங்குகளால் பரவச் செய்யப்படும் விதைகள் அவற்றின் கருத்தைத் தம்மிடம் ஈர்த்தல் வேண்டும். இங்ஙனம் ஒட்டிப் பரவும் விதைகளின் பல வித்துக்களைக் கொண்டுள்ள பழங்கள் பல நிறங்காட்டி, மணமுங்கொண்டு இனிமையான சுவையையும் ஏற்று, மனிதன், விலங்கு பறவை முதலியவற்றை அழைக்கின்றன. இப்படியாகத் தம்மிடம் வரும்படி இழுக்கும் நிறத்தைக் கவர்ச்சி நிறம் என்று சொல்லலாம். தன் செயல் நிறைவேற வேறு ஒன்றைத் தன்னிடம் இழுக்க ஏற்பட்டுள்ள நிறம் கவர்ச்சி நிறம். இப்படிக் கவரப்படும் விலங்கோ, பறவையோ ஏதாவதொரு எதிர்உதவியை அடைகின்றது.

விலங்குகளிடத்தும் இவ்விரண்டு வகுப்பான நிறங்களைக் காணலாம். ஒட்டகமும் இன்னும் மற்ற பாலைவன விலங்குகளும், ஏன் பழுப்புநிறமாக இருக்கின்றன? விலங்குகளையோ அல்லது பறவைகளையோ அவை வசிக்கும் இடத்தை விட்டுப் பெயர்த்து, உயிர்க்காட்சிச் சாலையில் கூண்டுகளில் வைத்துப் பார்த்தால் அவைகளின் நிறத்தின் பயன் புலப்படாது. ஒட்டகத்தைப் பாலைவனத்தில் பார்ப்போமானால், உடனே, அது பழுப்பு நிறமாக இருப்பதற்குக் காரணம் விளங்கிவிடும். ஒட்டகம் பாலைவனத்தில் படுத்திருந்தால் தொலைப் பார்வைக்கு மணற் குன்றுபோல் தெரியுமே ஒழிய ஒரு விலங்காகக் காணப்படாது. அஃது இம் மணல்வெளிகளில் மரஞ்செடிகளின்மையால் மறைவாகப் படுத்துறங்குவதற்கில்லை. ஆகையால், அஃது இப் பழுப்பு நிறத்தால்தான் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள இயலும்.

இடைப்பூச்சி (இடையன் பூச்சி) என்னும் பூச்சி மிகவும் விநோதமானது. செடி, செத்தைகளின் நடுவிலிருந்தால், அஃது அங்கே இருக்கிறதென்று தெரிந்திருந்தாலும் அதைக் கண்டுபிடிப்பது அரிது. குச்சிபோல் அதன் உடல் கால்கள் எல்லாம் மெல்லியனவாய் அக் குச்சியின் நிறத்தையே உடையனவாய் இருக்கின்றன.



நம் நாட்டில் காலிமா[1] என்னும் ஒரு பட்டுப்பூச்சி உண்டு. அதன் சிறகுகளின் மேற்பக்கத்தில் சிவந்த மஞ்சளும் ஊதாவும் கலந்து இருக்கும்; அவற்றின் அடிப்பாகம்

1. Kallima.

நிறத்திலும் உருவத்திலும் காய்ந்த இலையை ஒத்திருக்கும். அது பறக்கும்போது, சிறகுகளின் மேற்பாகமும், தங்கும்போது அடிப்பாகமும் வெளியில் தெரியும். இப் பூச்சி காய்ந்த கிளைகள் மீது தங்குவது வழக்கம். இலையின் நரம்புகளைப்போலவும், காய்ந்து அழுகின இலைகளில் இருக்கும் பூசனத்தைப்போலவும் கூட, இறகின் அடிப்பாகத்தில் காணப்படும். இவையெல்லாம் தற்காப்புக்காக அமைந்த நிறங்களே.

தற்காப்பு நிறத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன :—1. குறிப்பு நிறம். 2. ஒப்புமை நிறம்.

குறிப்பு நிறம், கூட்டங் கூட்டமாக வசிக்கும் பறவைகளினிடத்தும், விலங்குகளினிடத்தும் காணப்படும். முயல்கள் கூட்டங் கூட்டமாக வசிக்கும். கூட்டத்திலிருந்தால்தான் அவைகளுக்கு நன்மை. முயல் வாலின் அடிப்புறம் வெண்மையாக இருக்கிறது. முயல்கள் பல கூடி ஓரிடத்தில் மேய்ந்துகொண்டிருக்கும்போது, ஏதாவது ஓசை உண்டானால், அவ் வோசையைக் கேட்ட முயல் தன் வாலை மேலே தூக்கிக்கொண்டு தன் வளையினிடம் ஓடும். இங்ஙனம் அஃது ஓடும்போது அதன் வாலின் அடிப்பாகத்திலுள்ள வெண்மை நிறம் வெளியே தெரியும். அதைக்கண்ட மற்ற முயல்கள், ஏதோ கெடுதி உடனே வரப்போகிறதென்று அறிந்து, தத்தம் வளைகளிற் போய்ச் சேரும்.

கூட்டங் கூட்டமாக, ஊர் ஊராக, வெப்பதட்ப நிலையைப் பொறுத்துச் செல்லும் பறவைகளுக்குச் சிறகுகளிலும் வாலிலும் இத்தகைய குறிப்பு நிறம் உண்டு. பறந்து செல்லும்போது இது வெளியில் தெரியும்; பின்னால் வரும் பறவைகள் அவை தம்மினமென்று தெரிந்து பின் தொடர்ந்து செல்லும்.

ஒப்புமை நிறம் பட்டுப் பூச்சிகளினிடத்துச் சிறப்பாய்த் தோன்றுகிறது. இப் பூச்சிகளில் சில பறவைகளுக்குத் தகுந்த உணவாகவும் சில அல்லனவாகவும் உள. உணவாகக் கூடிய பூச்சிகளில் சில வகைகள் [1]உணவிற்கு உதவாத பட்டுப் பூச்சிகளின் நிறத்தை உடையன. இதைக் காணும் பட்சி, தனக்காகாத பூச்சிகளென்று அவற்றைப் பிடித்துக் கொல்லாமல் இருந்துவிடும். இப்படியே, நஞ்சில்லாச் சில பாம்புகள் நஞ்சுள்ள பாம்புகளை ஒத்திருக்கின்றன.

இனிப் போலி நிறத்தைக் கருதுவாம். புலி ஏன் வரிகளை[2]யுடையதாக இருக்கிறது? இது புல்லடர்ந்த காட்டில் புதரினிடையே இருக்குமேயானால் இதைக் காண்பவர் புல்லென ஏமாறுவர். புலி ஒட்டகத்தைப்போல் தற்காப்புக்கல்லாமல், பிற உயிர்களை வஞ்சிக்க ஏதுவாக இவ்வாறான அமைப்பைப் பெற்றிருக்கிறது. அது புதரினிடையே பதுங்கி இருக்கும்போது, அதைப் புல்லென எண்ணிப் பல சிறு விலங்குகள் அச்சமின்றி அவ்வழியே செல்ல, தன் மறைவிடத்திலிருந்து, அப் புலி அவைமீது பாய்ந்து அவற்றைக் கொன்று உதிரத்தை உறிஞ்சிவிடுகிறது. ஒட்டகத்தின் நிறம் தற்காப்பு நிறமாகும்; புலியினது நிறம் போலி நிறமாகும்.

தீங்கிழைக்கமாட்டாதென்று எண்ணக்கூடிய தன்மையையுடைய புலியைப் போன்றிருப்பதுமல்லாமல், தமக்கு இரையாகும் உயிரினத்துக்கு விருப்பமான உணவோ அல்லது வேறு ஒரு பொருளோபோல் தோன்றி, அதைத் தம்மிடம் இழுக்கும் உயிர்வகையும் உண்டு. பார்ப்பஸ்[3] என்ற மேனாட்டறிஞர் தாம் கண்ணால் கண்ட இத்தகைய நிகழ்ச்சியைக் கூறியுள்ளார்.

---

1. Species. 2. Stripes. 3. Mr. Forbes.

அவர் ஒரு வண்ணாத்திப் பூச்சியைப் பிடிக்குமாறு கையில் பிடித்த வலையுடன் அதைப் பின்தொடர்ந்து சென்றாராம். அஃது ஒரு பறவையின் மலத்தின்மேல் போய்த் தங்கிற்றாம். இவ்வளவு அழகுள்ள இந்தப் பூச்சிக்கு அந்த உணவில் என்ன சுவை இருக்குமென்று எண்ணிக் கொண்டே, அஃது என்ன செய்கிறதென்று பார்க்க, அவர் கையில் வலையுடன் மெதுவாக அதனருகிற் சென்றார். அவர் மிக்க அருகில் வந்தும் அஃது அசையவில்லை; பறந்து ஓடவுமில்லை. அதனை அவர் மெதுவாகப் பிடித்தார். அப்பொழுதும் அஃது அசைவற்று இருந்தது. ஆனால், அவர் அதை இலையினின்றும் எடுக்க முயன்றபோது, அஃது அம் மலத்தில் ஒட்டிக்கொண்டு வரவில்லை. அம் மலம் பசையுள்ளதோ என்ற ஐயம் ஏற்படவே, அவர் அதனைத் தம் விரலால் தொட்டார். அவர் தொட்டவுடனே அது மலமன்று என்றும், ஓர் உயிருள்ள பூச்சியென்றுங் கண்டு திடுக்கிட்டார். அஃது ஒரு வகையான சிலந்தி. அது தன் இரையைப் பிடிக்கத் தன் பல உறுப்புகளிலும் தக்க நிறங் காட்டி, பறவையின் மலத்தை ஒப்ப இருந்து பட்டுப்பூச்சிகளை ஏமாற்றிவந்தது. இச் சிலந்தியைக் கவர்ச்சி நிறமுள்ள உயிரினங்களோடுதான் சேர்த்தல் வேண்டும்.

சில உயிரினங்கள் எச்சரிக்கை நிறத்தைக்கொண்டுள்ளன. இவை நஞ்சாலோ அல்லது வேறு வகையாகவோ தீங்கிழைக்கக் கூடியனவாக இருக்கின்றன. கொட்டும் குளவிகளும், ஈக்களும் பளிச்சென்று விளங்கும் நிறங்களையுடையன. அவை "என்னிடம் வந்தால் நான் கொட்டிவிடுவேன். என்னை என் நிறத்தால் அறிந்துகொள்ளுங்கள்" என்று எச்சரிக்கை செய்வதுபோன்ற நிறமுடையனவாக இருக்கின்றன. ஒருமுறை கொட்டுண்டவர் இக் குளவியைக் கண்டால் ஒதுங்கிச் செல்வர்.

இப்படியே நாகப்பாம்பின் படமும் எச்சரிப்புக்காக உள்ளது. கடவுள் தமக்குக் கொடுத்திருக்கும் இயற்கை அறிவாலும், அந் நாகப்பாம்பின் நஞ்சால் இன்னொரு உயிர் இறந்ததைக் கண்ட பழக்கத்தாலும், இப் படமுடைய பாம்பைக் கண்டதும் அதை எதிர்க்க வல்லமையில்லாத உயிர் வகைகள் விலகித் தொலைவிற் செல்கின்றன.

இதுவரை, நிறங்களால் இன்னின்ன பயன்கள் உண்டென்று கண்டோம். ஆனால், சிலவகை நிறவேறு பாடுகளுக்குக் காரணம் தெரிந்திலது. எடுத்துக்காட்டாகப் பறவைகளை எடுத்துக்கொள்வோம்.

புள்ளினத்தில் ஆண்பறவைகள் அழகிய நிறங்களை யுடையனவாகவும், பெண் பறவைகள் அங்ஙனம் இல்லாம லும் இருப்பது நம் எல்லோருக்கும் கண்கூடாகத் தெரிந் ததே. ஆண்மயில் எவ்வளவு அழகான தோகையை உடைத்தா யிருக்கிறது! பெண் மயிலுக்கு அத்தன்மைய தான தோகை ஏன் இல்லை?

பெண்பறவை முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல் வேண்டும். இது முடிவெய்தும் வரையில் எதிரிகள் கண் ணுக்கு அகப்படாமல் இருப்பது இன்றியமையாதது. இதனாற்றான் இஃது ஆணைப்போல அத்துணை வனப்புடைய தாக இல்லை. ஆணும் பெண்ணும் ஒத்த வனப்புடையதாக இருக்குமேயானால், அவை சந்துகளிலும், பொந்துகளிலும் கூடுகட்டி முட்டையிடுபவையாக இருக்கும். கூட்டில் இருந்தால் பெண்பறவை வெளியில் தெரியாது. அதனால் அஃது அழகாகவே இருக்கலாம்.

சில பறவைகளில் ஆணைவிடப் பெண் ஒளியும் பொலிவுமுள்ள நிறங்களையுடையன. இவைகளை ஊன்றிப்

பார்த்தால், நாம் வியக்கும்படியான ஓர் உண்மை வெளிப்படுகிறது. அஃதாவது இவ்வினத்தில் பெண்பறவைக்கு முட்டையிடுவது தவிரப் பின் அதைக் காப்பாற்றும் வேலை இல்லை. அஃது முட்டையிட்டவுடன் ஆண் பறவை அந்த முட்டைகளின்மீது உட்கார்ந்து அடைகாக்கிறது. இவ் வேலைகளில் ஆண் மறைந்திருக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் அது பொலிவற்றிருக்கிறது.

அழகின்மைக்கு ஒருவாறு காரணம் தெரிகிறது. ஆனால், அழகுடைமை ஏன்? இதைப்பற்றி ஒரேமுகமான கொள்கை இல்லை. நுண்ணூலாராய்ச்சியாளர் பலரும் பல கொள்கைகளைக் கொண்டுள்ளனர்.

டார்வின்[1] என்பவர் பெண் பறவை ஆணிடம் அதனுடைய பொலிவிற்காகக் கூடுகிறதென்றும், அதனாற்றான் ஆண் இப்படி அழகுடையதாய் விளங்குகிறதென்றும் கூறியுள்ளார்.

சிலர் வேறு காரணம் காட்டுகின்றனர். அஃதாவது, பெண் பறவைக்கு முட்டையிடுவதிலும் குஞ்சு பொரிப்பதிலும் அதன் வலிமை குறைந்துவிடுகிறதென்றும், ஆணிற்கு இவ்வலிமை குறையாமல் நிற்கிறதென்றும், இந்த அளவற்ற வலிமை, நிறம், கொண்டை முதலிய உறுப்புக்களை உண்டாக்குவதில் செலவாக்கப்படுகிறதென்றுங் கூறுகின்றனர். இன்னுஞ் சிலர் வெவ்வேறு காரணங்களைக் காட்டுகின்றனர். அவைகளை ஆராயப்புகுவோமாயின் மிகவும் விரியும்.

பறவைகளின் நிற அமைப்பிற்குக் காரணம் விளங்காவிடினும், பட்டுப்பூச்சி, மலர் முதலியவை நிறத்தில் ஒளிர்வது இன்னதற்காக என்று ஒருவாறு துணிவாகச்

1. Darwin.

சொல்லலாம். அஃதாவது, தம் இனத்தின் பெருக்கத் திற்கேயாம்.

கூட்டுப் புழுவாக இருந்து, பட்டுப்பூச்சியான பிறகு, அது மிகக் குறைந்த வாழ்நாளைக் கொண்டிருக்கின்றது. இந்தக் குறுகிய வாழ்நாளில் அது தன் இனத்தைப் பெருக்க வழிதேடல் வேண்டும். அதற்காக, ஆணும் பெண் ணும் கூடுதல் வேண்டும். நிறத்தில் மிளிர்ந்தால் தமக்கிருக் கும் குறுகிய காலத்தில் ஒன்றையொன்று கண்டு கூடுவது எளிது.

மலர்களும் மரத்தின் இனவளர்ச்சிக்காகவே பல நிறங் களைக் கொண்டுள்ளன. பூக்களிலும் ஆண்பூவும் பெண் பூவும் உள. இவற்றின் தாது கலந்தால்தான் மலரில் கரு உண்டாகும். இப்படிக் கலப்பதற்கு வண்டுகளும், பூச்சி களும், குருவிகளும் உதவியாயிருக்கின்றன. அவற்றைத் தம்மிடம் வரும்படி செய்ய, மலர்கள் தம்முள் தேனுண் டாக்கி, நறுமணத்துடனும் அழகிய நிறங்களுடனுங் கூடி விளங்குகின்றன. இங்ஙனம் மணத்தானும் நிறத்தானும் இழுக்கப்பட்டுப் பூச்சியோ பறவையோ வண்டோ அவற்றி னிடஞ் செல்கின்றன. அவ்வுயிரினங்களின் கால்களிலோ உடம்பிலோ அப் பூக்களின் தாது ஒட்டிக்கொள்கிறது. பிறகு அவை வேறு மலர்களிடஞ் சென்றால் அவற்றின் மேல் ஒட்டியிருக்கும் தாது அம் மலர்களின் தாதோடு கலக்கிறது.

இரவில் மலரும் பூக்களுக்கு நிறம் இருப்பதில் யாதொரு பயனுமில்லை. ஆகையால், அவை வெண்மையாக இருக்கின்றன. ஆனால், அவை நிறத்திற்குப் பதிலாகப் பகலில் அலரும் பூக்களைக் காட்டிலும் நறுமணத்தை மிகுதி யாகக் கொண்டிருக்கின்றன.

" ... ... ... நிசியலர் மலர்க்கு
வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்
எவ்வணம் அவற்றின் இட்டநா யகராம்
ஈயினம் அறிந்துவந்து எய்திடும்? அங்ஙனம்
மேவிடில் அன்றோ காய்தருங் கருவாம்?
இவ்விதம் நோக்கிடில் எவ்விதத் தோற்றமுஞ்
செவ்விதிற் பற்பல காரணச் செறிவால்
அவ்வவற் றுள்நிறை யன்பே ஆக்கும்."

—மனோன்மணீயம்.

# அ. அலைகட லளித்த ஆரணங்கு

[காழி, சிவ. கண்ணுசாமி, பி. ஏ.]

ஊழிற் பெருவலி யாவுள? யாதொன் றுமில்லையன்றே? இன்றேல் ஞாயிற்றையுந் திங்களையும் பாம்பு விழுங்குங் கொல்! பாம்பும் விழுங்கவில்லை, பல்லியும் விழுங்கவில்லை! அலகுசால் அறிவுநூல் கல்லாமை யென்ற "ஆமையே" அவ்வாறு பாம்பு விழுங்குவதாக நினைக்கச் செய்கிறது. கோட் செலவினால் ஞாயிறுந் திங்களும் மறைவுறுவதைப் பாம்பு விழுங்குவதாக இற்றைநாளுங் கருதியிருத்தல் ஏழைமையன்றோ? எஃது எவ்வாறாயினும், அம் மறைவு நாளிற் கடல்நீராடல் மட்டும் அறிவியற் கொத்ததென்பது தேற்றம்.

*　　*　　*　　*

பரிதி மறைவுநாள்—(சூரிய கிரகணம்). மக்கள் திரள் திரளாகக் கடற்கரையில் வந்து குழுமியிருந்தனர். நீராடுவோர் ஒருபுறம்; "தருப்பணம்" செய்வோர் ஒருபுறம். "திடுக்கென" விழித்துத் திகைத்து நிற்போர் ஒருபுறம். ஆ! எத்தனை வகையினர்! எத்துணைத் தொகையினர்! சேய்மை யெங்கும் நீர்ப்பரப்பாயின் அண்மை யெங்கும் மக்கட் பரப்பாகவே தோற்றிற்று. மறைந்த பரிதி முழுதுந் தோன்றுங் காலவரை குறுகிற்று. கரையிலிருந்த மக்கட் கூட்டம் கடலினுட் படையெடுத்துச் செல்வதுபோல் "திமிதிமி" யென்று நீரிலிறங்கி மேல்வரும் அலைகளிடை அலைவுற்று நின்றது. எங்கணும் ஒரே கூச்சல்! மக்கட் பேச்சொலியும் அலைகளின் வீச்சொலியும் ஒரு புடை ஒத்திருந்தன.

செறிந்த இக் கூச்சலிடை "ஐயோ! ஆ!" என்ற கூக்குரல் ஒன்று ஒரு பகுதியில் கடலினுட் சிறிது தொலைவிற்

கேட்டதுபோலிருந்தது. அங்கு ஈண்டியிருந்த மக்களை விலக்கித் தள்ளிக்கொண்டு, கட்டிளங்காளை யொருவன் கடலினுட் பாய்ந்து, கூக்குரல் வந்த இடம் நோக்கி விரைவாக நீந்திச் சென்றான். அவன் விலக்கித் தள்ளியதும் பாய்ந்ததும் நீந்திச் சென்றதும் மின்னலை யொத்த விரைவோடு கூடியனவா யிருந்தமையால், குழுமி யிருந்த ஏனையோர், என்ன நடக்கிறது என்பதை உய்த்துணரவும் இயலாமல் திகைப்பூண்டு மிதித்தோர்கள்போற் செயலற்று நின்றிருந்தனர். மறுபடியும் "ஆ! ஆ!" என்ற திணறலோசை கேட்டது. அடர்ந்த கருங் கூந்தலோடு கூடிய ஒரு தலை, சற்றுத்தொலைவில் நீரின்மேல் கிளம்பிவந்து மறுபடியும் அழுந்திற்று. பாய்ந்து சென்ற சிறுவனுக்கும் அத் தலை தோன்றிமறைந்த இடத்திற்கு மிடையில் இன்னும் பத்துப் பதினைந்தடி தொலைதான் இருந்தது. மறுநொடியில், நீராவிப் படகொன்று நிமிர்ந்து தாவிச் செல்வது போன்று, சிறுவன் இரண்டு தாவலில் குறித்த இடத்தை அணுகினான். அணுகியவன், சட்டென நீரினுண் மூழ்கிச் சிறிது நேரத்தில் தன் இடக்கை முழுதுங் கூந்தலைச் சுற்றிக் கொண்டவனாய், ஒரு பெண்ணின் தலையை நீர்மட்டத்திற்கு மேல் தூக்கியவண்ணம் வெளிவந்தான்.

* * *

"யாராவது உடனே ஓடிச் சென்று அதோ தெரியும் வண்டியின் சக்கரங்களி லொன்றைக் கழற்றித் தூக்கி வாருங்கள்! நொடியில் வரவேண்டும்! உங்களுக்குப் புண்ணியமாப் போகிறது" என்று கூவிக்கொண்டே, சிறுவன் பெண்ணின் உடலை நேர்மையாகத் தாங்கிய வண்ணம் கரை சேர்ந்தான். சிறிது நேரத்தில், சக்கரம் ஒன்றுங் கொண்டு வரப்பட்டது. தூக்கிவந்த பெண்ணை அச் சக்கரத்தின்மீது

கிடத்தியபின், குயவனொருவன் மட்பாண்டஞ் செய்யத் தன் சக்கரத்தைச் சுற்றுவதுபோல், சிறுவன் அச் சக்க ரத்தை விரைவாகச் சுற்றினான். சுற்றச் சுற்ற, சக்கரத்தின் மேலிருந்த பெண்ணின் வாய்வழியும் மூக்கு வழியும் "குபு குபு" வென்று நீர் வெளிவந்தது. அசைவற்றிருந்த அவள் கைகால்கள் அசைவுற்றன. இறுதியில் "உம்" என்ற ஓசையுடன் ஒரு பெருமூச்சுவிட்டு அப் பெண் மறுபடி யுஞ் சோர்வுற்றாள். மங்கியிருந்த சிறுவனின் முகத்தில் ஒளி வீசிற்று; தான் காப்பாற்றிய பெண் உயிருடனிருக் கிறாள் என்பதை அவன் கண்டுகொண்டதாக அவன் முகம் அறிவித்தது. "ஐயன்மீர்! இனி அருள் கூர்ந்து சற்று விலகி நில்லுங்கள்! நன்றாக அப் பெண்மீது காற்று வீச வேண்டும். நான் இவ்வாறு கூறுவதற்கு மன்னித்துக்கொள் ளுங்கள்," என்று அங்குச் சூழ்ந்து நின்ற திரளான மக்க ளைப் பணிவுடன் வேண்டிக்கொண்டான் சிறுவன்.

*　　　*　　　*

"செந்திநாதா, நேற்று உன் பெயர் செய்தித்தாளில் அடிபட்டதே, நிகழ்ந்த தென்ன?" என்றான் வடிவேலன்.

"வடிவேல், உன்னிடங் கூறாமல் நான் வேறு யாரி டங் கூறப்போகிறேன்! நேற்று விடுமுறை நாளாயிருந் தமையால் நானும் கடற்கரைக்குச் சென்று திரள் திர ளாக மக்கள் குழுமியிருக்குங் காட்சியைக் கண்டு களிக் கலாமென எண்ணிச் சென்றேன். எண்ணியதற்கேற்ற வாறு எண்ணற்ற மக்களைக் கண்டு மகிழ்ந்தேன். கடற் கரை யோரமே வடமுகமாக நான் சென்றுகொண்டிருக் கையில், இருப்புப்பாலத்தருகில் நாலைந்து இளம்பெண்கள் நீராட வந்திருந்ததைக் கண்டேன். அவர்களில் ஒருத்தி மட்டும் நான் என்றுங் கண்டிராத பேரழகு படைத்த

பதின்மூன்று பதினன்கு வயதுள்ள ஆரணங்கெனத் தோற்றினள். மற்றவர்களும் அழகு வாய்ந்தவர்களாயினும் அவர்களிடை அவள் நின்றிருந்தது, தாரகை நடுவண் தண்மதியமைந்ததை யொத்திருந்தது. மேலே சென்று காண எண்ணி யிருந்த எண்ணம் இருந்தவிடந் தெரியாமற் பறந்து போயிற்று. கால்கள் நின்ற இடத்திலேயே வேரூன்றி விட்டன. அந் நங்கையர் நின்றிருந்த இடத்தின் அருகாமையில் இன்னும் நூற்றுக்கணக்கான மக்கள் இருந்தார்களென்பதும், அவர்களில் யாரேனும் நான் அவ்வாறு நெஞ்சு பறிகொடுத்து நிற்பதைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்பதும் என் புத்திக் கெட்டவில்லை. இந்நிலேயில், அப்பெண்கள் நீரி லிறங்கி முழுகினர்கள். ஒரு பெரிய அலே வந்து மோதிற்று. மூலேக்கொருவராய் உருண்டு புரண்டு எழுந்தார்கள். மதியனைய அம் மங்கை நல்லாளே மட்டும் காணவில்லே. சற்றுநேரங் கழிந்ததும் கரையிலிருந்து நாற்பதைம்பது அடித்தொலேவில் "ஐயோ ! ஆ!" என்ற பெண் குரல் ஒன்று நீரிடை யெழுந்தது. உண்மை யுணர்ந்தேன். வந்து மோதிய பேரலே கவர்ந்து சென்றுவிட்டது கட்டழகியை. அவ்வளவுதான்; அதன்பின், நான் திடுதிடென ஓடியதும், மக்களே விலக்கிக்கொண்டு நீரிற் குதித்து நீந்திச் சென்றதும், மங்கையை யணுகி அவள் தலேமயிரைக் கையிற் சுற்றிக்கொண்டு கரையருகே வந்ததும் எப்படி நடந்தன வென்று என்னுற் கூறுவதற்கில்லே. எல்லாம் என்னே யறியாமலே பொறி[1] இயக்கத்தினுல் நடைபெறுவது போன்று நடைபெற்றன. கரை நெருங்கியதும், அப் பெண்ணேத் தூக்கிக்கொண்டுவந்து ஒரு வண்டிச் சக்கரத்தின்மீது வைத்துச் சுற்றினேன். நீரில் மூழ்கினேர் நீரைக் குடித்திருந்தால் அந்நீரை வெளிப்

1. Machine.

படுத்துவதற்கு இதுவே ஏற்றவழி யென்று கேட்டிருக்கிறேன்..........."

வடிவேலன் :—"இதெல்லாம் செய்தித்தாளிற் கண்டேன். இங்கு நீ விரிவாகக் கூறவேண்டாம். அப் பெண்ணுக்குத் தன்னறிவு வந்தபின் என்ன நிகழ்ந்தது?"

செந்திநாதன் :—"அறிவு திரும்பியவுடன், தன்னைச் சுற்றியிருந்த மக்கட்டிரளைப் பார்த்து, அவள் அஞ்சி உடல் குன்றியதைக் கண்டேன். அவளுடன் வந்த ஏனைய பெண்கள் எங்கிருந்தார்கள் என்று கண்டுபிடிப்பதற்கில்லை. எனவே, உடனே அப் பெண்ணைத் தூக்கி என்னுடைய "ஆஸ்டின்" [1]உந்துவண்டிக்குக் கொண்டுசென்றேன். அவளை எங்கே அழைத்துச் செல்வதென்று தெரியவில்லை. நேரே என் வீட்டிற்கே கொண்டு செல்லலா மென்ற கருத்துடன் உந்துவண்டியை விரைவாகச் செலுத்தினேன். வண்டி சென்ற விரைவினால் நல்ல காற்று முகத்திற் படவே, அம் மங்கை சற்று நேரத்திற்குள் நல்லுணர்வு பெற்றாள் போலும்! "நண்பரே! தாங்கள் இன்று செய்த பேருதவி கருதியே என் நாணத்தைவிட்டு யான் தங்களிடம் முதன் முதலாகப் பேசத் துணிவுகொள்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கு நன்மையே அளிப்பாராக! யான் இருப்பது மயிலாப்பூரைச் சேர்ந்த மந்தைவெளியிலுள்ள காரணேச்சுரர் வீதியின் கீழ்கோடியாகும். அருள் கூர்ந்து என்னை நேரே என் வீட்டிற்குக் கொண்டு செல்லுங்கள்," என்று இசைத்தாள் அவ்வெழிலாள். என் செவி மாந்திய அந் நல்லிசையாளது சொல்லிசையில் ஈடுபட்டவனாய், யான் மறுமொழி கூறாமல் நேரே குறித்த இடத்திற்கு வண்டியைச் செலுத்தினேன். காரணேச்சுரர் தெரு கீழ்கோடிக்குச்

---

1. Motor car.

சென்றதும், கூரைவேய்ந்த ஒரு சிறு வீட்டைக் காட்டி, “அதுவே என் இல்லம்” என்றாள் மங்கை. வண்டியை நிறுத்தினேன். வாய்மொழியொன்றுங் கூறாது, அந் நங்கை நல்லாள் வண்டியைவிட்டிறங்கி உள்ளே சென்றாள். சற்று மனத்தளர்ச்சி யுற்றவனாய், உள்ளே செல்லலாமா, வேண் டாமா என்று நான் சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுதே, வீட்டின் வாயிற்கதவு திறக்கப்பட்டு, “ஐயா, உள்ளே வாரும்” என்ற ஒரு குரல் கேட்டது; உட்சென்றேன். ஒரு கயிற்றுக் கட்டிலின்மீது எழுபது எழுபத்தைந்து வயதிருக்கும் என்று மதிப்பிடக்கூடிய ஒரு முதியவர் சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தார். உட்கார்ந்த அந் நிலையிற்கூட, அவரது இடக்கையில் ஒரு கட்டையான மூங்கிற்றடியைப் பிடித்திருந்தார். நான்கடி நீளமுள்ள அத் தடியின்மீது ஏதோ சில சித்திரங்கள் செதுக்கப்பட்டிருந் தன. திருப்பதிக்குச் சென்று வருவோர் வாங்கி வரும் மூங்கிற்றடிபோல் அது காணப்பட்டது. நான் உட்சென்ற தும், என்னை, “உட்கார்” என்றுகூடச் சொல்லாமல் அப் பெரியவர், “நீரில் அமிழ்ந்தி இறந்திருக்கவேண்டிய என் பேத்தியை நீ காப்பாற்றியதாக, அவள் சொன்னாள். ஒரு விதத்தில் அஃது எனக்கு மகிழ்ச்சியையே அளிக்கிறது. ஆயினும், விரைவிற் பருவமடையவிருக்கும் அப் பெண்ணை நீ பலரறியத் தூக்கி வந்து, வண்டியில் வைத்து ஓட்டிவந்தது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. போனது போகட்டும்; நான் பரம ஏழை; உனக்கு ஏற்றவாறு பரிசளிப்பதற்கு என்னிடம் ஒன்றுங் கிடையாது. ‘ஒருயிரைக் காப்பாற்றி னேம்’ என்ற மகிழ்ச்சியே உனக்குப் பரிசாக இருக்கட்டும். நீ என் பேத்திக்கு உதவி செய்ததை இன்றுடன் மறந்து விடு. அவள் உடல் நலத்தைக் கேட்டறியக் கருதி மறுபடி இப் பக்கம் வருகிற எண்ணத்தை இதோடு விட்டுவிடு.

கடவுள் உனக்கு நன்மையே அளிப்பார். சரி! இனி இங்கு நிற்கவேண்டாம்; போய் வா" என வெட்டி மொழிந்தார். இப்படியும் உலகில் நன்றி மறப்போர் இருப்பார்களா என்று நினைந்தவண்ணம், உள்ளெழுந்த ஆத்திரத்தை யடக்கிக் கொண்டவனுய்த் துண்ணென வெளிவந்து என் வண்டியி லேறி வீடுவந்து சேர்ந்தேன். ஆயினும் அப் பெண்ணின் நினைவு என்னை விட்டு நீங்கவில்லை."

**வடிவேலன்** :—" அந்த நினைவில் உன் எம். பி. பி. எஸ். தேர்தலை மறந்துவிடாதே"

**செந்திநாதன்**:—"அத் தேர்தலின் தலையில் இடி விழட்டும். அதில் தேர்ச்சி யடைந்து நான் பெறவிருக்கும் பயன் என்ன?"

**வடி** :—" என்ன உளறுகிறாய்?"

**செந்தி** :—" நானா உளறுகிறேன். மணந்தால் அப் பெண்ணை மணப்பது; இன்றேல் மணமில்லாமலேயே இம் மண்ணைத் துறப்பது; இஃது உறுதி."

* * *

" அம்மா ஞானம், உன் எண்ணம் இன்னதென நான் நன்கறிவேன். பரிதிமறைவு நாளன்று பலரறிய உன்னைத் தொட்டுத் தூக்கிய அச் சிறுவனையன்றி மற்றெவனையும் மணக்க உன் கற்பிற்சிறந்த தூய உள்ளம் இசையாது என்பது நானறியாததன்று. ஆயினும் என் செய்வது? முடவன் கொம்புத்தேனுக் காசைப்படுவதுபோலன்றோ இருக்கிறது உண்மை! அச் சிறுவனைப் பற்றித் தீர உசாவினேன். சென்னை [1]வழக்கறிஞர் திவான்பகதூர் கே. எஸ். இராஜனின் மூத்த பிள்ளையாம் அவன். எம். பி. பி. எஸ். என்ற உயர்தர மருத்துவத் தேர்தலுக்குப் படிக்கிறான். வயது இருபத்திரண்டுதான் ஆகிறது. அவன் படிக்கும்

1. Lawyer.

மருத்துவக் கல்லூரியில் நடக்கும் [1]காற்பந்து [2]கோற்பந்து முதலிய விளையாட்டுக்களில் அவனே முதன்மை பெற்றுப் பல பரிசுப் பதக்கங்கள் வாங்கியுள்ளானும். நல்லொழுக்கத் திற்கும் நற்குணத்திற்கும் அவன் நிலைக்களன் என்பதை நானே துணிந்து கூறுவேன். என்ன இருந்துமென்? அவன் தந்தை, இருபதினாயிரம் ரூபா எவன் கொடுக்கிறானே அவன் பெண்ணைத்தான் கட்டுவதென்று முடிவு கட்டி யுள்ளாராம். நாமிருக்கும் நிலையில் இருபதினாயிரம் ஓட்டாஞ் சில்லிகூடக் கொடுக்கமுடியாது என்பது உனக்குத் தெரி யும். பாக்கம் புகைவண்டிச் சேதத்தில் உன் தாய் தந்தைக ளிருவரும் மடிந்தபின் இந்தப் பதினான்கு ஆண்டுகளாக— உன்னை ஒரு வயதுக் குழந்தையாக அவர்கள் விட்டுச் சென் றார்கள்—நான் படாதபாடுபட்டு வளர்த்தேன். திங்களுக்கு மறுவிருத்தலு முண்டு; உனக்கு எத்தகைய மறுவுங் கூறமுடியாதென்பதை இம் மங்கைவெளியிலுள்ளார் எல் லோருங் கூறுவார்கள். அவ்வாறு பெண்மக்களுக்கே எடுத் துக்காட்டா யிலகுமாறு உன்னை வளர்த்துப்பொருளாசைப் பேய் பிடித்த ஒருவன் வீட்டில் உன்னைக் கொண்டுய்க்க எனக்கு எள்ளளவும் விருப்பமில்லை...........

ஞானம்:—“ தாத்தா, என்னை மன்னியுங்கள். அவரை மணந்தால் மணப்பது: இன்றேல் கன்னியாகவே என் காலத்தைக் கழிப்பது, என்று உறுதி செய்துவிட்டேன். ஆகையால் என் மணத்தை யொட்டிய கவலையைத் தாங்கள் ஒழித்துவிடுங்கள். இறைவனருள்கூடின் கைகூடாத தொன்று முண்டோ?”

பெரியவர் :—“ உண்மை. அச் சிறுவனும் உன்னை யன்றி யொருவரையும் மணப்பதில்லை யென்றும், அதனல்

1. Foot Ball. 2. Cricket.

தனக்கு வரவிருக்கும் நூறாயிர ரூபா பெறுமான சொத்தைத் தான் இழப்பதாயினும் கவலையுறப்போவதில்லை யென்றும் தன் நண்பன் வடிவேலனிடங் கூறிக்கொண்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். ஆ! அவன் கூறுவதுமட்டும் உண்மையாயிருந்தால்....அவனும் ஒன்று மிழக்க வேண்டியதில்லை! நானும் ஏற்ற கணவனுக்கு உன்னை யளித்து விட்டேன் என்ற நினைவுடன் அமைதியாக இறப்பேன்—"

ஞானம் :—"நீங்கள் அமைதியாயிறப்பது சரி; அவர் எப்படி ஒன்றும் இழக்கவேண்டியதில்லை என்று கூறினீர்கள்?"

பெரியவர் :—"ஒன்றுமில்லை. நான் ஏதோ சொல் மாருட்டமாகக் கூறிவிட்டேன். அதையொரு பொருளாக கருதிக் கேட்கவேண்டாம்."

ஒருநாள் மாலை வெளிவந்த "உண்மை யுரைப்போன்" என்ற நாள் தாளில்[1] கொட்டை கொட்டையான எழுத்தில் பின்வருமாறு ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது:

## முக்கிய அறிவிப்பு

"என் மூத்த மகன் எஸ். செந்திநாதன் (எம். பி. பி. எஸ். தேர்தலுக்குப் படிக்கும் மாணவன்) பரம ஏழையான ஒரு பருவமடைந்த பெண்ணை என் நோக்கத்திற்கும், குல வழக்கத்திற்கும் மாறாக மணக்கப்போவதாக முடிவுகட்டிக் கூறுவதால், எனக்கும் அவனுக்குமுள்ள தொடர்பை இதனால் விலக்கிவிடுகிறேன். நான் என் சொந்த உழைப்பினாற் சேர்த்துள்ள சொத்தில் அவனுக்குச் சேரவேண்டிய நூறாயிர ரூபா பெறும்படியான பகுதியும், அவன் அப் பெண்ணை மணக்கவில்லை யென்றோ, அல்லது அப் பெண்

1. Daily Paper.

வீட்டார் என் குடும்ப உயர்நிலைக்கேற்றவாறும் மாப்பிள்ளை மேற்படிப்புப் படிப்பதற்காகவும் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுக்க இசைந்துள்ளார்களென்றே கூறினொலொழிய, அவனுக்குக் கொடுக்கப்படமாட்டாது. இன்று முதல் அவனுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகைகளுக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ளமாட்டேன் என்பதைத் திண்ணமாயறியவும்.

இப்படிக்கு,
கே. எஸ். இராஜன்,
வழக்கறிஞர்.

இரவு ஏழு மணியிருக்கும். காரணேச்சுரர் கோயில் வீதியிலுள்ள பெரியவர் வீட்டின் கதவு தாழிடாமல் மூடப்பட்டிருந்தது. உள்ளே எண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கட்டிலின்மீது பெரியவர் கடுமையான காய்ச்சலினால் அங்குமிங்கும் புரண்டுகொண்டிருந்தார். ஞானம் அவருக்கு ஆறுதல் கூறி, ஒரு குவளையில் வெந்நீர் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

அடைத்திருந்த கதவு திறந்தது. முகவாட்டத்தோடு கூடிய ஓர் உருவம் உள்ளே வந்தது. வந்தவன் செந்திநாதனே. அவன் கையில் "உண்மையுரைப்போன்" என்ற நாள்தாள் இருந்தது. வாய்மொழி யொன்றுங் கூறாமல் மெல்ல நடந்துவந்து அத் தாளில் "முக்கிய அறிவிப்பு" என்ற செய்தியிருந்த ஏட்டைப் பெரியவரின் கையில் அவன் கொடுத்தான். அவன் நினைவு அவனுக்கு இருப்பதாகவே தோற்றவில்லை. காய்ச்சலால் வருந்திக்கொண்டிருந்த பெரியவர், "அம்மா அதிலென்ன எழுதி இருக்கின்றது; படி, கேட்கலாம்" என்றார். ஞானம் இனிமையான குரலில் செய்தியைத் தெளிவாகப் படித்தாள். அவள்

படித்து முடித்ததும், "அலைகடல் லளித்த இவ்வாரணங்கிற்காக என் தந்தையை வெறுத்துத் தாயபாகத்தைத் துறந்து ஒட்டாண்டியாய் இங்கு வந்துளேன். என்னை இந்நிலையில் ஏற்றுக்கொள்ள மறுத்தால், நேரே அவ் வலைகடலுக்கே சென்று என்னுருயிரை விடுவேன். முக்கண்ணன் மீது ஆணை" என்று தழுதழுத்த குரலிற் கூறினான் செந்தினாதன்.

"ஆ" என்ற ஓர் ஓசை பெரியவர் வாயிலிருந்து புறப்பட்டது. உடனே பெரியவர் கட்டைபோற் சாய்ந்துவிட்டார். மங்கைநல்லாள் மதிகலங்கி விம்மி யழலானாள். பெரியவர் நெஞ்சடைப்புண்டிருக்கிறார் என்பது கண்ட செந்தினாதன் சட்டென எழுந்து குவளையிலிருந்த நீரை அவர் முகத்திற் றெளித்தான். பின் கதவைச் சற்றுத் திறந்துவைத்துக் கட்டிலை அதனருகே இழுத்துப்போட நினைந்து அதை வலிவாக இழுத்தான். கட்டிற்காலுக்கும் சுவருக்குமிடையே குறுக்காக மாட்டிக்கொண்டிருந்த பெரியவர் ஊன்றுகோல் "மளார்" என முறிந்தது. திடுக்கிட்டுப்போய்ச் செந்தினாதன் முறிந்த அக் கழியை வெளியே எடுத்தான். முறிந்த துண்டொன்றினுள் கற்றையாக ஒரு தாள் சுருள் இருந்தது. அதை வெளியிலெடுத்துப் பார்த்தான். ஆயிரம் ரூபா நாணயமுறிகளாக[1] நூறு முறிகள் இருந்தன. அதே சமயத்தில் "செந்தினாத; அதுவே என் பேத்திக்கு நான் கொடுக்கும் 'ஸ்ரீதனம்'; உன் தந்தை கொடுக்கவேண்டிய நூறாயிர ரூபாவுக்குப் பதிலாக இதையெடுத்துக்கொள். இத்துடன் விலைமதிக்கவொண்ணாத இம் மங்கைநல்லாளையும் கைக்கொள். வேறெந்நோக்கமுமின்றி இவளையே மணக்கும் விருப்பமுடைய ஒருவற்குக் கொடுக்கவென்றே இப்பொருளைச் சேர்த்து வைத்திருந்

1. Currency Notes.

தேன். அப்பொருள் இருந்ததனுலேதான் நான் எந்நேரமும் அம் மூங்கிற்றடியைக் கைவிடுவதில்லை. பதினுன்கு ஆண்டுகளாய் என் கையைவிட் டகலாதிருந்த இம் மூங்கில் இன்று முறிந்தது 'சேரவேண்டிய இடத்திற்குப் பொருள் சென்று சேர்ந்துவிட்டபடியால் என் கவலையொழிந்தது' என்பதைக் குறிக்கவேபோலும்!'' என்று திருத்தமாய் மொழிந்தார் பெரியவர். காரிகையெய்திய பெரும்பேறு கண்டு அவர் காய்ச்சல் மாய்ந்தொழிந்தது போலும்! திறந்த கதவின் வழியாக நிறைமதி தண்கதிர் வீசி வெள்ளொளி பரப்பி நின்றது. ஞானத்தின் முகவொளிதானே அஃது என்று வியப்புற்ருன் செந்திறுதன்.

# கூ. கம்ப சித்திரம்

[மணி-திருநாவுக்கரசு முதலியார்]

கம்பர் செந்தமிழ்ப் பெரும் புலவருள் ஒருவர்; இராமாயணம் என்னும் பாரகாவியத்தை இயற்றிய செந்நாப்புலவர்; எஃகு செவியர்; நுணுகிப் பரந்த மதிவீறுடையர். அவர் கவிநலங்களை உற்றுணர்ந்த சான்றோர் அவற்றைச் 'சூத்திரம்' என்றும், 'சித்திரம்' என்றும் மிகுத்துரைப்பாராயினர். சூத்திரம் என்னுஞ் சொல் பாட்டின் நுட்பதிட்பங்களைத் தெரிக்கச், சித்திரம் அதன் அழகு அணிகளை விளக்குவதாகும். இத்தகைய பெரும்புலவர் பலர் நம் செந்தமிழ் நாட்டிலே தோன்றி, இயற்கையாகப் பாடுந் திருவாய்க்கப்பெற்று ஆரமுதெனச் சுவைக்கும் நூல்களை இயற்றி வைத்தும், நம்மனோருள் பலர் அவற்றைக் கற்று உறுபயன் கொள்ளாது கொன்னே காலங்கழிக்கின்றனர். மேனாட்டார் தம் நாட்டுப் புலவரைப்பற்றிப் பல்லாற்றானும் ஆராய்ந்து அறிந்தும், அவர் எழுதிய நூல்களிலுள்ள பொருட்டுறைகளைப் பாகுபடுத்து உணர்ந்தும், அவ்வவர் கருத்துக்களின் உயர்வையும் பொலிவையும் பாராட்டி ஆயிரக்கணக்கான பனுவல்களை வரைந்தும் போற்றுகின்றனர். நமது செந்தமிழ் நூல்களோ எடுப்பார் அணைப்பார் இல்லாக் குழவிகளாய்ச் சீராட்டுஞ் செருக்குமின்றி ஒரு மூலையிலே முடங்கிக் கிடக்கின்றன. இன்று புதிது புதிதாக நாகரிகமிக்க மக்களால் குறித்துச் சிறப்பிக்கப்பெறும் பொருள்களும், பண்டைக்காலத்துத் தண்டமிழ்ப் பாக்களிலே, இன்று சொல்லப்படும் கவிகளினும், பாங்கினும் பான்மையினும் சிறந்து, உரனும் அழகும் இனிமையும் மிகச் சொல்லப்பட்டிருத்தலைக் காணும் நடுநிலையுடையார்

தலைசாய்த்தல் உண்மை. இதனை ஓர் எடுத்துக்காட்டான் இனிது விளக்குவாம். பிரௌனிங்[1] என்னும் ஆங்கிலப் புலவர் ஒருவர் தமது நூலின்கண் ஓர் உயர்ந்த உண்மையினைப் புகட்டினாரென்றும் அது நனிபெரிதும் பாராட்டற்பாலதென்றும் பலபடப் பாராட்டி ஆங்கிலப்பனுவலாசிரியர்கள் பாரித்தெழுதியுள்ளார். அவ்வுண்மை யாதெனின், ஒருவருடைய பெருமையினை அவர் செய்த செயலானன்றிக் கருத்து நோக்கத்தால் உணரவேண்டும் என்பதேயாம். அஃதாவது, பெரியோர் பெரியவற்றைக் குறிக்கொண்டு அவற்றிலே முயன்று முடியாது விடுப்பினும் விடுப்பர்; சிறியோர் சிறியவற்றிலேயே குறிவைத்து அவற்றை முடிப்பதுஞ் செய்வர். அதனால் முடிவு ஒன்றையே கருதிச், சிறியோரைப் பெரியோராகவும் பெரியோரைச் சிறியோராகவுங் கருதுதல் கூடாதென்பதாம். இது மிக அழகிய கருத்தென்பது உண்மையே. இத்தகைய நுண்கருத்தை ஆங்கில மக்களுள் ஒருவர் அண்மைக் காலத்தே புதுமையாகக் கண்டு பிடித்திருப்ப, எம் செந்தமிழ் நன்மக்களுள் பலர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அதனை எழிலுற உதாரணத்துடன் விளக்கியிருப்பாராயின், யாம் எத்துணை ஏமாப்புறுதல் வேண்டுமென்பது எடுத்தியம்பற்பாலதோ? இக் கருத்து தமிழ்மறையாம் திருக்குறளில்;

> 'கான முயல்எய்த அம்பினில் யானை
> பிழைத்தவேல் ஏந்தல் இனிது.'

என்றும், வேளாண்மறையாகிய நாலடியாரின்கண்,

> 'இசையும் எனினும் இசையா தெனினும்
> வசைதீர எண்ணுவர் சான்றோர்—விசையின்
> நரிமா உளங்கிழித்த அம்பினில் தீதோ
> அரிமாப் பிழைப்பெய்த கோல்.'

---

1. Browning.

என்றும் காணப்படுகின்றன. இவற்றின் நுணுக்கத்தை நுனித்தறிந்து அறிஞர் களிதுளும்புவாராக. மற்ளுென்று ஆசை பற்றி விரித்தாமாதலின் புலவர் பொறுக்கக் கடவர்.

இதனுல் நாம் நம்முடைய நூல்களை எத்துணைப் பாராட்டிக் கற்கவேண்டுமோ அத்துணைக் கற்கவேண்டும் என்பது புலப்படவில்லையா? பாவன்மையில் தமிழ்த் திருமக்கள் எம்மொழியினருக்கும் என்றும் இளையாதவர் என்பது உறுதியே. தமிழ்ப் புலமை சான்ற சங்கப் புலவர்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவர் தம் எண்ணை மட்டுங் கருதினும், எந்நாட்டுப் புலவரும் இவருக்கிணையாகார் என்பதும் திண்ணமே. செந்தமிழ்வளங் கெழுமுங் காப்பியங்களாகிய சிந்தாமணி, இராமாயணம் முதலியவற்றையும் திருக்குறள் முதலியவற்றையுங் கல்லாதாரைக் குறித்துப் பண்டைச் சான்ருேர் ஒருவர் கூறிய,

> ‘ திருத்தகு மாமுனிசிந் தாமணி கம்பர்
> விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
> கொங்குவேள் மாக்கதையைக் கேளேங் குறளணுகேம்
> எங்கெழிலென் ஞாயி றெமக்கு.’

என்னும் அரும்பாவை நோக்குக. இவற்றைக் கல்லாத மாந்தர் இயல்பும் ‘இங்கிப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல் எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்’ என்றருளிச் செய்த மணிவாசகப் பெருமான் திருமொழியால் உணர்த்தப்படும் துறந்தார் இயல்பும் ஒன்ருகவே காணப்படுகின்றன. அஃதாவது உலகத்துக்கும் அவர்கட்கும் தொடர்பு ஏதும் இல்லை என்பதாம்.

இனி, மேலைச் செய்யுளிலே ‘கம்பர் விருத்தக் கவித்திறமும் வேண்டேம்’ என்ற தொடர் அவர் தம் பாவன்மையின் பான்மையைச் செவ்வன் தெரித்தல் காண்க.

இச்சிற்றுரையில் கம்பர் கவித்திறத்தைக்குறித்துத் தாலீபு லாக நியாயம் பற்றி இரண்டொரு செய்யுட்களைக்குறித்துக் காட்டுதும்.

பொருள், செயல், எண்ணம் முதலியவற்றுக்குப் பொருந்த, நல்லிசைப் புலவர் பாக்கள் ஓசை யொழுக்குப் பெற்று நடக்கும். அவ்வாறாதலின், ஆங்கு ஓரின்பச் சுவை பிறக்கச், செவிக்கமுதாக அவை சிறப்புறுகின்றன. இத்த கைய ஓசையினை யூட்டுதல் எஃகு செவியராகிய நற்பெரும் புலவர் ஒருசிலருக்கே வாய்த்த பேறும். சீவகசிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்கதேவர் அச் செல்வத்துள் வறிஞ ராகவே காணப்படுகின்றனர். பெரியபுராண ஆசிரியராகிய சேக்கிழார் அத் திருவிலே மன்னர் மன்னர்போல் துலங்கு கின்றார். மணிமேகலை ஆசிரியராகிய சீத்தலைச் சாத்தனார் மிக ஆழ்ந்து தெளிந்த நுண்ணிய நிலையிலே கூர்ந்தறிவாருக் கன்றி ஏனையோருக்கு வேறுபாடு தோன்றா நிலையில் வன்மை, மென்மை, நுண்மை முதலிய எல்லாப் பொருள் களையுந் தெரிக்கும் ஓசை நலம் நிரம்பி, அவ்வகைக் கலைத் துறையில் ஒரு தனி முதல்வராகக் காணப்படுகின்றார். கம் பரும் ஓசையைப் பொருட் கேற்ற பெற்றியில் நிறுத்தும் வளமையில் மிக உயர்ந்த அரச பதவியை அடைந்துள்ளார் என்பது இராமாயணச் செய்யுட்களைத் தமிழறியாத வேற்று மொழி மக்களிடம் செப்பினும் அவர்கள் அவற்றைக் கேட்டு இன்புறுதலானும் அறியப்படும்.

சூர்ப்பநகை இராமபிரான் மனத்தை எங்ஙனமேனுங் கவர்ந்து, அவர் காதலைப் பெறவேண்டுமென, எழிலெலாந் திரண்ட உருவுடையளாய் அவர் எதிரே துணுக்கெனத் தோன்றினாள். அத் தோன்றினவள் மனமோ காமவின்பத் திற் படிந்திருத்தலின், அவள் தன் தோற்றம், பார்வை, சாயல், செயல், நடை, மென்மை, பொலிவு முதலியன வெல்

லாம் ஒவ்வோர் அழகைப் புலப்படுத்தல் வேண்டுமென்னும் கருத்துடன் அழகிய வடிவெல்லாந் திகழ வந்தாள் என்பதைக் கல்வியிற் பெரியார்,

'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம னுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'

எனத் தலையாய எதுகைகளும் மோனைகளும், மெல்லின இடையின நெடில் வண்ணங்களும், வழி யெதுகைகளும் வழிந்தொழுக, எடுத்த வடிவிற்கேற்ற இயற்கை நலனும் செயற்கை வினைத்திறனுந் திகழப் பாடியிருத்தலை ஒரு முறைக்குப் பன்முறை இடத்தின் நயமுணர்ந்து பாடிப் பாடிச் சுவைத்தல் வேண்டும். சுவை மிக்கவழி அச் சுவைப் பனவற்றை நாவைத் தட்டித் தட்டி உண்ணல் உலகிற் காண்டுமாகலின், அவ்வாறே சுவையொழுகு இன்னிசைப் பாக்களைப் பன்முறை பாடிப்பாடி இன்பத்தை மேம்படுத்தல் வேண்டும்.

எத்தகைய கவிஞரேனும் உலகவியலுக்கு மாறுபடாது செய்யுள் இயற்றுதல் இன்றியமையாதது. அப்பொழுது தான் கவிக்கும் அவற்றைக் கற்போருக்கும் ஓரியையு உண்டாம். அவ்வியையு இருத்தலினாற்றான் சுவை பிறக்கின்றது. இன்றேல் படிப்பவருக்கு இன்பம் எவ்வாற்றானும் தோன்றுதல் இல்லை. இவ்வியல்பு எத்துணைக் கெத்துணை ஒருவரிடத்துச் சிறந்துளதோ அத்துணைக் கத்துணை அவர் மேன்மை அடைவர்; இஃதில்லாதார் செய்யுள், நம் கருத்தைக் கவர்தல் எஞ்ஞான்றும் இல்லை. ஆகாயப்பூ நாறிற்றென்றவழி அதனைச் சூடக் கருதுவாரும், அதனால் மனவெழுச்சி தோன்றப் பெறுவாரும் யாண்டும் இலர். மக்கள்

நுகர்ச்சி அறிவானே அறியப்பட்டு உணர்ச்சி யுலகத்திலே பொதிந்து கிடக்கும் பொருட்டுறைகளைச் சொல்வகை அறிந்து சொல்லி வெளிப்படுத்துபவனே நல்லிசைப் புலவன். இத்திறன் வெளியுலகப் பொருள்களின் நுகர்ச்சியைத் தமது அறிவாற்றலால் உள்ளவாறே கவர்ந்துகொள்ளும் வன்மை உடையாருக்கே அமைவதாம். இச் சீரிய ஆற்றலும் கம்பர் பெற்றிருந்தார் என்பதை ஓர் எடுத்துக்காட்டான் விளக்குவாம்.

சீதாபிராட்டியார் இராவணனது அசோகவனத்தே சிறைப்பட்டு நெடுநாள் வருந்தி, உடம்பு தேய்ந்து உள்ளம் மெலிந்து, தம் காதலஞ் செல்வன் இராமபிரானை 'இன்று காணலாம்; நாளை காணலாம்' என்னும் நம்புதல் மிகுதலால் உயிர்ப்பொறை சுமந்திருந்தவர், இறுதியில் ஒருநாள் 'இனி உய்வில்லை' என்னுந் துணிவு கொண்டு, தம்மைப் பற்றியுந் தம் இன்னுயிர்த் தலைவரைப்பற்றியும் எண்ணி யெண்ணி 'ஏங்கி'த் தமக்கு நேர்ந்த பழியினைத் துடைத்தல் தம்மாலன்றிப் பிறரால் ஆகாதெனப் பலவும் உன்னிச் செல்லு மிடையில் 'இன்னும் வந்திலரே' என்னும் ஒரெண்ணம் மோத வெகுண்டு,

'வல்லியன் மறவர் வடுவிற் றீர்பவர்
வெல்லினும் வெல்க விளிந்து வீடுக'

என்று வாய்சோர்ந்து இராமலக்குமணர் வென்றாலும் வெல்லுக; அன்றி இறந்தொழியினும் ஒழிக, என்று கூறியதும், சுருக்கென அவர்பால் வைத்த அன்பு இடைமறுத்துத் தகைப்ப, உடனே மற்றோரெண்ணம் தோன்ற,

'இல்லிய லறத்தை யானிறந்து வாழ்ந்தபின்
சொல்லிய வென்பழி யவரைச் சுற்றுமோ'

என்று, தாம் இல்லறம் வழுவிப் பன்னாட்காறும் உயிர் வாழ்ந்தவராதலின், தம் பழி அன்னாரைத் தொடாது,

அதனால் தமது மொழியால் அவர் தமக்கு ஏதம் விளையா தெனக் கூறியதும் ஆகிய செயல் பொன்னினும் மணியினும் வனப்பான் மிகுந்து பொலிந்து காட்டுகின்றது. இவ்வியல்பு நாடோறும் காணப்படுவதே. தாய் தன் மக்கள் அல்லல் விளைக்குஞ் செயல்களை ஓவாதுபுரியக் கண்டபோது உடம்பு வலிகுன்றி உள்ளஞ் சலித்து, 'இவர்கள் செத்தாலும் நல முறுவேன்' என்று அந்நிலையிற் கூறிவிடுதலும் உடனே தனது மொழி தன்மக்களைப் பற்றுமோ என அஞ்சி 'வாழ்த்தி வாழ்ந்தவரில்லை; வைது கெட்டவரில்லை' என்றோர் உலக வசனத்தைக் கூறித் தன் மனத்தைத் தேற்றிக் கொள்ளுவதும் இயல்பேயாம்.

இன்னும் நற்பெரும் பாவலர், தாம் எடுத்துக்கொண்ட பாத்திரங்களுக் குகந்தவாறு சொற்களையும் உவமைகளையும் புணர்த்தோதுவர். இத் தன்மை ஓர் அரிய வினைத்திறனும். இது திருத்தக்க தேவரிடத்துப் பெரிதும் அமைந்து கிடக்கின்றது. தேவர் கோவிந்தையாரின் அழகை எடுத்துக் கூறுவாராகிய இடையர் கூற்றிலே அமைத்து,

'வெண்ணெய் போன்றூறினியள் மேம்பால்போல் தீஞ்சொல்லள்
உண்ண வுருக்கிய ஆனெய்போல் மேனியள்
... ... ... ...
கண்ணுங் கருவிளம்போ திரண்டே கண்டாய்.'

என்று யாத்தமை காண்க. இங்ஙனமே கம்பநாடர் பரதனைச் சேனையுடன் கண்டு, அவன் இராமபிரானுக்குத் தவறு இழைப்பதாகப் பிறழ உணர்ந்த குகன் கூற்றிலே அமைத்து

'எலியெலா மிப்படை அரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை உவந்து கூயினன்'

என்றும்,

'செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய்க் குகனென்றெனை யேசாரோ.'

என்றுங் கூறினர்.

அன்றியும் ஒரு பொருளைக் குறித்துச் சிறப்பிக்க லுறும் பாவாணர் அதனைத் தொடர்பு பொருந்தச் சிறப்பித்தல் வேண்டும். அங்ஙனம் செய்யும் செய்கையில், கண்ணுக்கு விருந்தாகவுள்ள சில காட்சிகளைக் கற்பவர் நெஞ்சகத்தே பதிப்பித்தல் நலம் பயப்பதாம். அது தானும் இயற்கை வழாது வினைத் திறனோடு சொல்லப்படல் வேண்டும். அத் திறன் கம்பருக்கு நனி பெரிதும் உண்டு. இத் திறனிலே இவருக்கு மிக்கார் ஒருவருமிலர்; ஒப்பார் மிகச் சிலரே. சீதாபிராட்டியாரைப் பிரிந்து வருந்தும் இராமபிரான் கடலைக் கண்ணுற, அக் கடலின் காட்சி இங்ஙனம் அவருக்குத் தோற்றியதெனக் கம்பர் கூறிய செய்யுட்களுள் ஒன்றாகிய,

'சேயகாலம் பிரிந்தகலத் திரிந்தான் மீண்டுஞ் சேக்கையின்பால்
மாயன்வந்தான் இனிவளர்வான் என்று கருதிவருந் தென்றல்
ஆயமலர்போல் நுரைத்தொகையும் முத்துஞ் சிந்திப் புடைசுருட்டிப்
பாயலுதறிப் படுப்பதே யொத்த திரையின் பப்பம்மா.'

என்பது நோக்கற்பாலது. தென்றல் இராமபிரான் தன்னிடம் விட்டுப் பிரிந்து நெடுங்காலம் பொறுத்து வந்தான் என்றும், அவன் பல விடங்களிலும், திரிந்தமையான் இளைத்து ஆறுதல் விரும்பினான் என்றும், அத்தகையான் 'இனிக் கண்வளர்தல் ஒருதலை' என்றும், கருதிப் பாயலை உதறிப்போடுவதுபோல இருந்தது எனக் கூறிய அழகு காண்மின். இங்கே படுக்கையிலே பரப்பிவைத்த மலர் போல நுரை விளங்கியதும், திரையின் சுருட்டல் பாயலின் சுருட்டலுக்கும் உதறிப்போடுதல் அலைகள் எழுந்து அடங்குதலுக்கும் மிகப் பொருத்தமாக இயற்கைக்கு மாறு

துள்ளன. முத்துச் சிந்தியது என்பது கடலில் முத்துள்ள செய்தியைக் குறித்தலோடு, அரசர் பாயலில் பள்ளிகொள்ளும் மகளிர் தமது ஊடலால் முத்துமாலையை அறுத்தெறியும் இயல்பையுங் காட்டிக் கற்போருக்கு அகவுணர்ச்சியை எழுப்பி இன்பஞ்செய்கிறது. தென்றல் கருதியதென்பது காற்றின் நிகழ்ச்சியையும், தென்றல் எனவே கடலின் அமைந்த காட்சியையும் காட்டுதலோடு, திருமகளுடன் பிறந்த தென்றல் சீதாபிராட்டியாருக்கு இளையவனும் முறையாலும் திருப்பாற் கடல் இராமனுக்கு வேட்டகமாதலாலும் அதுபற்றி மைத்துனக் கேண்மையுடைய தென்றல் இங்ஙனம் உபசாரம் புரிந்ததென்பதும் புலப்படுகின்றன. இன்னும் இதுபோன்று கண்கொண்டு நோக்குவார்க்குத் தோன்றும் நயங்கள் அளப்பில. அவற்றை விரிவஞ்சி விடுத்தாம் ஆனால் இவை இயற்கைக்கு மாறாகக் காணப்படுமேனும் பழைமை நிகழ்ச்சிகளை உட்கொண்டு ஒரு சாராருக்கு இன்பம் விளைத்தலின் ஏற்றுக் கோடற்பாலனவே. இயற்கை நெறியிலன்றிச் செயற்கை நெறியால் இன்புறாத பிறிதொரு சாரார் இவற்றை அத்துணை விழையார். பண்டைச் சங்கப் புலவர் இயற்கை நவிற்சியையே பெரிதுங்கொண்டவர். பிற்காலத்தவர் புனைந்துரையாகிய உயர்வு நவிற்சியில் அறிவைப் பெரிதும் செலுத்தியவர். இத் தன்மை யொன்றில் கம்பர் சங்கப்புலவருடைய நிலைமையில் குறைந்து விடுகின்றனர். இதுபற்றியே சுந்தரம் பிள்ளை என்னும் பேரறிஞர்,

‘பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே.’

என்று கூறுவாராயினர். இஃதொருபா லிருப்ப, கம்பர் வடமொழிப் பெயர்களைத் தமிழோசைக் கிசையத் திரித்து வழங்கியது பல விடங்களில் செவிக்கினிமை பயப்பினும்

ஒரோவோரிடத்தில் அஃது இன்னாத ஓசையை விளைவித்த லின், காளமேகப் புலவர் அதனை விநோதமாக இகழ்ந் துரைத்தலைப் பின்வரும் செய்யுளால் உணர்க :

“நாரா யணனைந ராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன வுறுதியால்—நேராக
வாரென்றால் வர்ரென்பேன் வாளென்றால் வள்ளென்பேன்
நாரென்றால் நர்ரென்பேன் நான்.”

இக் கூறியவாற்றால் நாம் கடைப்பிடிக்க வேண்டுவது நம் முடைய செந்தமிழ் நூல்களைப் பல்லாற்றானும் ஆராய்ந்து கற்கவேண்டும் என்பதேயாம்.

# ௧0. வள்ளுவரும் பல்லுயிரும்

[திரு. மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.]

வள்ளுவர் என்பது திருக்குறளருளிய திருவள்ளுவரையேயாம். பல்லுயிர் என்றது ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிரீறாக எல்லா வுயிர்களையுங் குறிக்கும். தொல்காப்பியர், புல்லும் மரனும் ஓரறிவினவேயென்றும், நந்தும் முரளும் ஈரறிவினவே யென்றும், சிதலும் எறும்பும் மூவறிவினவே யென்றும், நண்டும் தும்பியும் நான்கறிவினவேயென்றும், மாவும் மாக்களும் ஐயறிவினவேயென்றும், மக்கள் தாமே ஆறறிவுயிரே யென்றும் உயிர்களைப் பகுத்துக் கூறியிருத்தல் உற்றுநோக்கத்தக்கது. முதன்முதலில் ஓரறிவுடையன புல்லும் மரமும் என்றவர், இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாட்டினைப்,

"புறக்கா ழனவே புல்லென மொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப."

என்று விளக்கியுள்ளார். இவற்றைத் தாமெடுத்தாளும் பொருளை விளக்கும்பொருட்டு உவம வாயிலாக வழங்கியுள்ளார். உவமத்தோற்றம் எங்ஙனமெனின், வினை, பயன், மெய் (உடம்பு), உருவென்ற நான்கே வகைபெற வருமென்றனர். உவமையும் பொருளு மொத்தல் வேண்டுமென்பது விதி. புல்லின் உறுப்புக்கள் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை முதலியன. மரத்திற்குரிய உறுப்புக்கள் இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை (மொட்டு), கள், தேன் என்பன. புல்லில் தினையும் கரும்பும், செடியில் வள்ளியும் நெருஞ்சி(முள்)யும் குறளில் காணப்படுகின்றன.

தினை - உருவிற் சிறிய பொருள். 'தினைத்துணை நன்றி செயினும்,' 'தினைத்துணை யாங் குற்றம் வரினும்,' 'தினைத் துணையும் ஊடாமை வேண்டும்', "எனைத்துணையராயினு மென்னுந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்." இவற்றில் தினை சிறிய அளவு என்ற பொருளில் வந்துளது.

கரும்பு - இனிமையுள்ளது. அது சிதைக்கப்படின் இனிமையை அளிக்கும். கீழ்மக்களும் அத்தகையரே. "சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல், கொல்லப் பயன்படுங் கீழ்."

வள்ளி - இக்கொடியின் வேரைப் பிடுங்கி யெறியின் அது வாடும். எது போன்று? 'ஊடியவரை உணர்த்தாமை வாடிய வள்ளி முதலரிந் தற்று' என்றனர் நாயனார்.

நெருஞ்சி - இம் முட்செடியின் பழம் உவமையாக வழங்கப்பட்டுள்ளது. "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாத, ரடிக்கு நெருஞ்சிப் பழம்" அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மென்மையவாயினும், மாதரடிக்கு நெருஞ்சிப் பழத்தின் முள்போலத் துன்புறுத்தும்.

குன்றி - இதன் காய் மூக்கில் கருமையுடைத்து. ஏனைய பகுதியனைத்தும் செக்கச் சிவப்பாயு மிருத்தலியல்பு. நெஞ்சத்திற் கொள்ளும் சினம் கருமையாக முகப்புறத்திற் றோன்றும். "புறங்குன்றி கண்டனையரேனும் அகங்குன்றி, மூக்கிற் கரியா ருடைத்து."

புதல் - தூறு, அடி. அடர்ந்த செடிகளின் தூறில் மறைந்து வேட்டுவர் புட்களின்மேல் அம்பு எய்வர். அது போன்று, தவவுருவம் மேற்கொண்டு இழிவான தொழில் களைச் செய்யும் போலித் துறவிகளை நாயனார் கண்டித்துளார். 'தவமறைந்து அல்லவை செய்தல் புதன் (ல்) மறைந்து, வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.'

மரங்களில் இந்நாட்டிற் பெரும்பான்மையாக எங்க ணுங் காணப்படுவன ஆல், அரசு, பலா, புளி, வேம்பு முதலியன. இவற்றைத் தனிப்பெயர்களால் வழங்காமல் பயன் மரம், வற்றல் மரம், மருந்து மரம், நச்சு மரம் என்று பாகுபாடு செய்துளார். வல்லவன் கையில் உள்ள பணம் நன்மையைப் பயக்கும். எது போன்றெனின், பழமரம் ஊர் நடுவில் பழுத்தால் அனைவருக்கும் பயன்படுவது போன்று. தீவழியிலுண்டாகிய செல்வம் தீவினையையே இழைக்கும்; பிறருக்குப் பயன்படாது; தீண்டப்படமாட்டாது. அகத் தில் அன்பு இல்லையாயின் உயிர்வாழ்க்கை சிறப்படையாது; சிறப்படைவது அருமை. எதுவொத்ததெனில், கடுமை யான (இறுகிய) பாறையிலுள்ள மரம் பட்டுப்போய்த் தளிர் விடுவது போலாம். பயனைத் தரும் மரம் எத்தன்மையது? "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம், நயனுடை யான்கட் படின்." "அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன் பாற்கண், வற்றல் மரந்தளிர்த் தற்று." "நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள், நச்சு மரம் பழுத்தற்று." மணிவாசக ரும் 'தாம் வளர்த்ததோர் நச்சுமாமரமாயினுங் கொலார்' என்றனர். மருந்து மரமென்பது மருந்துக்குதவும் பொரு ளைத்தரு மரமாம். பெருந்தன்மையுடையான் கையிலுள்ள செல்வம் உயிர்களுக்கு அமுதம் போன்றுதவும். மருந்து - உணவு, (அமிர்தம்) அமுதம், அமிழ்தம், ஔடதம்; எப் பொருளும் பொருந்தும். 'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம், பெருந்தகை யான்கட் படின்.'

மரத்தின் கிளை, கொம்பு, எதற்குவமை? "நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந்(து) ஊக்கின், உயிர்க்கிறுதி யாகிவிடும்." கொம்பின் நுனி முயற்சியின் மிகுதியைக் காட்டும். அதனையுங் கடந்து செல்ல முயலல் அளவின்மை யான் வருங் கேட்டினை யுணர்த்தும்.

மரத்தில் காய், கனி விளையும். காய் புளிக்கும், துவர்க்கும்; கனி இனிக்கும். காய் பழுத்தால் பழமாகும்; பழம் முதிர்ந்தால் கனியாகும். ஒருவன் கனி கிடைக்கும் பொழுது காயை யருந்துதல் மடமையாமென்பர். நல்ல சொற்களிருக்கத் தீச்சொற்களைப் பேசுபவர் கனியைத் தள்ளிவிட்டுக் காயைக் கவர்ந்தவராவர். "இனிய வுளவாக இன்னாத கூறல், கனியிருப்பக் காய் கவர்ந்தற்று."

தனிமரப் பெயர்களில் முள் மரமும், பனைமரமும் மிகுந்துள. முண்மரம் இளமர நிலைமையில் வெட்டுதல் எளிது; முற்றினால் வெட்டுங் கையைப் புண்படுத்தும். அதுபோன்று, தீய வொழுக்கத்தை முதலிலே களைதல் எளிது; முற்றினால் களைய முடியாது. இவ்வுண்மையை விளக்குங் குறள் இஃதாகும். "இளைதாக முள்மரங் கொல்க களையுநர், கைகொல்லும் காழ்த்த விடத்து." முள் மரங்கள் பலவுள. கருவேலமரம், உடைமரம், நாரத்தை, எலுமிச்சை, கொடுக்காய்ப்புளி முதலியன. ஆகவே இதுவும் பொதுப்பெயரன்றித் தனிப்பெயராகாது.

தனிப்பெயரா லெடுத்தாளப்பட்ட மரம் பனையேயாம். பனை உயர்ந்து வளரும் மரம். பனைத்துணை (அளவு) யாகக் கொள்ளப்படுவன சிறு நன்றியும், சிறு குற்றமும், சிறிதும் ஊடாமையுமாம். எவர் மாட்டு? பயன் தெரிவார் மாட்டும், பழி நாணுவார் மாட்டும், விழைவு மிகுந்தவர் மாட்டுமே யாம். பனையின் சாறுகள் ஆம். அதனை மிகுதியாக உட்கொள்பவர் வெறிபிடித்தலைவர். அதற்குக் களி, களியாட்டு என்று கூறுவர். சுடவைத்த கள் அடுநறா எனப்படும். கள்ளுண்டவருக்கே களியுண்டாம். காமமானது காமப் பொருளைக் கண்டவுடனே மகிழச் செய்யும். கண்டவுடன் மகிழ்தலும் நினைத்தவுடன் களித்தலும் காமத்திற்கே உள.

களியாட்டு ஈன்ற தாயாலும் வெறுக்கத்தக்கது. களி கொண்டதற்கு ஏது துருவிப் பார்த்தாலும் அகப்படாது. கள்ளாசையுள்ளவர் சான்றோர்முன் உள்குவர்; நாணமென்னும் திருமகள் நீங்குவாள். இவ்வாறு கள்குடித்தலின் தீமையைத் திருவள்ளுவ நாயனார் நன்றாக விளக்கியுளார்.

மரம்போன்ற மக்களுமுளர்! 'நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டா தவனன் மரம்' என்றார் முதிய புலவரும். கல்வி, கேள்வி, குறிப்பறிதல் மக்கட்கு இன்றியமையாப் பொருள்களாம். பண்பில்லாத மக்களே மரத்துக்கொப்பாவர். இதனை, "அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர், மக்கட் பண்பில்லாதவர்" என்ற குறள் விளக்கும். உரம் (உறுதி) இல்லாத மக்களும் மரம் போல்வர்; மரமக்களாவார். "உரம் ஒருவற்கு உள்ள (த்து) வெறுக்கை (செல்வம்) அஃதிலார், மரமக்களாதலே வேறு." மரத்தினால் பாவை செய்யுந் தொழில் அந்நாளிலிருந்த தென்பது குறளால் தெரியவருகின்றது. உலகத்திலே இரப்பாரில்லாரெனின் உலகிற்குப் பெருமையில்லை; அனைவரும் செயலற்று மரப்பாவைபோன் றிருப்பர். "இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம், மரப்பாவை சென்று வந்தற்று." அன்றியும், நாணில்லாத நெஞ்சமுடையாரியக்கம் மரப்பாவை, நாணால் (கயிற்றால்) உயிர் மருட்டியற்று." மரப்பாவையன்றி மண்ணாற் பாவை செய்யும் வழக்கமு மிருந்தது என்பதை மற்றொரு குறள் புலப்படுத்துகின்றது. அறிவில்லாத, கல்வி கேள்வியில்லாத மக்களே அதற்கிணையாவர். "நுண்மாண் நுழைபுல மில்லா னெழில் நலம், மண் மாண் புனைபாவை யற்று."

இதுகாறுங் கூறியது ஓரறிவுயிர்ப் பொருள்களையேயாம்.

இனி ஈரறிவு முதல் ஐயறிவு உள்ள உயிர்களை எங்ஙனம் ஆண்டுளார் என்பதை ஆராய்வோம். இவை ஊர்வன, நீர் வாழ்வன, பறப்பன, ஓடுவன முதலான உயிர்களேயாம். நாகம், பாம்பு, முதலை இவை ஊர்வனவாம். மீன், கயல், பாம்பு, முதலை, ஆமை நீரில் வாழ்வன. அன்னம், கொக்கு, காக்கை, மயில் புள்வகையைச் சேர்ந்தவை. ஆ, ஏறு, குதிரை, கவரிமா, புலி, யானை, களிறு, பகடு, நரி, மான், பிணை, தகர், எலி, முயல் முதலியன ஓடித்திரிவன. இவற்றிற் பெரியன விலங்குகளாம்.

நாகம் - நஞ்சுடைய பாம்பு. 'நாகங் கரந்துறையும்.' 'எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்.' பாம்பு பொதுப் பெயர். நீர்ப் பாம்பு, மண்ணுணிப்பாம்பு என்பனபோன்று பாம்பு பலவகைப்படும். 'பாம்பெனிற் படையும் விலகும்' என்பது முதுமொழி. 'அரவ மாட்டேல்,' 'பாம்பொடு பழகேல்' என்பவைகளும் பழமொழிகளாம். ஒத்து நடவாதவருடன் வாழல் தொல்லையாம். "உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள் (குடிசையுள்) பாம்போ டுடன் உறைந்தற்று." ஊரார் கூறும் வசைமொழி ஒருவரின் நற்பெயரைக் கெடுக்கும். 'அலர்மன்னும் திங்களைப் பாம்பு (இராகு) கொண்டற்று.'

நீரிலிருக்கும் பொழுது முதலைக்கு மிகுந்த வலியுளது; நீரைவிட்டுத் தரைக்கு வரின் அது வலியற்றதாகின்றது. 'கருடா, நலமா' என்ற வினவிற்கு 'இருக்குமிட மிருந்தால் நலமே' என்ற விடை நினைவிற்கு வரத் தக்கது. "நெடும் புனலுள் வெல்லு முதலை அடும்புனலி னீங்கின் அதனைப் பிற."

ஆமை, அடக்கத்திற்குச் சான்றும். அடக்கமுடைமை மக்கட்குச் சிறந்த தன்மை. "ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்க லாற்றின், எழுமையு மேமாப் புடைத்து."

சூதினால் வெற்றிவரினும் அதுவேண்டத் தகுவதன்று. மீன் தூண்டிலிலுள்ள பொன்னை விழுங்குவதாற் பயனென்னை! "வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉம், தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று." 'கயலுண் கண்' என்பது பொதுவான உவமை. வானத்திலுள்ள உடுக்களும் மீனெனப்படும். உடுவானது அதனுக்குத் தலைவனாகிய கலை நிறைந்து வருந் திங்களைக்கண்டு ஐயுறாத போதினும் காதலன் காதலித்த காதலியின் முகத்தைக் கண்ணுற்றபொழுது காதலனோவென்று கலங்கி நிற்கும் என்பது புலவர் நெஞ்சப்பாங்கு. "மதியும் மடந்தை முகனும் அறியா, பதியிற் கலங்கிய மீன்."

முயல் - இலகுவாய்க் கவரத்தக்க உயிர். அதைக் கொல்ல எய்யும் அம்பு வீரனுக்கு அடுத்ததன்று. யானையைக் •கொல்ல விடுத்த வேலாயுதந் தவறிப்போயினும் அதைக் கையாற் பிடித்தல் வீரமாம். "கான முயலெய்த - அம்பினில் யானை, பிழைத்தவேல் ஏந்தல் இனிது."

யானை யென்பது பொதுச்சொல். ஆண்யானையைக் களிறெனவும், பெண்யானையைப் பிடியெனவும் கூறுதல் வழக்கம். பழகிய ஒரு யானையைக்கொண்டு காட்டிற் றிரியு மற்றொரு யானையைப் பிடிப்பார்கள். ஒன்றைச் செய்து அதனால் மற்றொரு வினையை முடித்துக்கொள்ளல் உலக வழக்கு. "வினையால் வினையாக்கிக்கோடல் நனைகவுள் (மதம் பிடித்த), யானையால் யானையாத் தற்று." பாகர்க்கு அடங்காமல் வேல்தாங்கிய ஆட்களைக் குத்திக் கோத்த கொம்புடைய களிறு, சேற்று நிலத்தில் அகப்பட்டுக் கொண்டால் அதனை நரிகள் கொன்றுவிடும். இதனால் எவ்வளவு வலிமையுடையவரும் செல்லத் தகாத இடஞ் சென்றால் எளியராலுங் கொல்லப்படுவர். காலாழ் களரில்

நரியடும் கண்ணஞ்சா, வேலாண் முகத்த களிறு.'' வீரருளு யர்ந்த வீரன் யாரெனில், பகைவனுடைய வேல் தன் மார் பில் பதிந்திருப்பதை யுணராமல் எதிர்த்துவரும் யானையை வெல்ல வேல் தேடுபவனும். "கைவேல் களிற்ருெடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்.'' தளராதிருப்பின் முயற்சி கைகூடும். தளரின் முயற்சி பயனடையாது. அம்பு உடம்பில் தைக்க அதை உணராமல் யானை தன் வலி மையை நிலை நிறுத்தும். நெஞ்சவெழுச்சி யுடையாரும் அங்ஙனமே செய்வர். "சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற், பட்டுப்பா டூன்றுங் களிறு.''

பிணை-மான். பெண்ணின் நோக்கம் மான் நோக்கத் திற்கு ஒப்பாகும். இதனைப் பின் இருகுறள்களும் விளக் கும். "கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல், நோக் கம்இம் மூன்று முடைத்து.' "பிணையேர் மடநோக்குநாணு முடையாட்கு, அணியெவனோ ஏதில தந்து,''

பசு-பெற்றம், ஏறு, பகடு; இவை இனச் சொற்க ளாம். மன்னன் காவலொழியின் அக்காவலால் உண்டா கும் பயன் கெடும். தொழில்முறை நடவாது. "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின்.'' 'ஏற்ப திகழ்ச்சி' என்றுள் மூதாட்டியும். "ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்(கு), இரவின் இளி வந்த தில்.'' ஏறு-காளை; சிங்கம்: புகழும்படியான இல்லறம் நடைபெறுவிடின் காளை, சிங்கம்போன்ற பெருமையான நடை ஆண் மகனுக்கில்லை யென்றனர். "புகழ்புரிந் தில்லி லோர்க் கில்லை, இகழ்வார்முன் ஏறுபோற் பீடுநடை.'' பெற் றம்-காளை. காளையானது புலியின் தோலைப் போர்த்துக் கொண்டால் எவரும் அச்சப்பட்டு அது மேய்ந்துகொண் டிருத்தலைத் தடுக்கமாட்டார். அதுபோன்று, மக்களிற்

சிலர் வலியிலராயினும் வலியுடையார்போன்று தோன்றித் தம் எண்ணத்தை முடிப்பர். "வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று." புலியைக் கண்டால் யானை வெருவும். உருவிற் சிறியராயினும் உருவிற் பெரியாரை வெல்ல வியலும். "பரியது கூர்ங் கோட்ட தாயினும் யானை, வெரூஉம் புலிதாக் குறின்."

மா-குதிரை. இடுக்கணுற்றபொழுது விட்டு நீங்கும் நட்பு நன்றாகாது. அத்தகைய நண்பனை யடுக்காமல் தனியே இருத்தல் நலமாகும். "அமரகத்து ஆற்றறுக் குங் கல்லாமா, (அறிவில்லாத குதிரை) அன்னார், தமரின் றனிமை தலை."

கவரிமா: மானமுடைமை மக்கட்குப் பெருமை. மானம் இழக்கவரின் உயிர்விடல் இனிதாகும். "மயிர்நீப் பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்."

பகடு-யானை, எருமை, பசு இவற்றின் ஆண். எடுத்த வினை யூழால் இடர்ப்படினும் முயற்சியால் முடித்தல் முறை. சேற்றிலகப்பட்ட பண்டியைக் கடாமாடு தளராமல் இழுத்துக் கரை சேர்க்குமன்றோ? "மடுத்தவா யெல்லாம் பக(டு) அன்ன னுற்ற, இடுக்கண் இடர்ப்பா டுடைத்து." "பகடு நடந்தகூழ் பல்லாரோடுண்க." என்னும் நாலடியாரும்.

பறவை இனத்தைக் குறிக்குஞ் சொல் புள். தனிப் பறவையின் பெயரும் புள் என்பர். "குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே, உடம்போ டுயிரிடை நட்பு." குடம்பை கூடா, முட்டையா என்ற வினவிற்குக் "கூட் டைவிட் டுயிர்போவதன் முன்னமே," என்று அப்பர் அருளியிருப்பதை எடுத்துக்காட்டி அது கூடுதானென்

பாருமுளர். பரிமேலழகர் அது முட்டையே யென்பர். குஞ்சு பொரிக்க, முட்டை உடைந்து அழிந்துபோகின்றது. உவமையின் பொருத்தம் விளக்கமுறவில்லை. குழந்தையைப் பெறுந் தாயுடம்பு அழிவதில்லை. அன்றியும், தாயின் கருவும் அழிவதில்லை.

**காக்கையுங், கூகையும்**-காக்கை கா கா வென்று கூவி இனத்தை அழைத்துண்ணு மென்பர். அது போன்றே மக்களுள்ளும் மேன்மக்கள் இனத்துடனுண்பர். "**காக்கை** கரவா கரைந்துண்ணும் ஆக்கமும், அன்ன நீரார்க்கே உள." கூகையென்பது கோட்டான்: இரண்டிற்கும் பகையுளது. பகலில் திரியும் காக்கை; இரவில் திரியும் கூகை. பகலில் காக்கை கூகையை வெல்லும்; இரவில் கூகை காக்கையை வெல்லும். ஆதலால் ஒரு வினையைக் காலமறிந்தே செய்தல் தகுதி. "பகல் வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது." "காக முறவு கலந்துண்ணும்." என்றார் **தாயுமானவரும்**. "ஆயிரங் காக்கைக் கோர் கல்." என்பது அதன் வலியின்மையைக் காட்டும், "காகமுங் கழுகும்." என்ற விடத்தில் பிணந்தின்னுந் தொழிலை யுணர்த்தும், "காக்கைக்கே இரையாகிக் கழிவரே," என்றனர் **திருநாவுக்கரசரும்**.

**அன்னம்**-இப் பறவையின் தூவி (சிறகு, இறகு) மிக மென்மையாக இருக்கும். மாதரடியின் மென்மையை யுணர்த்த இது வழங்கப்பட்டது முன்னர்க் காட்டினும். அன்னம் பாலினின்றும் நீரைப் பிரித்துப் பாலை யுண்ணும் என்பது அதன் மற்றோருயர்ந்த தன்மை. வேறு புலவர்கள் இதனை ஆண்டுளர். **பவணந்தி முனிவர்** தலை மாணாக்கனை "அன்னம் ஆவே" என்று உவமித்துளர்.

**கோக்கு**, மீன் பிடிபடுஞ் சமயம் வரும்வரை காத்திருந்து வந்தவுடன் பறந்து பாய்ந்து பிடிக்கும். "மடைத் தலையில், ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடி யிருக்கு மாங் கோக்கு' என்பது **வாக்குண்டாம்** என்னும் நூலி லுள்ள அடிகளாம். குறளாசிரியர் "கோக்கொக்க கூம் பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து." என்றதனல், காலந் தெரிந்து செய்வதே அறிஞர் செய லாகும்.

**மயில்**—பெண்ணைப்பற்றிய புனைவுரையில் (வருணனை) பெண் நடை மயில்நடை போன்றதென்பர். காதலனொரு வன் தொலைவிற் காணுங் காதலியை, "அணங்குகொல் ஆய் மயில் கொல்லோ கனங்குழை, மாதர்கொல் மாலுமென் னெஞ்சு," என்று ஐயுற்றுத் தெளிவன். மயிலிறகு, அதன் சிறப்பு, அது பீலி எனப்படும்; அது கனமில்லாதது. அதனையும் மட்டுக்கு மிஞ்சி ஏற்றினல் பண்டியின் அச்சு ஒடிந்து விடும். இப் பொருளைக் கொண்ட குறளிதுவாம்: "பீலி பெய்சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ், சால மிகுத்துப் பெயின்."

**மாக்கள்**-ஐயறிவுடைய உயிர்கள் மாக்கள் எனப் படுவர். பகுத்தறிவு உளதாயின் மக்களெனப்படுவர். நாயனர், "கொலை வினையராகிய மாக்கள்," "செவியிற் சுவை யுணரா வாயுணர்வின் மாக்கள்," என்று கொலைத் தீவினை யாளரையும், உணவுண்ணலேயன்றி வேறு வேலை செய்யா தாரையும், **மாக்க**ளென் றழைத்துளார். கல்வி கல்லாதார் உருவத்தில் மக்கள்போன்றிருப்பினும் விலங்காக மதிக்கப் படுவர்; "விலங்கொடு மக்களனையர் இலங்குநூல், கற்றாரோ டேனையவர்." ஆறறிவுயிர்களாகிய மக்களைப்பற்றி விரித் துரைத்தல் மிகையாம்.

---

# கக. தமிழ்நாடு

[திரு. R. P. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.]

நமது தாய் நாடு தமிழ் நாடு ; தாய் மொழியும் தமிழ் மொழியே.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே."

என்று பாரதியார் பாடியவாறு இன்பமும் வீரமும் தமிழ் நாடெங்கும் பொங்கித் ததும்புகின்றன. தமிழ்நாட்டின் பெருமை நமது பெருமையேயாகும். நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாக இந்நாடு, செம்மைசான்ற நன்னாடாய்ச் சிறப்புற்று விளங்கிற்று.

## "வளங்கள் நிறைந்த தமிழ்நாடு"

பழந்தமிழ் நாட்டில் பலவகை வளங்களும் நிறைந்திருந்தன. நீர்வளமும் நிலவளமும் நிலைத்திருந்தமையால், தமிழ்மக்கள் பசியும் பிணியும் அறியாராய் வசியும் வளனும் சிறக்க வாழ்ந்து வந்தார்கள். செந்தமிழ்நாட்டின் சென்னியாய்த் திகழ்ந்த வேங்கடமலையின் ஓங்குயர் சாரலும், தமிழ் முனி வதியும் தென்தொடர்மலையும், அம்மலைக்குத் தென்பால் மந்தர மலையாய் இலங்கிய மகேந்திரமலையும் தமிழ் அகத்தில் நீங்காவளத்தை நிலைபெறச் செய்தன. இன்னும் பூவார்சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசை பாடப் புலவர் பாடும் புகழமைந்த பொன்னியாறு, சோழ நாட்டை நீர் நாடாக்கியது. வையை யென்னும் பொய்யா நதியும், பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை யெனும் திருநதியும், பழம்பதியாய பாண்டிநாட்டை வளம்பெறச்

செய்தன. இன்னும் மஞ்சு சூழ் சோலை மலைநாடாய சேர நாட்டில் பெரியாறு பொழிந்து பெருவளம் பெருக்கியது. தென்குமரிக்குத் தென்பால், பல துளியாப் பெருவெள்ள மாப் பல்கிப் பெருகிய பஃறுளியாறு பரந்து சென்றது. இத்தகைய நீர்வளமும் நிலவளமும் நிறைந்த தமிழ்நாடு அறத்திற்கோர் இருப்பிடமாய் அமைந்து விளங்கிற்று.

## "வண்மை மிகுந்த தமிழ்நாடு"

"தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்னும் உண்மையைத் தமிழ்மக்கள் கடைப்பிடித் தொழுகினார்கள். வேளாண்மை என்னும் விழுமிய பணியை மேற்கொண்ட தமிழ்மக்கள் அறவோர்க்கும் துறவோர்க்கும் ஆதரவாய் நின்று அறநெறியைப் போற்றினார்கள். வறுமை நோயகற்றும் வள்ளன்மை தமிழ்நாட்டினைத் தலைசிறப்ப விளக்கிற்று. வரையாது பொருள் வழங்கி வண்மைக்கோர் இருப்பிடமாய் விளங்கிய வள்ளல்களின் வரலாற்றைத் தமிழ் நூல்கள் விளக்குகின்றன. அறிவாற் குறைந்த உயிர்களிடத்தும் அருள்நெறி காட்டிய வள்ளல்களின் பெருமை உலகம் உள்ளளவும் அழியாததாகும். செழித்தோங்கிப் படர்வதற்குக் கொழுகொம்பின்றி நிலத்திற் குழைந்து கிடந்த ஒரு முல்லைக்கொடியின் துவண்ட நிலைகண்டு மனமுருகி, அக் கொடிக்குப் படரிடமாய்த் தன் அழகிய தேரைவிட்டுச் சென்ற வள்ளலின் வரலாறு பழந்தமிழ் நூல்களிற் பாராட்டப்படுகின்றது. இன்னும் 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்று புகழப்பட்ட பாரி என்னும் வள்ளலும் நம் தமிழ்நாட்டின் திருமகனேயாவான். இவ்வாறு அன்பும், அருளும் தமிழ்நாட்டில் நிறைந்து தமிழ்மக்கள் களித்துச் செழித்து வாழ்வாராயினர்.

"வீரம் செறிந்த தமிழ்நாடு"

வண்மையில் ஒப்புயர்வற்று வாழ்ந்திருந்த தமிழ் மக்கள், ஆண்மையிலும் அவ்வாறே தலைசிறந்திருந்தார்கள். ஆண்மக்கள் அனைவரும் ஆண்மையும் வீரமும் நிறைந்து விளங்கினார்கள். பெண்களும் வீரமக்களைப் பெற்றெடுத்த வீரத் தாயராக விளங்கினார்கள். அமர்க்களம் செல்லுமாறு போர்க்கோலம் புனைந்துநின்ற தன் மகனை நோக்கி, 'ஐயனே! நீ மாற்றாருடன் போர்புரிந்து வெற்றிபெற்று மீண்டால், நான் மிக மகிழ்வேன். அவ்வாறன்றித் தோல்வியுற நேரின், அஞ்சா நெஞ்சோடு அமர்க்களத்தில் நின்று, மாற்றாரது அம்பு நின் மார்பில் பாய்ந்து உயிர் துறப்பாயாயின், உன்னைப் பெற்றபோதினும் பெருமகிழ்வடைவேன்' என்று ஆக்கங்கூறித் தன் அருமைத் திருமகனை அமர்க்களத்துக்கு அனுப்பிய வீரத்தாயர் விளங்கிய நாடு நம் தமிழ்நாடே யாகும். இன்னும் தமிழ்நாட்டின் பெருமையை 'இந்திய நாடு முழுமையும் பரப்பக் கருதித் தமிழ்ச்சேனை கொண்டு வடநாடு சென்று, அயலரசர் அனைவரும் அஞ்சி அடங்க இமயமலைவரையும் சென்று, அம் மலையில் தனது வெற்றிக் கொடியை நாட்டிய வீரனான கரிகாற் பெருவளத்தான் தமிழ் அரசனே யாவான்.

அன்றியும் தமிழ் நாட்டின் பெருமையையும் ஆற்றலை யும் அறியாது வடநாட்டரசர் இருவர் தமிழ் வீரத்தை இகழ்ந்துரைத்தார் என்று கேள்வியுற்று, அடங்காச் சீற்றங் கொண்டு, வடநாட்டின்மீது படை எடுத்துச் சென்று, அவரது செருக்கையும் சிறுமையையும் அமர்க்களத்தில் அழித்து, சிறைசெய்து மீண்ட சேரன் செங்குட்டுவனும் தமிழ் அரசனேயாவான். இவ்வாறு பெருமையும் புகழும் நிறைந்து வீரம் செறிந்த நாடாய் நம் தமிழ்நாடு விளங்கிற்று.

## "மறைகள் மலிந்த தமிழ்நாடு"

இனி உலகில் வாழும் மக்களது உயிர்க்கு உறுதி பயப்பனவாகிய உண்மைகளை உயரிய ஞானத்தால் கண்டு உணர்த்திய ஆன்றோர் தோன்றிய நாடும் தமிழ்நாடேயாகும். அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள் நான்கையும் மறைமுனிவர் நால்வர்க்கும் ஆலமர் செல்வன் அறிவித்த நாடு தமிழ்நாடேயாகும். உறுதிப்பொருள்களில் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய வீட்டை விடுத்து அறம், பொருள், இன்பமாகிய மூன்றையும் முப் பாலாக வகுத்துரைத்த தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தோன்றியதும் தமிழ் நாடேயாகும். உலகில் வாழும் மக்க ளுக்கெல்லாம் உயர்நெறி காட்டிய புலவர் பெருமான் தோன்றிய பெருமை, தமிழ் நாட்டிற்கே உரியதென்னும் உண்மை,

> "வள்ளுவன் தன்னை யுலகினுக் கேதந்து
> வான்புகழ் கொண்ட தமிழ் நாடு."

என்னும் அழகிய மொழிகளால் இனிதுணரப்படும். இன்னும் நயம் தெரி புலவர்க்கு நல்விருந்தாய், கவிநயமும் கற்பனையும் கனிந்து இலங்கிய காவியம் வரைந்த கம்பர் பெருமான் பிறந்ததும் தமிழ்நாடேயாம். இன்னும் தமிழ் மக்களது பெருமைக்கும் செம்மைக்கும் என்றும் அழியாச் சான்று பகர்வதாய்ச் சிலப்பதிகாரம் என்னும் சீரிய நூலைச் செய்த சேரர் தலைமணி தோன்றியதும் தமிழ்நாடேயாகும். இந் நூல் கற்றறிந்த புலவர்களுள்ளத்தைக் கவர்ந்து தமிழ் நாட்டின் பெருமைக்கு ஒரு கலங்கரை விளக்கமாய் நிற்கும் தன்மை, "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த 'தமிழ்நாடு" என்னும் உண்மை உரையால் இனிது விளங்கும்.

இனி, கற்றோர் யாவரும் அறியா அறிவுபெற்ற ஆன்றோர், பத்திமையால் பணிந்து பாமாலை பாடி, உலகினுக்கு ஒளிநெறி காட்டியதும் தமிழ்நாடேயாகும். நிறைமொழி மாந்தர் ஆணையில் அமைந்த மறைமொழியாய மந்திரம் நிறைந்ததும் தமிழ்நாடேயாகும். தொண்டர் நாதனைத் தூதனுய் விடுத்ததும், முதலையுண்ட பாலனை யழைத்ததும், எலும்பு பெண்ணுருவாக் கண்டதும், மறைக்கதவினைத் திறந்ததும் தமிழ்மொழியின் மந்திர வலிமையேயாகும்.

மன்னனது வெப்புநோய் மாற்றிய மந்திர ஏடும், வெந்தழலால் வேகாது விளங்கிய ஏடும், வெள்ளத்தை எதிர்த்த வீர ஏடும், இன்னும் எண்ணரிய மந்திர ஏடும் இலங்குவது தமிழ்மொழியிலன்றோ! இறைவனை நினைந்து நெக்கு நெக்குருகி நெஞ்சம் குழைந்து உயிர்கள் அன்பு நெறியைப் போற்றுதற்குரிய திருக்கோயில்கள் அழகுற விளங்குவதும் தமிழ்நாடேயாகும். பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், மாலை வெண்குடை மன்னவன் கோயிலும், மலிந்து உயிர்களுக்கு ஒளிநெறி காட்டிய நாடும் தமிழ்நாடேயாம். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா' மென்னும் பழமொழியைப் போற்றி வாழ்ந்த தனி மக்கள் வாழ்ந்ததும் தமிழ்நாடேயாகும்.

## "நீதி நிறைந்த தமிழ்நாடு"

நீதியே உயிரினும் உயர்ந்ததென்று கருதி ஒழுகிய நாடு தமிழ்நாடேயாகும். பல வகுப்பார் வாழும் நாட்டில் ஒரு வகுப்பார்க்கு ஒரு நீதி என்னுது, எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அரசநீதி ஒன்றே என்று அறிவுறுத்தியது தமிழ்நாடேயாகும். தம் மகன் தவறு செய்யினும், தாமே தவறு செய்யினும் செம்மை தவருதுநீதி செலுத்

திய மன்னவர் தமிழ் மன்னரேயாவர். ஒரு பசுவின் கன்றை அறியாது கொன்ற தன் மைந்தன்மீது தேராழியைச் செலுத்தி நீதிபோற்றிய மன்னவன் ஆரூரை ஆண்ட தமிழ் அரசன் அல்லனே! தவறு செய்த மைந்தன் தன் மைந்தன் என்றும் கருதாது, அரச குலத்தை வாழ்விக்க அவன் ஒருவனேயுள்ளான் என்பதையும் உணராது, அறநெறி நிற்றலே அரசன் கடமை என்ற உயரிய உண்மை ஒன்றையே துணைக்கொண்டு, தன் மைந்தன்மீது தானே தேர்க்காலைச் செலுத்திய அரச நீதியின் பெருமையை அளவிட்டுரைத்தல் ஆகுமோ!

இன்னும் குற்றம் ஒன்றும் செய்யாத கோவலனைக் கொல்லுமாறு ஆணைசெய்த தமிழ்மன்னன், தான் அறியாது இயற்றிய தவற்றை அறிந்தபோது, ஆவி சோர்ந்து, தாழ்ந்த குடையோடும், தளர்ந்த செங்கோலோடும் அரியாசனத்தினின்றும் மயங்கி விழுந்து மாண்டான் அல்லனே! இவ்வாறு அரசன் நீதி தவறாது செங்கோல் செலுத்திய தன்மையால் தமிழ்நாட்டில் மாதவர் நோன்பும் மடவார் கற்பும் தலைசிறந்து விளங்கின. இத்தகைய மன்னரை உயிராகவும் மன்னுயிரை உடலாகவும் தமிழ்நாடு கருதிய தன்மை,

> "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
> மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்."

என்னும் புறநானூற்று அடிகளால் இனிது விளங்கும். தமிழ்மன்னன் குடிகொன் றிறைகொள்ளும் கொடுங்கோலனாய் அமையாது, ஆறிலொன்று இறைபெற்று, குடிகளைக் கண்ணும் ஆவியுமாய்க் காத்து வந்தான் என்று பழந் தமிழ்க் கதைகள் பாராட்டிக் கூறுகின்றன. அடுவேலால் அரசாங்கத்தை நடத்தாது செங்கோலால் அரசுபுரிந்தமை

யால் தமிழ் அரசு நெடுங்காலம் நிலைத்திருந்தது. இன்னும் அறிவினாற் சிறந்த ஆன்றோரைத் துணைக்கொண்டு அரசியல் நிகழ்ந்தமையால் செம்மை சான்ற நன்னெறியே அரசநெறி யாகத் திகழ்ந்தது. அமர் நிகழுங் காலத்து அரசனே போர்க்கோலம் புனைந்து வீரமாலை அணிந்து சேனையின் முன்னின்று போர்புரியும் பெருவீரனாக விளங்கினான். இத்தகைய அரசர் சமயப் பற்றும் தாய்மொழிப் பற்றும் உடையராகத் திகழ்ந்தமையால், அவர்கள் தமிழ்நாடு எங்கும் எண்ணிறந்த கோயில்களையும், தமிழ்மொழியில் தலைசிறந்த நூல்களையும் இயற்றுவித்தார்கள். இவர்கள் அமைத்த கோயில்களின் அருமை பெருமைகளை இக் காலத்தைய மேல்நாட்டுப் புலவரும் வாயாரப் புகழ்ந்து வாழ்த்துகின்றார்கள். இந்நாட்டுப் பழைய கோயில்களில் விளங்கும் அழகிய சிற்ப வேலைகளும், சித்திர வேலைகளும், விசித்திர வேலைகளும் தமிழ் மக்களது தொன்மை சான்ற நாகரிகத்தினை வெள்ளிடை மலைபோல் விளக்குகின்றன.

காதலும் கற்பும் இனிதமைந்த கன்னியர் வாழ்ந்ததும் தமிழ் நாடு. தாம் காதலித்து மணந்த கணவரையன்றி மற்றைய ஆடவரை மனத்திலும் தீண்டாத மறுவிலா நெறியே தமிழ்மாதர் நெறியாகும். அவ்வாறே தாம் மணந்த மங்கையரையன்றி மற்றைய மாதரைச் சிந்தை யாலும் தொடாத செந்நெறியே தமிழ்நாட்டு ஆடவரது அறநெறியாக அமைந்திருந்தது. தம் தலைவரல்லாத பிறரது நெஞ்சு புகுதலே நிறையமைந்த மாதர்க்குக் குறையெனக் கருதிய நாடு தமிழ்நாடேயாகும். கற்பெனும் பெருமையைத் தெய்வமாகக்கொண்டு வணங்கிய நாடும் தமிழ்நாடே. கற்பின் அளப்பரும் பெருமையை உலகிற்கு அறிவுறுத்திய தும் இந்நாடே. ஆக்கலும் அழித்தலும் நிறையமைந்த மாதரால் ஆகுமென்று வெள்ளிடை மலைபோல் விளக்கிய

தும் இந்நாடே. மனநிறை வாய்ந்த மங்கையர் வாழ்ந்த தமிழ்நாட்டில், காதலனை இழந்து கண்ணீர் வடித்த கண்ணகியார்,

"மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையையும்"

என்று வஞ்சினம் கூறியபோது மதுரை மாநகரம் எரியினுக் கிரையாயிற்றென்று செந்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதனால் மறுவிலாக் கற்புவாய்ந்த மங்கையர், தம் சொல்லால் உலகழிக்கும் திறம்பெற்றிருந்தாரென்பது இனிது விளங்கும். இவ்வாறன்றி உலகினை வாழ்விக்கும் உயரிய திறமும் கற்பமைந்த மங்கையர்பால் களித்திலங்கக் காணலாம். ஆசிலாக் கற்புவாய்ந்த ஆதிரை என்னும் நல்லாள் கையினால் அளித்த அன்னம் அள்ள அள்ளக் குறையாது நிறைந்து தமிழ்நாட்டில் ஊண் ஒலியை ஒடுக்கிற்றென்று மணிமேகலை கூறுகின்றது. இன்னும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்று பொய்யாப்புலவர் புகழ்ந்தவண்ணம் வாய்மொழியால் உலகினை வாழ்விக்கும் உயரிய திறமை, நிறையமைந்த தமிழ்மாதர் வரலாற்றில் இனிது இலங்குகின்றது. அருந்தவமுடையார்க்கே உரியதாகப் புகழ்ந்து கூறப்படுகின்ற ஆக்குந் திறமும் அழிக்குந் திறமும் மாதரது கற்புநெறியில் அமைந்திருந்தமையினாலேயே அந்நெறியைத் திருநெறியாகக்கொண்டு தமிழ்நாடு வாழ்த்தி வணங்கி வழிபடுவதாயிற்று. கற்பினால் சிறந்த கண்ணகியார் பொற்புடைய தெய்வமாக இத் தமிழ்நாட்டில் இன்றும் நின்று நிலவுவதே இவ்வுண்மைக்குத் தலைசிறந்த சான்றாகும்.

"எம்மதமும் சம்மதமாய் ஏற்று நின்ற தமிழ்நாடு"

பழந்தமிழ் நாட்டில் பலவகைச் சமயங்கள் பரவியிருந்தும், பல்வேறு வகுப்பார் வாழ்ந்திருந்தும், சமயப்போரும் சாதிப்போருமின்றி ஒரு வயிற்றில் பிறந்த மக்கள்போலவே தமிழ்மக்கள் வாழ்வா ராயினர். செம்பொருளாய சிவபெருமான் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், அறவோர் பள்ளியும் தமிழ்நாட்டில் அடுத்தடுத்து அமைத்து வைத்தனர். தமிழ்மக்கள் தமது அறிவிற்கும் மனப்பான்மைக்கும் பொருந்திய சமய நெறியை ஏற்றொழுகும் உரிமை பெற்றிருந்தார்கள். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள் சமணசமய அடியாராகவும், அவரின் உடன் பிறந்தவனாய சேரன் செங்குட்டுவன் சைவசமய சீலனாகவும் விளங்கிய தன்மையே இவ்வுண்மைக்குத் தலைசிறந்த சான்றாகும். இவ்வாறே அறுபான்மும்மை அடியார்களில் ஒருவராய மங்கையர்க்கரசியார் சைவநெறியில் சிறந்த பற்றுடையவராயிருப்ப, அவர்தம் தலைவனான பாண்டிய மன்னன் சமண சமயம் சார்ந்தொழுகுவா னாயினன். இத்தகைய மனப்பான்மை, தமிழ் நாட்டில் சமயப்பொறுமை இனிது இலங்கிற்றென்பதற்கு என்றும் அழியாச் சான்று தருவதாகும்.

"சாதி எனும் சுழிகடந்த சமத்துவநன் னாடு"

இன்னும், இவ்வுலகில் மக்களாய்ப் பிறந்தாரெல்லாம் பிறப்பால் ஒற்றுமையுடையவரென்றும், ஒழுக்கத்தாலும், செய்தொழிலாலுமே உலகில் வேற்றுமை உண்டென்றும் விளக்கமாக எடுத்துரைத்த நாடு இத் தமிழ்நாடே யாகும். ஏனைய நாடுகள் சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறி நின்ற காலத்தில் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற உண்மையை உலகி

னர்க்கு உணர்த்தியது தமிழ்நாடேயாகும். தொழில் முறையில் எத்தொழிலையும் இழிதொழில் என்று இகழாது மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் தொழில்களெல்லாம் சிறந்த தொழில்களாகவே பாராட்டப்பட்டன. இதனு லேயே தமிழ்நாட்டில் வழங்கும் வகுப்புப் பேர்களெல்லாம் பிறப்பினை அடிப்படையாகக் கொள்ளாது தொழில்முறை யால் பிறந்த பேர்களாகவே விளங்கக் காண்கின்ரேம். மறை பயிலும் தொழிலை மேற்கொண்ட மாந்தர் மறையோர் என் றும், வேளாண்மை என்னும் விழுமிய தொழிலை மேற் கொண்ட மக்கள் வேளாளரென்றும், வாசம் விற்பவர் வாச வர் என்றும், வெற்றிலை விற்போர் இலைவாணிகர் என்றும், பறை சாற்றுவோர் பறையர் என்றும், பண்ணோடு பாடவல் லோர் பாணரென்றும் இவ்வாறே பலவகுப்பாரும் அவர வர் மேற்கொண்ட தொழிலுக்குரிய பெயர்பெற்று வாழ் வாராயினர். எக்குடியில் பிறப்பினும் எத்தொழிலைச் செய் யினும் ஒழுக்கமுடையவர் உயர்ந்தவரென்றும், ஒழுக்கமற் றவர் தாழ்ந்தவ ரென்றும் தமிழ்மக்கள் கருதுவாராயினர்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவனர் திருமொழி யாகும்.

"இறை ஒளியும் இசை ஒளியும் இலங்கிநின்ற தமிழ்நாடு"

இன்னும், இயற்கை நலங்கள் இனிதமைந்த இந் நாட்டில், இறைவனை இயற்கை அழகில் கண்டு வணங்கிய வரலாறு அறிவுடையார் கருத்தைக் கவர்வதாகும். கண் ணினைக் கவரும் வனப்புவாய்ந்த மலைநாட்டில், மந்தியு மறியா மரங்களும், மஞ்சுதோய்ந்த சோலைகளும், மனத்தினை ஊக்கி ஒருவழி நிறுத்த, இளமையும் அழகும் இனித

மைந்த பாலன் வடிவமாக இறைவனைக் கண்டு வழிபாடியற்றிய பெருமை தமிழ்நாட்டிற்கே உரியதாகும். இன்னும் வேங்கடமலையின் விழுமிய சோலையினும், 'கொம்பார் சோலைக் கோல வண்டி யாழ்செய் குற்றால'த்தினும் இறைவனது பெருமையைக் கண்டு வழிபட்டு நின்றது தமிழ் நாடேயாகும். இறைவனது பெருமையைக் குழலினும் யாழினும் அமைத்து ஊன்கரைந்து, உயிர்கரைந்து உருகி நின்றதும் தமிழ் நாடேயாம். குழலும், வீணையும், யாழும் குழைய மழலை மொழிகளால் மறைமொழி யோதிய ஞானப் பாலர் பிறந்ததும் இந்நாடே. திறம்படக் கற்ற கல்வியின் திண்மையால் இறைவனது நெற்றிக்கண்ணைக் கண்டும் கலங்காது நின்ற புலவரேறுகள் பிறந்ததும் இந்நாடே. இத்தகைய புலவரது வன்மையால் வளம்பெற்று இயல் இசை நாடகம் என்னும் முத்துறைகளிலும் மேம்பட்டு என்றும் சீர் இளமை குன்றாச் செம்மொழியாய் விளங்கும் தமிழ்மொழி வழங்கும் திருநாட்டை மன மொழி மெய்களால் வழிபடுகின்றேன்.

---

# கூ. நாகரிகம்

[வித்துவான், ஞா. தேவநேசன்]

'நாகரிகம்' என்னும் சொல்லுக்குத் 'திருந்திய வாழ்க்கை' என்பது பொருள். அறிவும் அதன்வழிப்பட்ட ஒழுக்கமும் சேர்ந்து திருந்திய வாழ்க்கையாகும். ஒழுக்கமின்றி அறிவுமட்டு மிருப்பின், அது நாகரிகமாகாது; அநாகரிகத்தின்பாற் படுவதேயாகும்.

அறிவென்பது ஒழுக்கத்திற்குக் காரணமாகி, இயற்கையாகவும் செயற்கையாகவும் இருவகையா யிருப்பது. அவற்றுள் இயற்கையாவது குடிப்பிறப்பாலும் தெய்வத்தாலும் உண்டாவது; செயற்கையாவது கல்வியாலும் நல்லினத்தாலும் உண்டாவது.

ஒழுக்கமென்பது அகம் புறமென்னும் இருவகைத் தூய்மை. அவற்றுள், அகத்தூய்மையாவது நினைவு சொல் செயலென்னும் முக்கருமங்களும் தூயவாயிருத்தல். புறத்தூய்மையாவது உடம்பு, உடை, உணவு, காற்று, வீடு முதலியன தூயவாயிருத்தல்.

புறத்தூய்மையினும் அகத்தூய்மையே நாகரிகத்திற்குச் சிறந்ததாக எண்ணப்படும். ஞானத்தாலும், ஒழுக்கத்தாலும் இல்லறத்தினும் பன்மாண் சிறந்த துறவறத்தில் புறத்தூய்மை ஒரு பொருளாகக் கொள்ளப்படுவதன்று. இல்லறத்தினும் ஒருவன் எத்துணை எளியனாயிருப்பினும், தன்னையும் தன் பொருள்களையும் தூயவாய் வைத்துக் கொள்வதே புறத்தூய்மையாகும். அழகியனவும் விலையுயர்ந்தனவுமாகிய உடைகளால் உடம்பைப் பொதிவதும், விலையும் சுவையு மிக்க உண்டிகளைப் பன்முறை யுண்பதும்,

மேனிலையும், அகலிடமுமுள்ள மாளிகைகளில் வாழ்வதும், வசதியும் விலையுயர்ந்தனவுமான வாகனங்களில் ஊர்வதும், இயந்திரத்தாலும் ஏவலாளராலும் வினைசெய்வதும், இன்னும் இவைபோல்வன பிறவும் (அறிஞர்களும் அறிவிலிகளுமான) செல்வர்க்கே யுரிய ஆடம்பர வாழ்க்கையன்றி நாகரிக வாழ்க்கையாகா. இவற்றை நாகரிகமென் றெண்ணுவது மேலைப் புதுநாகரிகம் பற்றிய திரிபுணர்ச்சியாகும்.

'கந்தையானாலும் கசக்கிக் கட்டு'வதும்,

'கூழானாலுங் குளித்துக் குடி'ப்பதும்,

'குடிலானாலுங் கூட்டிக் குடியிரு'த்தலுமே.

தமிழ்நாட்டுத் தலைநாகரிகமாகும். கூட்டலாவது மயல் அகற்றல்.

பரிமேலழகர் திருக்குற ளுரைப்பாயிரத்தில் ஒழுக்கத்தைப்பற்றி, "ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்" என்று கூறியுள்ளார். இஃது எல்லார்க்கும் பொதுவானதும் நடுவுநிலை திறம்பாததுமான தமிழொழுக்கத்திற்குச் சிறிதும் வேண்டப்படாது. இதை அவ்வுரை யாசிரியரே மீண்டும்,

"அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புகளொழித்து எல்லார்க்கு மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி, இல்லறந் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது" என்று நூலாசிரியர் கருத்திற்கேற்பக் குறித்துள்ளார். ஆதலால் ஒழுக்கமென்பது எல்லார்க்கும் பொதுவான முக்கருமத் தூய்மையே யன்றிக் குலந்தோறும் வேறுபட்ட வருணாச்சிரம

தருமமன்று. நாகரிகமென்னும் சொல்லைத் திருவள்ளுவர், "கண்ணோட்டம்" என்னும் பொருளில் வழங்கியுள்ளார்.

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்."

என்னும் குறளுரையில், நாகரிகத்திற்குக் கண்ணோட்டமென்று பொருள் கூறப்பட்டுள்ளது. இதே பொருளில் கம்பரும்,

"நாக்கரியும் தயமுகனார் நாகரிக மல்லாமை'

என ஆண்டிருக்கின்றனர். கண்ணோட்டம் தூய நினைவுகளில் அல்லது திருந்திய குணங்களில் ஒன்றாதலின் நாகரிகமெனப்பட்டதென்க.

நாகரிகமென்னும் சொல் 'நகர் அகம்' என்னும் சொற்றொடரின் (அல்லது பகுபதத்தின்) திரிபாகும். நகர் என்பது பேரூர் அல்லது பட்டினம். அகமென்பது இடம் அல்லது இடத்திலுள்ள ஒழுக்கம்.

மக்கட் பெருக்கால் சிற்றூர்கள் பேரூர்களாவதும், பேரூர்கள் நகரங்களாவதும் இயல்பு. சிற்றூர் சிறிது சிறிதாக நகர்ந்து பேரூரானபின் நகரெனப்படும். நகர் என்பது முதனிலைத் தொழிலாகு பெயர்; நகரம் என்பது அம் சாரியைபெற்ற முதனிலைத் தொழிலாகுபெயராகவும், அம் விகுதிபெற்ற தொழிலாகுபெயராகவுங் கருதப்படும். நகர்தலாவது பெயர்தல் அல்லது தள்ளுதல். மக்கள் நெருக்கம் பற்றி ஒரு மனையிலுள்ளார் நகர்ந்து புதுமனை புகுவதும், ஒரு தெருவிலுள்ளார் நகர்ந்து புதுத்தெரு புகுவதும் கண்கூடாக் காண்கின்றோம். இங்ஙனமே, ஓர் ஊரானது சிறிது சிறிதாய் நகர்ந்து நாளடைவில் நகராகின்றது.

பண்டைத் தமிழின்படி ஊர், நகரம் என்பன ஒரு பொருட் சொற்கள். ஊர் என்னும் பெயர்க்கும் இதுவே

காரணம். ஊர்தலும் நகர்தலும் (ஏறத்தாழ) விரைவளவில் ஒன்றே. முற்காலத்தில் மருதநிலத்தூர்களே ஊர்களெனப் பட்டன. குறிஞ்சி, முல்லே, பாலே நிலங்களிலுள்ள குறிச்சி பாடி பறந்தலேகளே விட மருதநிலத்தூர்கள் மிகப்பெரியனவா யிருந்தன. வாணிகம்பற்றி நெய்தல் நிலத்துப் பட்டினங் களும், உழவுபற்றி மருதநிலத்தூர்களும் மிகச் சிறந்தனவும் பெரியனவுமான நகரங்களாயின. அவ்விருவகை நகரங்களி லும் வாணிகம் பற்றியும் உழவுபற்றியும் பலவகைக் கைத் தொழில்களும் சிறந்திருந்தன. பட்டினங்களேயும் ஊர்களே யுமே பண்டைமன்னரும் தத்தம் தலேநகராகக் கொண் டிருந்தார்கள். காவிரிப்பூம்பட்டினமும் கொற்கையும் நெய்தனிலத் தலேநகர்களாகவும், உறையூரும் மதுரையும் மருதநிலத் தலேநகர்களாகவும் இருந்தமை காண்க.

உழவு வாணிகம் என்னும் இரண்டனுள் உழவே தலேமையானதாகவும், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத தாகவும் வாணிகத்திற்குக் காரணமாகவும் இருத்தலின், முதலாவது ஏற்பட்ட தொழில் உழவே என்றும், முதலா வது நகராகியது மருதநிலத்தூரே என்றும் தெரிந்து கொள்க. பலநிலத்து மக்களும் தொழில்பற்றியும், பாது காப்புப் பற்றியும் செயப்படுபொருள்களா[1] லேற்பட்ட வசதி பற்றியும், வாணிகம் பற்றியும் ஊரையும் பட்டி னத்தையும் அடுத்ததினல் அவை விரைந்து நகரும் மாநகரமுமாயின. ஊர் என்னும் பெயர் இக்காலத்தில் பலவகை யூர்களுக்கும் பொதுப் பெயராகவும், சிற்றூர் என்னும் பொருளில் சிறப்புப் பெயராகவும் வழங்குகின்றது; நகரென்னும் பொருளில் வழங்குகின்றிலது.

பட்டிகளிலும் சிற்றூர்களிலுமிருந்த மக்களேவிடப் பட்டினங்களிலும் நகர்களிலுமிருந்த மக்களே நாகரிகமா

1. Manufacture.

யிருந்தனர். இக் காலத்திலும் பெரும்பான்மை அதுவே. மக்கட்பெருக்கால் நகரங்களில் வழக்குத் தீர்ப்பிற்கும் பொருட்காவலுக்கும் ஊராண்மை நாட்டாண்மை முதலிய அரசியல்களும், அவற்றின் சட்டங்களும், அவற்றை மீறிய வழித் தண்டங்களும் ஏற்பட்டன. தண்டனைகட்கஞ்சி மக்கள் திருந்திய ஒழுக்கமுடையராயினர். பலவகைக் கைத்தொழிலால் பலவகைப் பொருள்களும் செய்யப்பட்ட தனால் வசதியாகவும் சிறப்பாகவும் வாழத் தொடங்கினர். சிறந்த கலங்களிற் சமைத்துண்ணவும், வசதியான வீடுகளில் வசிக்கவும், நெய்தவுடைகளை உடுக்கவும் தலைப்பட்டனர். நடையுடைபாவனைகள் நாளடைவில் திருந்தி வரலாயின. இங்ஙனமே [1]நாகரிகமானது நகரங்களில் சிறிது சிறிதாக வளர்ந்து முதிர்ச்சியடைந்தது. 'நகரகம்' என்னும் சொல் 'நகரிகம்' 'நாகரிகம்' 'நாகரீகம்' என மருவி வரும்.

சிற்றூர்களிலும் பட்டிகளிலுமிருந்த மக்கள் நாகரிக மின்றி மிலேச்சராயும் முரடராயுமிருந்து வந்தனர். இக் காலத்தினும், நாகரிகமில்லாதவனைப் 'பட்டிக்காட்டான்' என்பது வழக்கம்.

நாகரிகமென்னும் சொல் நாகர் என்னும் பெயரி னின்று வந்ததென்றும், நாகரென்பார் நாகரிகத்திற் சிறந்

---

1. ஆங்கிலத்திலும் நாகரிகத்தைக் குறிக்கும் Civilisation என்னும் சொல் இதே காரணத்தாற்றான் உண்டாயிருக்கிறது. (Civitas) என்பது லத்தீன் (Latin) மொழியில் நகர் அல்லது பட்டி னம் (City) என்று பொருள்படும். அதிலிருந்தே Civilise என்னும் வினை யுண்டாகும். மரியாதையை அல்லது திருந்திய ஒழுக்கத்தை உணர்த்தும் Civility என்னும் சொல்லும் அதினின்றும் திரிந் ததே. Civil: having the refinement of city-bred people. Civil war: a war between citizens of the same state. City: a large town. L. civitas (Chamber's Etymolcgical Dictionary).

திருந்தவரென்றும் ஆயிரத்தெண்ணூறாட்டை முற்றமிழர்[1] என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது. நாகரென்பார் நாக நாடெனப்பட்ட கீழ்த்திசை நாடுகளில் நாக வணக்கம் கொண்டிருந்த மக்கள் வகுப்பாரே. நாக வணக்கமுடைமை பற்றி நாகரெனப்பட்டார். நாகருடைய நாடு நாகநாடெனப் பட்டது. நாகம்[2] என்பதும், நாகர் என்பதும் பாம்பின் பெயர்கள். நகர்வது நாகர். அது முதனிலை திரிந்த தொழி லாகுபெயர்; நாகர் என்பது நாகம் என மருவும்.

நாகம் என்னும் சொல்லுக்கு மலையிலுள்ளதென்றும் மரத்திலுள்ளதென்றும் வடநூலார் பொருள் கூறுவது சிறிதும் பொருந்தாது.

கீழ்த்திசை நாடுகளில் பெரும் பாம்புகளிருந்தனவாக வான்மீகி இராமாயணக் கிட்கிந்தா காண்டத்தாலறியக் கிடக்கின்றது. இற்றைக்கும் கழிபெரு நச்சுப் பாம்புகள் தென்அமெரிக்காக் கண்டத்திலுள்ளனவாகச் சொல்லப் படும். நாகத்தின் தீமைபற்றி அதைத் தெய்வமாக மக்கள் வணங்கி வந்தனர் என்க.

நாகத்தோடு பெயரொப்புமை பற்றி நாகரை நாகத்தலை யும் மக (மானுட) ருடம்பும் பெற்ற ஒருவகை உயர்திணை வகுப்பாராகப் பிறழக் கருதுவர் சிலர்.

---

1. Tamil 1800 years ago.

2. ஆங்கிலத்திலும் Snake என்பது இதே பொருள்பற்றி யது. Snake: A creeping animal; snican, to creep (Chamber's Etymological Dictionary).

நகர் நாகம் என்னும் தமிழ்ச் சொற்களே. 'S' என்னும் முதல் எழுத்துப் பெற்று ஆங்கிலத்தில் வழங்குமென்க. அது முதற் குறைக்கு மாறானதோர் முதல் விரியாகும். ஆங்கிலத்தில் Prosthesis என்பர்.

பர்மா, சாவகம் முதலிய தீவுகளும், ஆஸ்திரேலியா, அமெரிக்காவென்னும் கண்டங்களும் வங்காளக் குடாக் கடலில் அமிழ்ந்துபோன நிலப்பாகங்களும் நாகநாடுகளாகும். மணிமேகலையில்,

"கீழ்நில மருங்கி னாகநா டாளும்,"

"நாக நன்னாட்டு நானூறி யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்,"

"நாக நாடு நடுக்கின் றாள்பவன்
வாகை வேலோன் வளைவணன்."

எனக் கீழ்த்திசை நாடுகள் பொதுவாகவும் சிறப்பாகவும் நாகநாடெனச் சுட்டப்பட்டன.

சாவகநாட்டுள்ள புண்ணியராசன் தலைநகர் நாகபுரமெனக் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணச் சுந்தரகாண்டத்தில்,

"கீண்டது வேலைநன்னீர் கீழுறக் கிடந்தநாகர்
வேண்டிய வுலகமெங்கும் வெளிப்பட மணிகண்மின்ன
ஆண்டகை யதனை நோக்கி யரவினுக் கரசர்வாழ்வும்
காண்டகு தவத்த னேனென் யானெனக் கருத்துட் கொண்டான்"

என்னும் செய்யுளில் நாகநாடு குறிக்கப்பட்டுள்ளது. இதில் கீழெனபது கிழக்கு. இதைக் கடலின் அடிப்பாகமெனக் கொண்டு இடர்ப்படுவர் சிலர்.

அனுமான் கடலைத் தாவின வேகத்தினால் எழுந்த காற்று மோதுதலினாலே, கீழ்த்திசையில் பூமியின் வளைவான பாகத்திலுள்ள கடல்நீர் விலகி, அதனால் முன்னம் மறைக்கப்பட்டு (அதற்கப்பால் கிழக்கே) இருந்த நிலப் பாகம் அல்லது நாகநாடு தோன்றிற்று என்பது இச் செய்யுளின் கருத்தாகும்.

பூமி உருண்டையாயிருத்தலால் கிழக்கே செல்லச் செல்லப் பூமியின் கீழ்ப்பாகமாகும் அமெரிக்கா பூமிக்கு நேர் கீழாகும்; அதனால் கீழ்ப்பூமி எனப்படும். அது பூமியின் மேற்பரப்பின் வழியாச் சென்றெய்தப்படுவதல்லது நிலத்தை யகழ்ந்தும் கடலின் மூழ்கியும் நேர்கீழாகச் சென்றெய்தப்படுவதன்று. மேற்கே மலைத்தொடரிருந்தமையால் தமிழ்மக்கள் மேற்றிசையிற் பெரும்பாலும் சென்றிலர். கிழக்கே மலையின்றி யிருந்ததுடன் நிலத்தொடர்பும் நெடுந்தூரமிருந்ததாகத் தெரிகின்றது.

நாகநாட்டை யடுத்த கீழ்க்கரையூர்கள் நாகூர், நாகப் பட்டினமெனப் பெயர்பெற்றிருக்கின்றன.

நாகரில் நாகரிகரும் அநாகரிகருமாக இரு வகுப்பார் இருந்திருக்கின்றனர். நாகரிக வகுப்பைச் சேர்ந்த கன்னிகைகளையே அர்ச்சுனனும் சோழனும் மணந்ததாகப் பாரதமும் மணிமேகலையுங் கூறும்.

மணிமேகலை: ஆதிரை பிச்சையிட்ட காதையுள்,

"சாதுவ னென்போன் தகவில னாகி

..............................

வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையிற் றானுஞ் செல்வுழி
எளியிரு முந்நீர் வளிகலன் வெளவ

..............................

நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயினன்

..............................

ஓங்குயர் பிறங்க லொருமர நீழல்
தூங்குதுயில் கொள்ளவச் சூர்மலை வாழு
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்

பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பினனிவன்
தானே தமியன் வந்தன னளியன்
ஊனுடை யிவ்வுடம் புணவென் றெழுப்பலும்

..................................

கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையில்
எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி நோக்கி."

என்னும் அடிகளால் நாகரில் ஒரு வகுப்பார் அம்மணரா யிருந்தாரென்றும், மக்களைக் கொன்று தின்றாரென்றும் அறியக் கிடக்கின்றது. ஆதலால், நாகரிகம் என்னும் சொல் நாகர் என்பதினின்றும் வந்ததன்று என்றும், நாகரென்பார் கீழ்த்திசை நாடுகள் பலவற்றிலுமுள்ள மக்கட் கூட்டத்தாரே என்றும், அவருட் சிலர் நாகரிகராயும் சிலர் அநாகரிகராயு மிருந்தனரென்றும் அறிந்துகொள்க.

# கந. மொழியும் மொழிபெயர்ப்பும்

[காழி சிவ. கண்ணுசாமி, பி. ஏ.]

நெஞ்சிடை நிகழும் நினைப்பினைப் பிறர் அறிய இயலு மாறு ஒரு குறிப்பிட்ட உருவமைத்து வெளியிடுதலே மொழியாகும். குறிப்பிட்ட ஒருவகையானன்றி ஒவ்வொரு வரும் தத்தம் கருத்துச் சென்றவழி நினைவை வெளியிட முயலுவரேல், அது பெருத்ததொரு குழறு படையாகுமே யன்றித் திருத்தமுற்ற மொழியாகாது. பல்லாற்றானும் பரந்த இவ்வுலகில், பற்பல காலத்தில் இடம்பெறும் மக்கட் குழாம் பல திறப்பட்டதாகலின், அத்திறப்பட்ட மக்களனைவரும் தத்தம் நெஞ்சிடை யெழூஉம் நினைவுகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு ஒரு தலையாய ஒரு குறியீட்டு மொழியை யமைத்துக்கொள்ளுதல் என்பதூஉம், அதன் வழி அவர்களனைவருமே யன்றிப் பின்வருவோரும் நின்று மொழிந்து வருதலென்பதூஉம் இயல்பாகவே இயலாத தொன்றாகும். ஆயினும், குறிப்பிட்ட பகுதியாகிய ஒரு நாட்டில் ஒரே காலத்தில் உடம்பெடுத்துள்ள ஒரு தொகுதி மக்கள் தம்முள் ஒருங்கு சேர்ந்து ஒரு குறியீடமைத்து அதன்வழி நினைவுகட்கு உருவளித்து வருதல், அறிவினுக் கேற்ப, எளிதாகும். இதுவே மொழித் தோற்றமாகும். இவ்வாறு தோற்றமுறும் மொழியமைப்பு அவ்வந்நாட்டு மக்கட் கேற்றவாறு பல்வேறு யமைந்து தனித்தனிப் பெயர் பெற்று நிலவிவருதலும் இயல்பே.

இனி, நினைப்பினுக்குக் குறிப்பிட்ட மொழிவழி உரு வமைத்து வெளியாக்குதல் எத்துணை யியலும் என்பதை யாராய்வாம். வெளித்தோற்றத்திற்கு நெஞ்சம் அல்லது அகம் என்ற ஒன்று கட்டுக்கோப்பான உடற்கோட்டத்தி னுட் சிறை வைக்கப்பட்டது போலத் தோற்றினும், அந்

நெஞ்சிடை நிகழும் நினைவுகட்கு எவ்வித கட்டுத் திட்டமும் கிடையா தென்பது ஒப்பமுடிந்ததோருண்மையாகும். எல்லையும் வரம்பும் வண்ணமுங் கடக்க ஒரு தனிப்பரம் பொருளுக்கு இன்னதுதான் உருவென்று அறிவினாலேனும் அமைத்துக் கூறுதல் எத்துணை யியலாததாகுமோ, அத்துணையே, நெஞ்சத்தெழும் கட்டுத்திட்டமற்ற நினைவுகள் ஒவ்வொன்றினுக்கும் ஏற்றதொரு மொழியுருவமைத்தலும் இயலாததாகும். என்னை? நினைவு எல்லைக்கும் வரம்பினுக்கு முட்படாதது; மொழியோ ஒரு குறிப்பிட்ட எல்லைக்கும் வரம்பினுக்கு முட்பட்டது ஆகலின். எனவே, காற்றைப் பிடித்துக் கரகத் தடைத்துக் காற்றின் உருவைக் கணிக்க முயறல் எத்துணை யெளிதோ அத்துணை யெளிதே ஒரு நினைவினுக்கு அதற்குரிய உருவமைத்தலுமாகும். இதனையன்றோ, "ஒரு புலவனது செய்யுள் நலம், செய்யுளெழுதுங்கால் அவன் நெஞ்சத்தெழுந்த நினைவுத் தொகுதியின் பெருநலத்திற்கு ஈடாகாது. அரும் பெரும் ஆற்ற லுள்ளடக்கி அழியா மாலைத்தாகிய ஆவியான உயிரினின்றெழுவதே நினைவு. இவ்வாறு, வியத்தக்க மாண்புடன் எழுந்த ஒரு நினைவை அழிதன் மாலைத்தாய உடல் உறுப்புவழி, மக்கள்தஞ் சிற்றறிவிற் கெட்டியவாறு அமைத்துக் கொண்ட, குறுகிய, குறையுற்ற மொழியென்னும் உருவமைத்து உள்ளவாறு வெளியிடுதல் ஒல்லுமோ? என மேரீ காரோலி[1] என்ற ஓர் ஆங்கிலப்பெண்ணறிஞர் திறம்பட மொழிந்தனர். அன்றியும், "ஆ! என் நெஞ்சில் என்னென்னவோ ஒன்றின்மேலொன்றாகக் கருத்துக்கள் கிளைத்தெழுகின்றன; அவற்றையெல்லாம் எவ்வாறு நீங்களறிய எடுத்துமொழிவதென்பது எனக்குத் தெரியவில்லை," என்றும், ஆணிப்பொன் னம்பலத்தே காணுங் காட்சி யொப்பதொரு

1. Marie Corelli.

காணற்கரிய காட்சியைக் கண்டுழி யொருவர், "ஆ! அதை யென்னென்று கூறுவேன்! எவ்வாறு எடுத்துரைப்பேன்! ஆயிரம் நாவைப் படைத்த 'ஆதிசேட'னு மாகாதெனின், என்னால் முடியுமோ! முடியுமெனினும் மொழியுஞ் சாலாது," என்றென்றும் வரும் வழக்காறுகளானும் நினைவின் அளப்பருந் தன்மையையும் மொழியின் குறைவையும் எளிதில் உணரலாம். நினைவோ ஞாலத்தினும் பெரிது; (அதைக் குறிக்கவமைந்த) மொழியோ (அந்நினைவின் பரப்புநோக்க) அணுவினுஞ் சிறியது. எனினும், உள்ளத்தெழுந்த கருத்துக்களைப் பிறர்க்கெடுத்துரைக்க (குறுகியதும் குறைபாடுடையதுமான) ஒரு மொழித்திரளையேனும் அமைத்துக் கொள்ளாவழி மக்கள் வாழ்க்கை நடைபெறுதல் அரிதாகலின், அமைந்த ஒன்றன்வழி நினைவை இயன்றவாறு வெளியிட்டுப்போதல் இன்றியமையாததாயிற்று.

இனி, மேற் கூறியாங்கு அவ்வந்நாட்டு மக்கட்பகுதியினர் தத்தமக் கியைந்ததொரு மொழியை முதற்கண் அமைத்துக்கொண்டகாலத்து அவரவர் தம் அறிவிற்கும் ஆற்றலுக்கு மேற்றவாறே நினைவுக் குறியீடான மொழித்திரள்களை யமைத்துக்கொண்டதும் இயல்பாகும். மக்கள் தம் அறிவு ஒரே காலத்தில் ஒருபடித்தாய் யாண்டும் அமைந்துகிடத்தல் அரிதாகலின், இடத்திற்கும் காலத்திற்கும், அறிவு முதிர்ச்சிக்கும் ஏற்றவாறு நினைவுக் குறியீடுகள் ஆங்காங்கு வேறுபட்டு அமைவுற்றதும் இயல்பே. இதனாற் பற்பல நாடுகளிற் பற்பல காலத்தெழுந்த பல மொழிகளிலும் வேறுபாடும், நினைவைத் தெரிக்கும் ஆற்றல் நோக்கி ஏற்றத்தாழ்வும் நேர்வவாயின அன்றியும் கருத்துக்களும் காலத்தானே வளர்ச்சியுறலும், புதுப்புது வழிச்சேறலும் இயல்பாதலால், அப்புதியன புகுங்காலத்து, அவற்றையும் பழைய மொழித்திரள் கொண்டே பண்பட

எடுத்து மொழியும் ஆற்றலை உள்ளடக்கி ஆன்றோரான் முதற்கண் தேர்ந்தமைக்கப்பட்ட மொழிகளே உயர்ந்தன வென்றும், செம்மொழியென்றும், ஏனையவை தாழ்ந்தன வென்றும், புன்மொழியென்றும் வேறுபடுவ வாயின. எனவே, இத்தகைய எண்ணிறந்த வேறுபாடுகளி னிடையே, ஒரு மொழியிலெழுந்த கருத்தொன்றை மற் றொரு மொழியில் கருத்து வேறுபாடின்றி ஏற்பப் பெயர்த்து மொழிதல் எத்துணை யரிதென்பது கூறாமே விளங்கும். இதனை,

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மாணுற நினைத்த லரிது
மாணுற நினைத்தகாலையு, மாட்சியு நுட்பமு
மாழமுந் தோன்ற மொழிந்திட லரிது
ஆழந் தோன்ற மொழிந்த காலையும்
ஆட்சியின் மறுமொழி பெயர்த்தலு மரிதே."

எனக் கூறலாமன்றோ ?

இதுகாறுங் கூறியவாற்றால் நினைத்த ஒன்றை ஒரு மொழியில் திறம்பட எடுத்து மொழிதல் எவ்வளவு அரு மையாமென்பதூஉம், அவ்வாறு மொழியப்பட்ட ஒன்றை மற்றொரு மொழியில் அதன் மாட்சியும் நுட்பமும் ஆழமு மாகிய நயங்கள்தோன்றப் பெயர்த்து மொழிதல் எவ்வளவு அருமையிலும் அருமை என்பதூஉம் ஒருவாறு விளக்கப் பட்டன.

இனி, மொழிபெயர்ப் பென்பதைப் பற்றி இரண் டொன்று கூறி முடிப்பாம்.

மொழிபெயர்த்துக் கூறுதல், மொழி மாற்று என் றும், மொழி பெயர்ப்பு என்றும் இருவகைப்படும்.

மொழிமாற்றல் என்பது எடுத்துக்கொண்ட ஒரு தொடரையோ, பகுதியையோ அதன்கணுள்ள ஒவ்வொரு சொல்லளவா னெடுத்து ஏற்றதோர் மறுமொழிச்சொல் அமைத்து மாற்றித் தருதலாகும். இம்முறையினால் எடுத்துக்கொண்ட பொருளின் நுட்பமும் நயமுங் கெடாது மொழி மாற்றப்படுதல் அரிதினு மரிதாகும். கவைக்குதவா இம்முறை கடியப்படுதல் நேரிதே.

இனி, மொழிபெயர்ப்பென்பதோ வெனின், எடுத்துக்கொண்ட பொருளின் கருத்தும் நுட்பமும் நயமுந் தோன்றுமாறு ஏற்றவாறு கூட்டியுங் குறைத்தும், சுருக்கியும் விரித்தும் பெயர்த்தமைத்தலாகும். அதிலும், எடுத்துக்கொண்ட பொருளின் அளவிற்கேற்ப அணியும் ஆற்றலும் செறிந்து விளங்க, மொழிப் பெருமை நலிவுறாது, இரு மொழிகளின் பெருநலந் தோன்ற, பெயர்த்து மொழிதலே சீரிதாம். இன்னும், இருமொழிக் கண்ணுமுள்ள ஆன்றோர் வாக்குகளின் கருத்தொப்புமை கண்டவிடத்து, அதனை எடுத்துக் காட்டியும், படிப்போர் எளிதில் உணருமாறு பழமொழியும், மேற்கோளும் இயைபப் பொருத்தியும் மொழிபெயர்த்தல் சிறந்ததொன்றாகும். "சூடாயிருக்கும்போதே இரும்பை யடித்துக்கொள்"[1] என்று கூறுவது மொழிபெயர்ப்பேயாயினும் உண்மையில், மொழிமாற்றேயாகும். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்று கூறின், அஃது உண்மை மொழிபெயர்ப்பாய் உள்ளதுணர்த்தி நிற்கும்.

இனி, மொழிபெயர்க்கப் புகுவானொருவன் இயன்றவரையில் தான் பெயர்க்கப்புகுந்த மொழியின் தூய்மை நலங்கெடாமல் காப்பதே சிறப்பாகும். "மணிப்பிரவாள" நடையொன்று வழங்கிற்றாலோவெனின், அது மொழிப்

1. Strike the iron while it is hot.

பற்றில்லா மாந்தர் இருமொழி கற்ற தம் பெருமை தெரிக்கப் பின்பற்றியதாகுமாதலின், 'அதை வேண்டேம்' என விடுக்க. தமிழில் மொழிபெயர்க்கப் புகுந்து இடையிடையே நபர், நமூனு, ஜவாப், ஜல்தி என்பன போன்ற மகமதியச் சொற்களையும்; டைம், கேட், நம்பர், கோர்ட் என்பன போன்ற ஆங்கிலச் சொற்களையும்; சந்தோஷம், சாகரம், ஆஸ்பதம் கிரியாம்சை என்பன போன்ற வட சொற்களையும்; அரிசியில் கல் கலந்தாலொப்ப அளவு வரையின்றிக் கலந்து மொழிபெயர்த்துவிட்டால் அதைத் தமிழென்பதா, உருதுவென்பதா, ஆங்கிலமென்பதா, ஆரியமென்பதா, என்னென்பது! ஆகவே, இத் துறை குறிக் கொண்டு காத்தல் தமிழ்மொழிபெயர்ப்பாள ரொவ்வொருவருக்குந் தலையாய கடனாகும்.

# கச. மெய்ப்பாட்டியல்

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

மெய்ப்பாடு என்பது ஒருவனது உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சிகள், அங்கு நிகழ்ந்தவாறே, புறத்தார்க்குப் புலப் படுவதொரு வழியால் வெளிப்படுதலாம். இதனை, வீர சோழிய உரைகாரர் "மெய்க்கட்பட்டு விளங்கிய தோற்றம்" என்பர். ஒல்காப்புகழ்த் தொல்காப்பியர் மெய்ப்பாடுகளை எண்வகையாக வகுத்தார். அவை, நகை, அழுகை, இளி வரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. மேல்நாட்டு உளநூற் புலவர்[1] மேலும் பலவகை மொழிவர். ஆயினும், அவையெல்லாம் இவ்வெட்டினுள் அடங்குவன என்பதொருதலை.

உள்ளத்தே நிகழும் உணர்ச்சிகளாகிய நிகழ்ச்சிகள், முகமாற்றத்தாலும், மற்ற உறுப்புக்களின் நிலைவேறுபாட் டாலும் புறத்தார்க்குப் புலனும். எனவே, அவைகள் மெய்ப்பாடுகள் எனப்பட்டன. ஆங்கிலத்தில் அவை இமோஷன்ஸ்[2] எனப்பட்டன. புறத்தார்க்குப் புலனாகாது, நுகர்வான் ஒருவனுக்கே புலனும் உள்ள வுணர்ச்சிகளும் உள. அவைகளை நுண்ணுணர்ச்சிகள் எனக் கூறலாம். ஆங்கிலத்தில் அவை பீலிங்ஸ்[3] எனப்பட்டன.

## பொது வியல்பு

மெய்ப்பாட்டின் தன்மையைப்பற்றி மூவேறு கொள் கைகளை உளநூற் புலவர் கொண்டிருக்கின்றனர்.

(1) உடலின் உள் உறுப்புக்களில் உண்டாகும் நிலை வேறுபாட்டால், அல்லது ஒருவகை நெகிழ்ச்சியால், ஏற்

1. Psychologists. 2. Emotions. 3. Feelings.

படும் உணர்ச்சிதான் மெய்ப்பாடாகும் என்பது ஒரு கொள்கை.

(2) முன்னர் நுகர்ந்த இன்பங்களையும் துன்பங்களையும் தொடர்புபற்றி மீண்டும் நினைத்தலால் ஏற்படும் உணர்ச்சியே மெய்ப்பாடெனப்படுவது என்பது மற்றொரு கொள்கை.

(3) உணர்ச்சிகளை வெளிப்படப் புலப்படுத்துவதாகிய உறுப்புக்களின் அசைவு முதலிய செய்கைகளே மெய்ப்பாடுகளாம் என்பது பிறிதொரு கொள்கை.

இம் மூன்று கொள்கைகளையும் விடுத்து, எடுத்துக் காட்டுக்களால் மெய்ப்பாட்டின் தன்மையை ஆராய்வோம்.

(1) பரந்த தன்மை: மெய்ப்பாடு ஒரு குறிப்பிட்ட இனத்திற்கே உரியதன்று: எல்லா இனங்கட்கும் உரியது. ஓரறிவு படைத்த மாக்கள் தொடங்கி ஆறறிவு படைத்த மக்கள் இறுதியாக உள்ள பல இனங்கட்கும் மெய்ப்பாடு உரித்து. பூனையும் தன் குட்டியைத் துன்புறுத்துவார் பால் சினங்கொள்ளும். குழவியும் தன் விளையாட்டுக் கருவிகளைக் கவர்ந்துகொண்டார்பால் கோபமுறும். "குணமென்னும் குன்றேறி நின்றா"ரும் மடமையுள்ள மக்கள் பாற் பெருஞ் சீற்றம் கொள்வர். அவ்வாறே அச்சம், உவகை முதலிய பிற மெய்ப்பாடுகளும் எல்லா இனங்கட்கும் உரியன. எனவே, மெய்ப்பாடு பரந்த தன்மையை யுடையது என்பது புலனாகின்றது.

(2) பன்மைச் சார்பு :—ஒரு குறிப்பிட்ட மெய்ப்பாடு பலவகைச் சார்புகளாலும் எழும். எடுத்துக்காட்டாக, சினம் அச்சத்தாலும் எழும், பெரும் வன்மையுடைமையாலும் எழும், பொறாமையாலும் எழும், பிற சார்புகளாலும் எழும். ஒரு நாய்க்குப் பல சார்புகளால் கோபம்

உண்டாக்கலாம். எலும்பைக் கடித்துத் தின்னும் பொழுது, அதற்கு இடையூறு செய்தாலும், அதன் வாலைப்பற்றி இழுத்தாலும், அதன் குட்டிகளைத் துன்புறுத்தினாலும், நாய்க்குக் கோபம் உண்டாகும்.

(3) முன்னிலைமைத் தொடர்பு:—ஒரு குறிப்பிட்ட மெய்ப்பாடு தோன்றுவதற்கும், அதன் வன்மைக்கும் சிறந்த சார்பாக வுள்ளது, உள்ளத்தின் முன்நிலைமையே யாகும். விளையாட்டுக் கருவியைக் கவர்ந்து கொண்டவர்பால் குழவிக்குச் சினம் எழுவது, அக் குழவிக்கு விளையாட்டின்மேல் உள்ள விருப்பத்தாலேயாம். அவ்வாறே, எலும்பின்மேலுள்ள விருப்பத்தால், அதைப் பிடுங்கினவர்பால் நாய் கோபம் கொள்கின்றது. ஒரு தீய விலங்கைக் கண்டு அச்சம் என்னும் மெய்ப்பாட்டினை யடைகின்றவன், உயிரிச்சை என்னும் முன்னிலைமைச் சார்பாகவே அம் மெய்ப் பாட்டினை அடைகின்றான். தான் விரும்பியிருந்த கூட்டுறவு இன்பத்துக்குத் தடையாக விருப்பதால்தான் ஒரு சேங்கன்று மற்றொரு சேங்கன்றிடத்துக் கோபம் என்னும் மெய்ப்பாட்டினை அடைகின்றது.

(4) மெய்ப்பாட்டுப் பின்னிலையல்:—இஃது ஆங்கிலத்தில் இமோஷனல் மூட்[1] என்று கூறப்படும். மெய்ப்பாட்டின் தோற்றத்துக்குரிய நிலைமை நீங்கின பிறகும், அம் மெய்ப்பாட்டின் தன்மை உள்ளத்தின்கண் சில காலம் ஆழ்ந்து நிற்கும். இதுவே மெய்ப்பாட்டுப் பின்னிலையல் எனப்படும். வீட்டில் மனையாளுடன் சினங்கொண்ட ஆசிரியர், பள்ளியில் மாணவர்கள் மேலும் சினங் காட்டுவதும், தலைவனால் கண்டிக்கப்பட்டு வீடு சென்ற வேலையாள்

1. Emotional Mood.

தன் மனைவி மக்களிடத்தே கோபம் கொள்ளுவதும், சில எடுத்துக்காட்டுக்களாம்.

## மெய்ப்பாடுகளும் உறுப்பசைவுகளும்[1]

நகையாலும் விளையாட்டாலும் ஒரு குழவி இன்பமாயிருத்தலை அறியலாம். வாலாட்டத்தால் நாய் இன்பமாய் இருத்தலை யறியலாம். மனிதனுடைய முகத்தாலும் குரலாலும் அவனுடைய மெய்ப்பாட்டின் தன்மையை அறியலாம். புன்னகை, பெருநகை, கைகொட்டல், உரத்துப்பேசல், தேம்பிப்பேசல், அலறல், வீறிட்டுக் கூவல், குதித்துப் பேசல் முதலிய செய்கைகள் மெய்ப்பாட்டின் அறிகுறிகள். சில உளநூற் புலவர்கள் இச் செய்கைகள் யாவும் விலங்குப் பிறப்பிலிருந்து மனிதப் பிறப்பு ஏற்பட்ட காலத்து உடன் தொடர்ந்தவை என்பர். எடுத்துக்காட்டாக, இதழ்களை விரித்துப் பற்களைக் கடித்தல் இன்றளவும் மனிதனுடைய கோபக் குறியாக இருக்கின்றது. இது, புலி, சிங்கம், நாய் முதலிய விலங்குகளின் கோபக்குறியை ஒத்திருத்தலை நாம் கண்கூடாக அறிவோம். "வேண்டா," "இல்லை" என விடை கூற விரும்புவான் ஒருவன், தன் தலையை ஒரு புறத்திருந்து மறுபுறம் அசைத்தல் குழவிப் பருவத்திருந்து தொடர்ந்து வந்திருக்கின்றது. பேசி அறியாத குழவி தனக்கு வேண்டாத உணவை உட்கொள்ள மறுத்தற்குத் தலையை அசைக்கின்றது. அவ் வழக்கம் ஆண்டு பலவாயினும் நீங்காமல் தொடர்ந்தே நிற்கின்றது. வெறுப்புக் குறிப்பைக் காட்டுவதற்கு நாம் மூக்கால் "ங்ஹூ ங்ஹூ" என்பது வழக்கம். முதன் முதலில் இச் செய்கை தீய நாற்றம் மூக்குள் புகாமற் காத்தற்கு ஏற்பட்டுப் பிறகு வெறுப்பினை உணர்த்தும் அறிகுறி ஆயிற்று; மனிதனுக்கு

---

1. Emotions and Expressive Movements.

வயது ஏற ஏற மெய்ப்பாடுகளைப் புறத்தார்க்குப் புலனாகா வண்ணம் அடக்கும் வன்மையும் வளர்கின்றது. சிறப்பாகக் கோபம், அச்சம், வெறுப்பு முதலிய தீய பயன்தரும் மெய்ப்பாடுகளை, மனிதன் தன்னலத்திற்காகவே வெளிப் படுத்தாமல் இருக்கவேண்டிய நிலைமையில் நிற்கின்றான்.

மனிதனுடைய முகக் குறிப்பால், நாம் நற்பயனுடைய மெய்ப்பாடுகளை அறிவதைவிட தீப்பயனுடைய மெய்ப்பாடு களை மிக எளிதில் அறியலாம். துன்பச் சார்பான மெய்ப் பாடுகள் மனிதனுடைய அடக்கும் ஆற்றலை மீறி அவன் முகக் குறிப்பில் புலனாகின்றன. "அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம், கடுத்தது காட்டும் முகம்" என்னும் பழ மொழியும், "நெஞ்சம் இனித்தது காட்டும் முகம்" என்னாமல், "நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்" என்றே குறிப் பிட்டமை ஊன்றி உன்னற்பாலது. நம் பழந் தமிழறிஞர் உளநூற் புலமையை எத்துணை பெற்றிருந்தனர் என்பது இதனாற் புலனாகின்றது.

## மெய்ப்பாடும் குரல் மாற்றமும்[1]

முகக் குறிப்பால் மெய்ப்பாடுகளை அறிவதைவிட குரற் குறிப்பால் அவைகளை அறிதல் மிகவும் எளிது. நாடகத்தில், நடிகர்களுடைய மெய்ப்பாடுகளை அவர்களு டைய முகக் குறிப்பால் அறிவதைவிட குரற் குறிப்பால் எளிதாக அறிகிறோம். பாடுங் குரலால் அறிவதைவிட, பேசுங்குரலால் மிக எளிதாக மெய்ப்பாடுகளை அறியலாம். பாடும்பொழுது இசை விரவியிருத்தலால், நாம் மெய்ப்பாடு களை எளிதில் பிரித்துப் புலப்படுத்தவும் உணரவும் இயல்வ தில்லை. ஆனால் பேசும்பொழுது, கோபத்துடன் வினவல்,

1. Vocal expression of Emotion.

கோபத்துடன் விடை கூறல், இரக்கத்துடன் மொழிதல், துன்பத்துடன் பேசல், வெறுப்புடன் புகலல், மனவன்மையுடன் முடிவு கூறல், ஏளனமாக மொழிதல், அன்புடன் சொல்லாடல் முதலிய பலவேறு நுணுக்கங்களைக் கொண்ட மெய்ப்பாடுகளை நாம் அறியலாம். "இல்லை" என்னும் சொல்லைக் கூறுமிடத்து இன்பத்துடனுதல், அன்புடனுதல், வெறுப்புடனுதல், சீற்றத்துடனுதல், துன்பத்துடனுதல், இரக்கத்துடனுதல் கூறலாம். இவ்வின்பம் அன்பு, வெறுப்பு, சீற்றம், துன்பம், இரக்கம் என்னும் மெய்ப்பாடுகளை நாம் குரலின் உரத்தாலும், நயத்தாலும், இடைப்பட்ட பல குரல்மாற்றங்களாலும் மிக எளிதாக அறியலாம்.

## ஒன்றற்கொன்று தொடர்புள்ள மெய்ப்பாடுகள்[1]

இன்பம், வருத்தம், சினம், அச்சம் என்னும் நான்கு மெய்ப்பாடுகளும் ஒன்றற்கொன்று தொடர்புள்ளவை என்பது சில உளநூற் புலவருடைய கொள்கை. இன்பமும் சினமும் ஊக்கத்தை அளிக்கும் மெய்ப்பாடுகள் என்பதும், வருத்தமும் அச்சமும் சோர்வினைத்தரும் மெப்பாடுகள் என்பதும் சிலருடைய கொள்கை. அச்சத்தால் சினம் உண்டாதலும், சினத்தால் அச்சம் உண்டாதலும் உண்டு. உடல் வன்மை யுடையவனைப் பகைக்கும் உடல் நலிந்தவன் ஒருவன் முதற்கண் அச்சங்கொண்டு, பிறகு சினங்கொள்வது நாம் அறிந்ததே. "சினம் அளவுக்கு மிஞ்சினுல் என்ன தகாத காரியத்தைச் செய்துவிடுவோமோ?" என்று அச்சங்கொள்ளும் மக்களையும் நாம் அறிவோம். நாய்க்கு அஞ்சும் பூனை, அச்சம் அளவுக்கு மிஞ்சினுல் மிகுந்த சினங்கொண்டு நாயின் மேற்பாய்வதும் நாம் அறிந்ததே.

1. The Interconnections of the Emotions.

## மெய்ப்பாட்டைப் பற்றிய ஒரு கொள்கை

மெய்ப்பாட்டைப் பற்றிச் சில உள நூற் புலவர் கொண்டுள்ள கொள்கையை ஓர் எடுத்துக்காட்டைக்கொண்டு ஆராய்வோம். ஒருவன் தனிவழியாகச் செல்லும்பொழுது ஒரு வேங்கையைக் கண்ணுறுகின்முன். உடனே ஓடி ஒளித்துக் கொள்கின்முன். அவன் ஓடத்தொடங்கின பிறகே அச்சங் கொள்கிமுன் என்பது சிலருடைய கொள்கை. ஆனல், உள நூல் வல்லாருள் பெரும் பகுதியாருடைய கொள்கை, அச்சங்கொண்ட பிறகே ஓடுகின்முன் என்பது. இவ்விரண்டனுள் பின்னர்க் கூறப்பட்டதே நேர்மையான கொள்கையாம். அம் மனிதன் ஓடாவிட்டால் அவன் அஞ்சுகின்முன் என்பது புலனுகாது; அன்றியும், அவன் அஞ்சாவிட்டால் ஓடவேண்டியதில்லை. எனவே ஓட்டமே அச்சம், அச்சமே ஓட்டம் என்பர் மேற்குறிப்பிட்ட கொள்கையர். இது தொடர்புள்ள இரு பொருள்களை ஒரு பொருளாக மயங்கும் குற்றமாம். மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டில், வேங்கையைக் கண்டவுடன், அம் மனிதன் தன் உயிருக்கு நேரும் கெடுதியை உணர்ந்து அச்சங்கொண்டு மேலும் வாழவேண்டும் என்னும் விருப்பினை உடையனுதலின், ஓடி ஒளித்துக்கொள்கின்முன். உயிரிச்சை என்னும் உள்ளத்தின் முன்னிலைமையால், வேங்கையைக் கண்டவுடன் அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்றுகின்றது என்பதுதான் உண்மையான முடிபு.

# கரு. இந்திய ஐரோப்பியப் பெருங்குழூ[1]

## 1. இந்தியாவே பிறப்பிடம்

ஆரியக் குழூவினர் வடதுருவத்திற் றோன்றியவர்களென்றும், அஸ்ஸிரியாவில் தோன்றியவர்களென்றும், மத்திய ஆசியாவில் தோன்றியவர்களென்றும் பலபடக் கூறுவர். இக் கூற்றுக்களெல்லாம் அறிவியற் பகுதியின் ஒவ்வொரு துறையையே தனித்தனிபற்றி யெழுந்தனவாகும். யானை பார்க்கச்சென்று, அதன் உறுப்புக்களில் ஒவ்வொன்றைத் தொட்டு, அதைக்கொண்டு யானையின் வடிவை உய்த்தறிய முயன்ற நான்கு குருடர்களின் கதையையே இஃதொக்கும். நிற்க, இதுகாறும் அறிவியற் பகுதியில் ஒவ்வொரு துறையிலுங் கிடைத்துள்ள அரிய பெரிய உண்மைகள் பலவற்றையும் ஒருங்கே திரட்டி ஒப்புநோக்கி முடிந்த முடிபொன்றை, இப் பொருளைப் பொறுத்த வரையில், எவரும் எய்தியதாகத் தெரிவதற்கில்லை. மொழியிலக்கண[2]த்தை மட்டுமோ, ஒளி நூலை[3] மட்டுமோ, அன்றி மத நம்பிக்கைகளை மட்டுமோ அடிப்படையாகக்கொண்டே ஆரியர்தம் தோற்றம் வரையறுத்து இதுகாறுங் கூறப்பட்டு வந்துள்ளது. எனவே, அக் கொள்கைகள் ஒன்றிற்கொன்று முரணாக இருப்பது இயல்பேயன்றோ? கல்கத்தாப் பல்கலைக் கழக[4]த்தைச் சேர்ந்த திரு. ஏ. சி. தாஸ் என்பவர் எழுதி வெளியிட்டுள்ள ஒரு நூலில்தான் முதன் முதலாக நில நூலும்[5] ஒரு கருவியாக இக் கொள்கையை வரையறுக்கக்

---

1. திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் ஆங்கிலத்திற் செய்த சொற்பொழிவுக் குறிப்பினைத் திரு. காழி-சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் மொழிபெயர்த்தது.

1. The Indo-European Race. 2. Philology.
3. Astronomy. 4. University. 5. Geology.

கையாளப்பட்டுள்ளது. நிலநூல் தெரிக்கும் உண்மைகளி னுதவியால் இதுவரையில் வெளிவந்துள்ள ஆரியர் தோற் றங் குறித்த பல கொள்கைகளையும் இயன்றவரையில் கண் டித்து ஒதுக்கிய அவ்வாசிரியர் இறுதியில் மதநம்பிக்கை களில் அழுந்தி ஆரியர் தோன்றியது சிந்துநதிப் பகுதியில் என்று கூறியொழிந்தனர். இமயமலையிலும் சிவாலிக் தொடர்களிலுங்[1] காணப்படும் தொன்னில உறுப்புண்மை களை[2] அவர் அறிந்திருந்தாரானால், அவர் கொண்ட சிந்து நதிப் பகுதி உலகத் தோற்றத்தின் மூன்ருவதோ நான்கா வதோ ஆன ஊழிகளில் தோன்றியிருக்கவேண்டுமே யொழிய முதலாவது இரண்டாவது ஊழிகளில் தோன்றி யிருத்தல் முடியாதென்பதைக் கண்டுகொண்டிருப்பார்.

இனி, குமரிக்குத் தென்பாலிருந்து கடல்கோட்பட்ட தாகக் கூறப்படும் இலெமூரியா என்ற குமரிநாட்டு உண்மை இன்மைகளை ஒருபுறம் விடுத்து, தற்போது, தக்காணந் தொடங்கித் தெற்கு நோக்கி நீண்டுள்ள தென்னிந்திய நிலப்பகுதியின் தோற்ற காலத்தை ஆராய்வாம். உலகத் தோற்ற காலத்தில் எத்தகைய நிலத்தோற்றங்கள் இருந் திருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படுமோ, அத்தகைய தோற்றங்கள் இத் தென்னிந்தியப் பகுதியில் மட்டும் எப் பொழுதும் எத்தகைய மாறுதலுமின்றி யிருந்துவருவதாக நிலநூல் உறுதி கூறுகின்றது. பேரூழிகள் தோன்றுவதற்கு முன்னரும் பின்னரும் உலகத்தின் வெப்பதட்பநிலை[3] உயிர் கள் தோற்றமுறுவதற்கும் விரைந்து வளர்ச்சியுறுவதற்கும் ஏற்றதாகவே இருந்துவந்தது என்பதும் நிலநூல் வரை யறுத்துக்கூறும் உண்மையேயாகும். இவ்வுண்மை அறிஞர்

1. Sivalic Ranges. 2. Palaeontological finds.
3. Climatic conditions.

பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதொன்று. முதலில் உலகத்தின் மையப் பகுதியே குளிர்ச்சியுற்றது. அதன் பின்னர் வடபகுதியும், துருவங்கள் இறுதியிலுமாகக் குளிர்ச்சியுற்றன. உலகத்தின் மையப் பகுதி குளிர்ச்சியுறத் தொடங்கியது முதல் அதன் அகவெப்பநிலை படிப்படியாகக் குறைந்து புறவெப்பமாகிய சூரிய வெப்பத்தை யொத்ததொரு நிலைக்கு வந்ததும், மேலுங் குளிர்ச்சியுறாமல் நிலைத்துவிட்டது. அதனாலேயே அந் நிலப்பகுதி இடையிடையே சிற்சில காலங்களில் தோன்றும் சில மாறுதல்கள் நீங்கலாக எக்காலத்திலும் ஒரேபடித்தான வெப்பதட்ப நிலையை யுடையதாயிருந்து வருகின்றது. துருவங்களோ, ஏனைய பகுதிகளை நோக்க, மிகப் பிற்பட்ட காலவரையறையிற் குளிர்ச்சியுறத் தொடங்கினாலும் விடாமல் குளிர்ந்து கொண்டே போகின்றன. ஏன்? போதிய புறவெப்பமாகிய சூரியவெப்பம் ஆண்டு இல்லாமையினாலேயே. எனவே, உலகத்தின் மையப்பகுதியி லமைந்திருக்கும் தென்னிந்தியப் பகுதி உலகத் தோற்றகால முதற்கொண்டே மக்கள் உயிர்வாழ்வதற்கு ஏற்றதாயிருந்து வந்ததென்பது எளிதிற் போதரும். தக்காணத்திற்கு வடக்கிலும், சீனக் கடலுக்கும் வடகடலுக்கு மிடையிலும், மூன்றாவது ஊழிக்காலம் வரையிலும் நிலமின்றி நீரேயிருந்து வந்ததென்பது குறிக்கற்பாற்றும்.

## 2. குறைகோப்பு[1]

உயிர்நூல் வல்லாரும் தொல்லுயிராராய்ச்சியாளரும்[2] ஆதி மனிதன் அறிகுறிகளையோ, வளர்ச்சி நெறி முறையில்[3] காணவியலாதவாறு மறைபட்டுக்கிடக்கும்

---

1. The Missing Link. 2. Biologists.
3. Theory of Evolution.

குறைகோப்பையோ தேடிப் பிடிக்கவேண்டுமானல் தென்னிந்தியப் பகுதியிலோ அதன் தெற்கே யமைந்துள்ள பகுதியிலோ தான் தேடவேண்டும் என்று ஊகித்துள்ளனர். இவ்வூகம் ஏறக்குறைய சரியான தொன்றென்றே பின்னர்ச் சாவகத்தீவிற்[1] கண்டெடுக்கப்பட்ட ஒரு மண்டையோட்டைக் கொண்டு அறியக் கிடக்கிறது. வளர்ச்சி நெறிமுறைக் கொள்கையை வலியுறுத்தித் தெரிப்பதற்கான பல திறப்பட்ட ஆதாரங்களைத் தென்னிந்தியப் பகுதி உட்கொண்டு உலகவளர்ச்சித் துறையில் தலைசிறந்து விளங்குகிறது என்று ஒரு ஸ்விஸ் ஆசிரியர் உளமாரக் கூறியுள்ளார். ஆயினும் அவ்வாறு கூறிய அவரும் மதச்சார்பிணைலீர்க்கப்பட்டு, 'மனித உருவத்தின் திருந்திய படைப்பை மட்டும் [2]ஈடன் தோட்டத்தில் உண்டாக்கித் தருவது கிறித்துவக் கடவுளுக்கே உரியதாயிருந்தது' என்று உடன் கூறி யொழிந்தார். எனினும், இயற்கையின் திருந்திய தோற்றங்களெல்லாம் தென்னிந்தியாவில்தான் காணக்கிடப்பனவாக இருக்கின்றன என்ற உண்மையை மட்டும் எந்த அறிவியலாராய்ச்சிக்காரரும் மறுக்கமுடியாது. தென்னிந்தியப் பகுதியில்தான் முதன் முதலாக மனிதன் தோற்றமுற்ருன் என்றும், அங்கிருந்து மேற்கிலுந் தெற்கிலும் நாளாவட்டத்திற் சென்று குடியேறினனென்றும் எடுத்துக் கூறுவதற்கு வேண்டிய அறிவியலாதாரங்கள் அளவு சங்கையற்றுக் காணக் கிடக்கின்றன. தென்னிந்திய மக்கள் தொகையில் மிகவே, அவர் தம் பண்டைய நாகரிக முறைப்படி உணவிற்கு வேண்டிய கிழங்குகள் பழங்கள் முதலியவற்றைப் போதிய வளவுக்குக் கிடைக்கப் பெற்றிலர். எனவே, இருந்த இடம் நீத்து மெல்ல மெல்ல வடக்கே நகர்ந்து சென்றனர். வடதுருவம் வரை

1. Java. 2. Garden of Eden.

யும் அவ்வாறு அவர்கள் சென்றிருந்ததாகத் தெரிய வருகிறது. அவர்கள் அவ்வாறு சென்ற காலத்தில், முன்கூறியவாறு. துருவங்களின் வெப்பதட்பநிலை தென்னிந்திய வெப்பதட்ப நிலையை யொத்ததாக இருந்தது. பின்னர் அந்நிலையிலேயே நிற்காமல் துருவங்கள் மேலும் மேலுங் குளிர்ச்சியுறவே, ஆண்டு உறைந்து வதிய வசதியற்றவர்களாய்த் தெற்குநோக்கி மீண்டுந் திரும்பி வந்தனர். இக்கொள்கையே அறிவியலில் எத்துறைக்கும் ஒத்ததொன்றாகவும் முரண்படாததாகவும் இருக்கிறது. இக்கொள்கை யொப்புக் கொள்ளப்படுமேல், தற்போது ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும் ஏனைய கொள்கைகளை அதனுடன் பொருத்திக் காட்டுவது எளிதாகும். மொழிநூலறிஞர்கள் உலகப் பரப்பில் பற்பல பகுதிகளில் வழங்கும் பூஸ்து,[1] துருக்கியமொழி, ஹங்கேரியமொழி முதலியவைகள் அமைப்பில் "திராவிட" மொழிகளை யொத்திருப்பதாக ஒத்துக்கொள்கின்றனர். ஆங்கிலோ சாக்சன் என்று சொல்லப்படும் பண்டைய ஆங்கிலமொழியிலுள்ள சொற்களில் ஏறக்குறைய நூற்றுக்கு அறுபதுக்கு மேற்பட்ட சொற்கள் திராவிடமொழிகளின் தாதுக்களையே யுடையன; அஸ்ஸிரியாவில் காணப்படும் சில கல்வெட்டுக்களில் திராவிட மொழிச் சொற்கள் கலந்திருப்பதும் இக்கொள்கையை வலியுறுத்தும்.

உடற்கூற்று நூற்படி நோக்கினும், இந்திய ஐரோப்பியப் பெருங்குழுவினர்க் குரியதாக வரையறுத்துள்ள தலையமைப்பு இந்தியாவின் மற்றப் பகுதிகளிலில்லாமல் தென்னிந்தியப் பகுதியில் மட்டுமே பரக்கக் காணப்படுகிறது. வங்காளத்திலும் இந்தியாவின் வடகீழ்ப் பகுதியிலும் மங்

1. Phustue.

கோலியக் குழுவினரின் தலையமைப்பும், வடமேற்குப் பகுதியில் செமிட்டிக் குழுவினரின்[1] தலையமைப்புமே காணப்படுகின்றன. தென்னிந்தியத் திராவிடக் குழுவினர் கருநிறம் படைத்திருத்தல் மிகுந்த வெப்பத்தினாலேயே யன்றி வேறன்று. மற்றவகைகளில், அவர்களுக்கும் இந்திய ஐரோப்பியப் பெருங்குழுவினர்க்கும் பெரும்பான்மையான ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

## 3. தெலுங்கரும் தமிழரும்

தெலுங்கரும் தமிழரும் திராவிடக்குழுவைச் சேர்ந்தவர்களா? தெலுங்கர்கள் குழுவளவைப்படி[2] தமிழர்களினத்தைச் சேர்ந்தவர்களல்லர் என்று துணிந்து கூறவும் முடியுமோ? அவ்வளவை யொருபுறமிருக்க, இன ஒற்றுமையைத் துணிதற்குப் பயன்படும் ஏனைய தேர்வு முறைகளில், குறித்த இரண்டு இனத்தாரின் மொழியாக்கத்தை ஆராய்வதே சிறந்த முறையாகும். தற்போது பெரும்பான்மையாக வழங்கிவரும் உயர்தரத் தெலுங்குநூல்களில், நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் வடமொழி கலந்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை. பண்டைய தெலுங்கு இலக்கியங்களிலோ வடமொழி இத்துணைப் பெரும்படியாகக் கலப்புறவில்லை. ஆராய்ந்து பார்த்தால் இக்கலப்பு நிகழ்ந்ததெல்லாம் பதினோராம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் என்று தெரியவருகிறது. "அச்ச தெனுகு" என்று சொல்லப்படுவதும், பண்டைக்காலத்திலிருந்தே தோற்றமுற்று வழங்கிவருவதும், ஆந்திரர்கள் என்று கூறிக்கொள்ளும் எல்லோருக்கும் தாய்மொழியாக விளங்கிவருவதும் ஆகிய செந்தெலுங்கு மொழியிலோ வடமொழிக் கலப்பு இல்லை

1. Semitic Races. 2. Ethnology.

யென்றே கூறிவிடலாம். அச்ச தெனுகுவின் மூலச்சொற்கள் எல்லாம் தமிழ் மூலச் சொற்களுடனே ஒப்புமையுடையனவாக இருக்கின்றன. அம்மா, அக்கா, அண்ணு, தாதா, ஒகட்டி, மூடு, இடு, செய்யி, காலு, மூக்கு, கன்னு, வேலு, பாலு, நீரு, காலி, மாவு, ஆவு, புலி, எட்டு, பொலமு, அடவி, பள்ளமு, கொண்ட, பண்டி, இல்லு, புளி, உப்பு, பப்பு, செப்பு என்ற இத் தொடக்கத்தன வெல்லாம் தமிழ் மொழி யன்றி யாவை? தமிழிலிருந்து இச் சொற்களைத் தெலுங்கு எடுத்துக் கையாண்டதா அன்றி, தெலுங்கிலிருந்து தமிழ் எடுத்தாண்டதா என்ற கேள்விகள் எழ வேண்டுவதில்லை. வடமொழி கலவாத காலத்தில் தெலுங்கு தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் இச் சொற்கள் பொது வானவை யென்பதே போதுமானது. உழவு, வாணிபம், அரசாட்சி ஆகிய, நாகரிகத்தின் முன்னணியில் நிற்கும், பல துறைகளுக்கும் வேண்டிய சொற்கள் யாவும் அச்ச தெனுகில் காணப்படுவதே ஆதிகாலந் தொட்டே தமிழரும் தெலுங்கரும் ஒரினத்தைச் சேர்ந்தவர்க ளென்பதைத் தெரிப்பதற்குப் போதிய சான்றாகும்.

## 4. ஆரியமும் திராவிடமும்

ஆரியர் தம் நாகரிகத்தையும் திராவிடர் தம் நாகரிகத்தையும் ஒருங்குவைத்து ஒப்பநோக்கிச் சீர்தூக்கிப் பார்த்தால், ஆந்திரர்கள் தாங்கள் ஆரியர் இனத்தைச் சேர்ந்தவர்களென்று கருதுவதை விட்டொழித்துத் திராவிடக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ளவே முன்வருவார்கள் என்பது உறுதி. ஆந்திரர்கள் வாழ்ந்துவரும் நிலப்பகுதி தொன்றுதொட் டிலகும் தென்னிந்தியாவின் ஒரு பகுதி யென்பதனாலேயே அவர்களுக்கும் தமிழர்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருந்தது

என்பது பெறப்படும். அச்ச தெனுகு, பழங்கன்னடம், மலேயாளம், துளுவம் என்ற இவைகளே பண்டைய தென்னாட்டு மொழிகள் என்றும் இவற்றை அடிப்படையாகக் கொண்டே செந்தமிழ் சமைக்கப் பட்டதென்றுங் கூறலாம். எனவே, இம் மொழிகட்குரியோர் எல்லோரும் தோற்றத்திலும், தொன்மையிலும், பழக்கத்திலும், நம்பிக்கைகளிலும் ஒரே குழுவினேச் சேர்ந்த தம் ஒருமைப்பாட்டை உற்றுணர்ந்து ஒருசேர்ந்து உழைத்தல் வேண்டும்.

விசுவாமித்திர முனிவருடைய ஐம்பது பிள்ளேகளுக்கும், ஆந்திர நாட்டிலிருந்த காட்டு மிராண்டிப் பெண்களுக்கும் பிறந்து பல்கியவர்களே தற்கால ஆந்திரர்கள் என்று கூறி, திரு. ஏ. சி. தாஸ் என்பவர் தம்முடைய அறியாமையைப் புலப்படுத்தினர். நூறும் இருநூறுமாகப் பிள்ளேகளே ஒருவர் பெற்றுர் என்பதிலும், ஒருவனுக்கு ஆயிரங் கண்கள், இரண்டாயிரங் கைகள் முதலிய இருந்தன என்பதிலும் திரு. தாஸை யொத்த ஒரு தேர்ந்த வரலாற்று ஆராய்ச்சியாளர் நம்பிக்கை வைத்தது விந்தையிலும் விந்தையே. இல்லேயேல், பெரிய தொகையினராகிய இனத்தாரான ஆந்திரர்களெல்லாரும் விசுவாமித்திரர் என்ற ஒருவர் கால்வழித் தோன்றியவர்கள் என்றும் அவர் கொள்வாரோ! விசுவாமித்திருடைய 50 பிள்ளேகளும் அவர்கண்மாட்டுக் கிளேத்த பல்லாயிரம் பேரப் பிள்ளேகளும் எம் மொழியில் பேசி வந்தார்கள் என்பதை இவர் நினேத்துப் பார்த்தாரா? விசுவாமித்திரரே ஆந்திரர்களுக்கு "மூல புருஷன்" என்று சொல்வது அறிவியலுக்கு எத்துணே யொத்த தொன்ருகும்! அவர் பேசிய மொழிக்கு விசுவாமித்திர மொழி என்று பெயரா! அல்லது, அவர்கள் பேரப் பிள்ளேகள் பேசியது கோண்ட், சவரா, கோயா என்ற மொழிகளில் ஒன்ரு!

இவைகள் ஒன்றுமில்லையன்றேல் அச்ச தெனுகு மொழியில்தான் பண்டைக்காலத்தில் அவர்கள் பேசியிருத்தல் வேண்டும். அவ் வச்ச தெனுகுவின் மூலச் சொற்களோ தமிழ்மொழி மூலத்துடன் எப்புடையும் ஒத்தவையாக இருக்கின்றன. இஃதிவ்வாருயின், ஆந்திரர்கள் திரு. தாஸ் கூறியபடி கலப்புப் பிறப்பாளர் என்று கொள்ளவுங் கூடுமோ? ஆந்திரர்கள் திராவிடர்களே, தனித் திராவிடர்களே! கலப்பற்ற பெருமைவாய்ந்த திராவிடர்களே! திராவிடக் குழுவிற்குரிய உருவவமைப்பு அறிகுறிகள் அவர்கள் மாட்டு இன்றும் காணக்கிடக்கின்றன. திராவிட நாகரிகத்தின் இணையற்ற தனிச்சிறப்பை நன்குணர்ந்தார்களாயின் தம்மை ஆரியர்கள் என்று மறந்துங் கூற ஆந்திரர்கள் ஒருப்படுவரோ!

# கசா. பாரி வள்ளல்

[திரு. வ. சுப்பையா பிள்ளை]

பாண்டி வளநாட்டில், உலக முழுவதும் வரினும் வழங்கக் கொழுமையுடைய பறம்பு நாட்டில், முடியுடை வேந்தர்க்கு மகட்கொடுத்தற்கு உரியவராய உழுவித் துண்ணும் வேளாளர் மரபில் வள்ளற்றன்மை மிக்க வேள் பாரி என்பார் ஒருவர் இருந்தார். இவர் போர்த் தொழில் நன்கு கற்றுத் தமக்கு ஒப்பாவாரின்றித் திகழும் வலிமை மிக்கவராய், கல்வி கேள்விகளிற் சிறந்தவராய், கபிலர் என்னும் பெரும்புலவரைத் தமக்கு உயிர்த்தோழராய்க் கொண்டவராய், இரவலர்க்கும் பாவலர்க்கும் இன்முகங் காட்டி வரையாது கொடுக்கும் புகழ்படைத்தவராய், அந் நாளையிற் கொடைச் சிறப்பின் மிக்கார் பலர் இருக்கவும், "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப் பாரிலை" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் கொடைக்கு எல்லையாகத் 'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்' என்ற தலைப்பமைந்த தேவாரப் பதிகத்தின்கண் எடுத்துக் கூறப் படும் என்றும் அழியாப் பேறு பெற்றவராய் விளங்கினர்.

இவர், ஒரு நாள் மாலைப் பொழுதில் செங்கதிர்ச் செல்வன், ஆண்டுள்ள மலைச்சிகரத்தையும், புற்பூண்டு களையும் பொன் மயமாக்க, தென்றற் காற்று மெல்லெனவீச, வேனில் வெம்மைக்கு ஆற்றுது அம் மெல்லிய பூங் காற்றை நுகர்ந்தின்பமுற விழைந்து ஒரு பொற்றேர் மீது வெளியே புறப்பட்டார். புறப்பட்டவர், புறத்தே காணப்பட்ட அழகு கனிந்தொழுகும் இயற்கைத் தோற் றங்களெல்லாம், எல்லாம் வல்ல இறைவன் பேரருளின் கண் மன்னிக்கிடப்பக் கண்டு, கழிபேருவகை மீதூர்ந்து

ஓர் இளமரக்காப் புகுந்தனர். புகுந்து செல்லும் வழியில், ஒரு வெள்ளிடையில் மரகதம் போலப் பச்செனத் தழைத்து, முத்துப்போன்ற வெண்முகை யரும்பிய ஒரு முல்லைக்கொடி கொழுகொம்பில்லாமல் தென்றற் காற்றுற்றுவண்டு வீழக் கண்டனர் 'அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்,' 'அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு,' என்னுங் குறளடிகளுக் கிலக்காகியவராய், அதன் றயக்கங்கண்டாற்றாது 'உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாயுருகி' அதனருகே கடிதிற்சென்று, 'ஆ, என்ன பாவம்! புவியிற் பிறந்தாருள் துன்புறாதார் எவருமேயில்லை! இஃது ஒரு கொடி யெனினும் இதற்கும் ஒரு குறையுண்டு போலும்! இதன் குறையை உடனே போக்குதல் கட'னெனக் கருத்திற்கொண்டு, "ஏ முல்லையே! நின் குறையை எமக்குணர்த்தும் பெற்றி நினக்கில்லாவிடினும், நேரிற் கண்ட யாம் இப்போதே நினது குறையினை யொழிக்கின்றேம்; நாத்தழும்பேறப் பாடாத நீயும் இதனைப் பெற்று நின்கவலை தவிர்ந்து செழிப்புறுக" எனக் கூறுவான்போன்று தந்தேரை அதன்கணுள்ள அணிகளோடும் புரவிகளோடும் அக் கொடியினருகே நிறுத்திவிட்டுக் கட்டழகுடைய காமனைப்போலக் கழலடி சிவப்ப நடந்து சென்றனர்.

### இவரைப் பற்றிக் கூறும் பாடல்கள்

க. "சுரும்புண,
நறவுவா யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியும்." (சிறுபாண்-அஎ-கூக)

உ. "முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையுந்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்." (பழமொழி-நூகூக)